www.tamilarangam.net

# சுவடுகள்



## பெண்கள் சிறப்பிதழ்

SP Design

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எஸ். சபாலிங்கம்

தோற்றம்:14.01.1952
மறைவு:01.05.1994



## 365 நாட்கள்

பிரான்ஸ் "ஆசியா வெளியீட்டு நிறுவன"த்தை
நிறுவியவருக்கு; விடைகொடுத்தோம்.
ஈழப்போராட்டத்தின் முதல்பத்திரிகையான "காவலன்"
ஆசிரியருள் ஒருவருக்கு; விடைகொடுத்தோம்.
தமிழ்மக்களின் உரிமைக்காய் இலங்கைசிறையி
இன்னல்பட்டவருக்கு; விடைகொடுத்தோம்.
மனிதஉரிமைமீறல்களுக்கெதிராய் தொடர்ந்து தம்
குரலைகொடுத்தவருக்கு; விடைகொடுத்தோம்.
எதிர்காலதேவையுணர்ந்து தலைசிறந்த ஆவணங்களை
சேகரித்துவைத்தவருக்கு; விடைகொடுத்தோம்.
புகலிடஇலக்கியவளர்ச்சி நீரூற்றி பலநூல்களை
வெளிக்கொணர்ந்தவர்க்கு; விடைகொடுத்தோம்.

புகலிட நாடுகளில் சுதந்திரமாய்
இயங்க இயலாதா? என்பதற்கு; விடையைதேடுவோம்.
மனிதத்தை நேசித்தவர் மண்ணுக்கு
புதைந்து போவது எதற்கென்று? விடையைதேடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

* இந்த இதழுக்கெனப் பெறப்பட்ட சில படைப்புகள் அடுத்த இதழிலும் வரும். றோஸா லக்ஸம்பேர்க் பற்றி யமுனா ராஜேந்திரன் எழுதுகிறார். சாள்ஸின் சிறுகதை, மைத்ரேயியின் செவ்வி என்பன வரும் இதழில் இடம்பெறும்.

* பலரது சந்தாக்கள் - குறிப்பாக வெளிநாட்டு வாசகர்களது - வந்து சேரவில்லை என்பதை அடிக்கடி நினைவுபடுத்த வேண்டி உள்ளது. சுவடுகள் ஒழுங்காகவும், தொடர்ந்தும் வெளிவர வாசகர்களாகிய உங்களது ஆதரவுகள் அவசியம்.

* 'நிறவாதமும் நிலைபெறுதலும்', 'நாடகம்' எனச் சிறப்பிதழ்கள் தொடர உள்ளன. படைப்பாளிகள் வாசகர்களது பங்களிப்பை வேண்டுகிறோம்.

* சுவடுகளுக்கு எழுதும் வாசகர்கள் தங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டெழுத வேண்டுகிறோம். கடிதங்கள் பிரசுரிக்கப்படக் கூடாது எனக் கருதினால் அதுபற்றிக் கடிதத்தில் குறிப்பிடுங்கள்.

* இவ்வருடப் பிற்பகுதியில் சுவடுகள் தனது ஏழாவது ஆண்டை நிறைவு செய்கையில் வெளிவரும் சுவடுகளின் ஆண்டுச் சிறப்பிதழில் வரவுள்ள ஆக்கங்களை இப்போதிருந்தே எதிர்பார்க்கிறோம். சிறப்பிதழுக்கான ஆக்கங்களாயின் அதுபற்றிக் கடிதத்தில் குறிப்பிடுங்கள்.

* சுவடுகளில் வரும் படைப்புகள் பற்றிய உங்கள் கருத்துகளைக் கூறுங்கள். மற்ற வாசகர்களுக்கும் அது தெரியும்படி நாலு வரி எழுதுங்கள்.

SUVADUGAL,
A Tamil monthly from Norway
Estd: Sept'1988

Bank account: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

Editorial Group: Thuruvapalagar

Price: 25NKr

Subscription: 300NKr/ 12 issues

Published by:
Norway Tamil Culturel Centre

Address:
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

சுவடுகள்,
தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி'1988

வங்கிக் கணக்கிலக்கம்: 16075213062
ஸ்பாரபாங்கன்நூர்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோணர்கள்

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்

www.tamilarangam.net

# பீறிடுதல்

மரங்களின் கீழும்
என்பின்னாலும் மட்டுமே இருள் தெரியும் சற்றே;
நிழலாய்.

மெல்ல நகரும் ஓரிரவு.

இன்று செக்கலில் வானத்தால் வழிந்தது
நிலா குளித்த கழிவு நீரோ என்னவோ?
ஊத்தை கழன்று பளிச்சென்றிருந்தது நிலவு.
தன்னைவிட்டுத் தனியே ஓடுகிற
மேகங்கள் பற்றியெல்லாம் அது,
அறவே அலட்டுவதாய்த் தெரியவில்லை எனக்கு.

வெகுதூரத்தே
வானின் எழுவான் பக்கத்துக் கறுத்ததோர் மேகத்தின் பின்னிருந்து
தாவிப் பாய்ந்து மறையும்
நெளிவுக்கோட்டிற்கொப்ப ஓர் மின்னல்.

விரிந்து விசாலமாய்த் தெரிகிற வானப்பரப்பினிலே
ஆயிரக்கணக்கில் வெள்ளிகள் பல்லிளிக்கும்;
அங்கொன்றும் இங்கொன்றுமாய்.
மண்குவியலில் சாறணை விரித்து, மல்லாந்து படுத்து
அவ்வெள்ளிகளை எண்ணிப்பார்த்துவிடத் துள்ளும் மனசு.
முயன்று, பின்
பனியுங் கூதலும் பயமுறுத்த
வீட்டுள் சென்று முடங்குவேன் நான்.

ஒரு கவிதையை ஈனுவதற்கு முந்திய வேதனை
மெல்லெனப் பரவத் தொடங்கும் என்னுள்ளே.

*ஏஎம்.றஸ்மி*
*25.3.94*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### லத்தீனமெரிக்கப் பெண் எழுத்தாளர்

# இஸபெல் அலன்டே:

இஸபெல் அலண்டே இன்று வாழும் ஒரே லத்தீனமெரிக்கப் பெண் எழுத்தாளர்; சிலிநாட்டின் முன்னாள் பிரதமர் சல்வடோர் அலண்டேயின் உறவினர்; 1942ல் பெரு நாட்டின் லிமாவிற் பிறந்து வளர்ந்தவர். சிலியின் வாழ்வும், வரலாறும்தான் தன் வாழ்க்கையை வடிவமைத்ததாகக் கூறுகிறார். இவரது 'மெஜிகல் ரியலிச'க் கதைகள் உலகளவில் பரவலாக வாசிக்கப் படுகின்றன. 1973வரை பத்திரிகையாளராகப் பணிபுரிந்தார். இவரது மாமனான சல்வடோர் அலண்டே 1973ல் ராணுவச் சதி மூலம் தூக்கி எறியப்பட்ட போது புதிய அரசியல் தாக்குதல்களுக்குப் பயந்து வெனிசுலா நகருக்குத் தப்பியோடி அங்கேயே பல வருடங்கள் தங்கியிருந்தார்.

1981ல் 'The house of the spirits' நாவலை வெளியிட்டார். இதுவே அவரது மிக அதிக விற்பனை அடைந்த (Bestseller) நூலாகும். 1987ல் Eva Luna என்ற நாவல் தயாரிப்புப் பிரயாணத்தின் போது சான் பிரான்சிஸ்கோ வழக்கறிஞர் ஒருவரைக் காதலித்துத் திருமணம் புரிந்தார். அமெரிக்காவில் ஆறு ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். கடந்த ஒக்டோபரில் ஜேர்மனியிலும் டிசம்பரில் அமெரிக்காவிலும் இவரது House of spirits சினிமாவாக்கப்பட்டுத் திரையிடப் பட்டது. ஆர்ஜென்டீனாவில் இவரது நாவலான Of love and shadows படமாக்கப்பட்டு வருகிறது. இவரது சொந்த வாழ்க்கை, வரலாற்றால் தீர்மானிக்கப் பட்டது, குறிப்பாகப் பெண்கள் இயக்கத்திற்கு இதில் முக்கிய பங்குண்டு. காப்ரியல் கார்கியா மார்க்யூஸ், ஒக்டோவியா பாஸ், கார்லோஸ் பியூண்டிஸ் மற்றும் மரியோ வார்கோஸ் லோஸா போன்ற லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்கள் அளவு புகழும் மதிப்பும் உள்ள எழுத்தாளர் "எங்கு வாழ்ந்தோமோ அவ்விடத்தின் சூழ்நிலையும் காலமும்தான் எங்களை வடிவமைத்திருக்கிறது. அதை நான் பெரிதாக உணர்கிறேன்" என்கிறார் இவர்.

கலிஃபோர்ணியாவின் வாழ்க்கையும் வரலாறும் சேர்ந்து ஒட்டுமொத்த சந்ததியை எந்தளவு பாதித்தது மற்றும் 1940, 50களில் அமெரிக்கக் கனவுகளில் வாழ்ந்த மக்கள் இன்று எவ்வாறு தங்களின் வேர்களைத் தேடுவதில் இறங்கியுள்ளனர் என்பதைச் சொல்வதும், அமெரிக்காவைப் பற்றியும், அமெரிக்கக் கதாபாத்திரங்களைப் பற்றியும் முதன்முதலாக இவரால்



ISABEL ALLENDE

www.tamilarangam.net

எழுதப்பட்டு வெளிவந்திருப்பதும், இவரது அண்மைக்கால நாவலான The infinite planஇன் சிறப்பம்சமாகும்.

1940களில் லத்தீன் அமெரிக்க நகரொன்றில் சமயப் போதகர் ஒருவர் இறந்து போகவே அவரது மகனான கிறிகோரி ரீவ், தன் தந்தையின் பணியைச் செய்ய வருகிறான். தன் மதப்போதகர் கடமையினூடு வாழ்வு - அன்பு பற்றிய தத்துவ வினாக்களை எழுப்புகிறார். புதிய உலகு, புதிய மொழியின் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்ட ரீவ் அங்கு நிலவும் வன்முறை வேற்றுமை மற்றும் குறிப்பாக லத்தீன் அமெரிக்கக் கலாசாரத்தைப் புரிந்து கொள்கிறான். இறுதியில் காலச் சூழ்நிலையால் குழப்பமடையும் ரீவ் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறான். கிறிகோரிக்கு என்ன நேர்ந்ததோ அதுவே ஒட்டுமொத்த தலைமுறைக்கும் நேர்ந்தது. எந்த 'அமெரிக்கக் கனவை' எதிர்பார்த்தார்களோ அதுவே அவர்களின் இருத்தலை அழித்தது என விவரித்துப் போகிறது நாவல்.

"90களின் காலம் கிறிகோரி போன்றவர்களுடைய காலம். ஒட்டுமொத்த சந்ததிக்கான காலம். மாற்றத்திற்கான காலம். சமுதாயத்தின் உணர்வுகளையும், தங்களின் வேர்களையும் திரும்பப் பெற்ற காலம்" என அலண்டே கூறுகிறார்.

The house of the spirits 'மெஜிகல் றியலிச' முறையில் அரசியலையும் - வரலாற்றையும் இணைத்துச் சிலியின் மூன்று தலைமுறை வாழ்க்கை முறையை விவரிக்கும் நாவலாகும். இவரின் நாவல்களில் வரும் பெரும்பான்மையான கதாபாத்திரங்கள் பெண்களே.

"ஆண் பெண் மற்றும் இனத்தைப் பற்றி நாம் பேசும்போது எனக்கு அவைகளிடையே இருக்கும் வேற்றுமைகளை விட ஒற்றுமைகளே அதிகம் இருப்பதாகத் தோன்றுகிறது."

"நாம் அனைவரும் ஒத்து உணர்வுகளால் தூண்டப்படும் மனிதர்கள்தானே" - இஸபெல் அலண்டே.

**ஆங்கிலத்தில் அநிதா ஸ்நோ, தமிழில் ஜே.கே.**

---

## ஆபிரிக்க அமெரிக்கப் பெண் எழுத்தாளர்

*கோபப்படுவது மிகவும் சிறந்தது - மாயா ஆஞ்சலூவ்*

ஆபிரிக்க அமெரிக்க எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர்களில் மாயா அஞ்சலூவ் என்ற பெண் எழுத்தாளர் ஒருவர். அமெரிக்காவில் மிசௌரி மாவட்டத்தில், புனித லூயிஸ் என்ற இடத்தில் 1928ல் பிறந்தார். 'மனிதக் குரலின் சத்தத்தை நான் மிகவும் விரும்புகிறேன்' என்று கூறும் அவர் ஆபிரிக்க அமெரிக்க எழுத்தாளர் விருதைப் பெற்றவர். ஆனால் யாருடனும் பேசக் கூடாது எனச் சபதமெடுத்து ஐந்து வருடம் மௌனமாக இருந்தார். காரணம் தான் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டதாக அவர் நினைத்தார். தனது ஏழாவது வயதில் தன் தாயார் நண்பர்களில் ஒருவரால் அவமானப் படுத்தப்பட்டதால் அவர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். மறுநாளே விடுதலையான அவர் யாரோ ஒருவரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறார், தன்னால் தானே அவர் இறந்தார் என்ற மனவேதனையில் ஐந்து வருடம் யாருடனும் பேசாமல் இருந்தார். மொழியை மிகவும் காதலித்தவர்.

'என் குரல் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டது என நினைக்கிறேன். நான் விரும்பும் மனிதர்களைக் கூடக் கொன்றுவிடும். இது மிகவும் ஆபத்துத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



MAYA ANGELOU

தானே என் சக மனிதர்களுக்கும். எனவே என் குரலை நானே கொன்று கொண்டேன், நான் பேசுவதை நிறுத்திக் கொண்டேன். இந்த வன்முறைச் செயலை நான் நிறுத்த விரும்பவில்லை. செய்யக் கூடாதவற்றை மனிதர்கள் செய்யத் தூண்டுவது எது, அவர்களைத் துயரத்தில் வீழ்த்துவது எது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதிலிருந்து நான் மீண்டுவிட்டேனா என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் அதன் வெறுப்பை நான் சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை. நான் குற்றம் புரிந்தவள்கூட இல்லை".

தானும் தன் தாய் தந்தையரும் நிறவெறியால் பாதிக்கப்பட்டது அவரிடத்தில் சிந்தனை ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனிடையே அவர் தன் அனுபவங்களை செறித்து உள்வாங்கிக் கொண்டதின் விளைவாகவே படைப்பாளியாக வளர முடிந்திருக்கிறது. "கோபப்படுவது மிகவும் சிறந்தது, காரணம் கொடுமைகளை எரித்து அவைகள் இப்பூமிக்கு வளமையைச் சேர்க்கின்றன. கொடுமைகளுக்கும், அநீதிக்கும் எதிராக எப்போதும் கோபப்பட வேண்டும். துன்பம் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்றுவிடும்" என்று விளக்குகிறார்.

கொஞ்சக் காலம் கெய்ரோவில் Arab Observer என்ற தினசரிக்கு ஆசிரியராக இருந்தார். பிறகு தன் குடும்ப மூதாதையர்களைப் பற்றி அறிந்துகொள்ள ஆபிரிக்காவின் கானா நாட்டிற்குச் சென்றார். கானாவில் இருந்தபோதுகூட சோகமான அனுபவங்களே அவருக்குக் கிடைத்தன. இருப்பினும் மனம் தளரவில்லை. "ஆபிரிக்க - அமெரிக்க வாதம் (Afro - Americanism) போன்ற கருத்துகளின் அடிப்படைகளை நான் இங்குதான் கண்டேன். பேச்சுமுறை, அணுகும் முறை, பிறரை நடத்தும் விதம் போன்றவற்றின் ஆதாரங்கள் இன்னும் இங்கு காணப்படுகின்றன. நாங்கள் (black americans [illegible]) அடிமைவாதம் போன்றவற்றின் மூலமாக எங்கள் கலாச்சாரத்தைக் கொண்டிருப்பதை நான் உணர்கிறேன். இது பிரச்சினை இல்லையென்றாலும்கூட இதைக் கண்டறியும் போது நான் அடைந்த அனுபவங்கள் மிகவும் புதிரானவையாகும்" என்று தன் அனுபவத்தைக் கூறுகிறார்.

"Wouldn't take nothing for my journey now" என்ற இவரின் சம்பத்திய நாவல் அடிப்படை மனித மதிப்புகளைப் பற்றிப் பேசுவதாகும். இதில் ஒரு பெண், தான் பெண்ணாக இருப்பதற்கான அர்த்தத்தை விவரித்துள்ளார். பெண்ணியத்தைப் (feminism) பற்றிக் கூறுகையில் "பெண்மைவாதம் (womanism) பற்றிக் கேளுங்கள். கூறுகிறேன். அதைப்பற்றித்தான் எனக்குத் தெரியும். பெண்ணியம் பற்றித் தெரியாது. சிலவேளையில் பெண்ணியவாதம் வரவேற்கத் தக்கதாக இல்லை" என்கிறார்.

உங்களது இந்த அசாதாரண வாழ்க்கையில் ஏதேனும் வருத்தங்கள் ஏற்பட்டதுண்டா?

"Regrets are waste of time"

ஆங்கிலத்தில் குளோரியா ஒகுன்படிஜோ, தமிழில் ஞானம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விலங்குகளின் தோழி

## நிலமகள்



உலகில் சுற்றுப்புறச் சூழல் அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகும்போதும் சரி, மனிதர்களது மாத்திரமன்றி, விலங்குகளதும் உரிமைகள் மீறப்படும் போதும் சரி, குரல் கொடுப்பவர்கள் பெரும்பாலும் பெண்கள்தான். உலகில் பல உயிரினங்கள் அழிந்துபோகும் கவலை பல விலங்குரிமையாளர்களுக்குக் கவலை தருவது. இவர்களில் பிரான்சின் புகழ்பெற்ற நடிகை பிரிஜிற்ற பாடோ (Brigitte Bardot) முக்கியமானவர். இவர் அண்மையில் நோர்வேயின் திமிங்கில வேட்டையை நிறுத்தக் கோரிப் பிரான்சின் தலைநகர் பாரிசில், நோர்வேஜியத் தூதரகத்தின் முன் பெரும் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தினார். இவரைத் தலைவியாகக் கொண்ட விலங்குரிமை அமைப்பு இந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தியது. நோர்வேயின் அண்மைக் காலத் திமிங்கிலப் பிடிப்புப் பற்றிய தகவல்கள் திடுக்கிட வைப்பவை. கணனியின் உதவியுடன் கணிக்கப்பட்ட திமிங்கிலங்களின் தொகையை விடக் குறைவாகவே வடகடலில் திமிங்கிலங்கள் உள்ளன என்று அண்மையில் தெரியவந்தது. அதாவது, திமிங்கிலங்களின் எண்ணிக்கை ஆபத்தான கட்டத்தைத் தாண்டவில்லை என நோர்வே இதுவரை கூறிய சமாதானங்கள் அடிப்படையில் ஆதாரமற்றவை. திமிங்கில வேட்டை என்ன காரணங்களையாவது கண்டுபிடித்துத் தொடரும் என்பதுதான் நோர்வேயின் நிலை.

---



# ஒஸ்லோ வீதிகளில்.....!

– சிவன் –

இதுவரை காலம் ஆண்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த ஒஸ்லோ பொலிஸ் நிலையம் கடந்த வருடம் முதற் தடவையாக ஒரு பெண்ணால் நிர்வகிக்கப்படத் தொடங்கியது. கடந்த செப்டம்பர் மாத நடுப்பகுதி முதல் பதவியைப் பொறுப்பெடுத்துக் கொண்ட இங்லின் ஷில்லங்ரேன் (Ingelin Killengreen) இதற்கு முன்னர் நீதி அமைச்சில் உயர்பதவி ஒன்றில் இருந்தவர்.

www.tamilarangam.net



# தஸ்லிமாவுக்குச் செங்கம்பளவிரிப்பு மரியம் அஸீமிக்கு தஞ்ச மறுப்பு

இஸ்லாமிய நாடுகளில் பெரும்பாலும் பெண்களின் நிலை மோசமானது. அதிலும் பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்களது நிலை உயிராபத்து நிறைந்தது. அவ்வாறான ஒருவரது அரசியற் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டுள்ளது அண்மைக் காலங்களில் நோர்வே அரசியல் மட்டங்களில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் பெண்கள் அமைப்பு ஒன்றில் முக்கிய இடம் வகித்த மரியம் அஸீமி என்பவரது அரசியற் தஞ்ச விண்ணப்பம் வடந்த வருடம் நிராகரிக்கப் பட்டது. அவரது சகோதரி ஏற்கனவே நோர்வேயில் வசிக்கிறார். மரியம் அஸீமி, பாகிஸ்தானில் இடம்பெயர்ந்து வாழும் ஆப்கானிஸ்தானியப் பெண்களது உரிமைகளுக்காகப் போராடும் அமைப்பு ஒன்றில் தீவிரமாக ஈடுபட்டவர். ஆர்ப்பாட்டங்களில் முன்வரிசையில் நின்றவர். அவரது சகோதரியான பரிதா அஹ்மதியும் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்.

நோர்வேயில் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ள வந்திருந்த மரியம் அஸீமி, தான் வாழும் இடத்தில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கருதியதால், நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரினார். தஞ்சம் பல்வேறு காரணங்களைக் காட்டி மறுக்கப் பட்டது. ஆனால் மறுக்கப் படுவதற்கான காரணங்கள் வலுவற்றவை என நிரூபிக்கப்பட்ட பின்னரும் அவருக்கு வதிவி அனுமதி வழங்கப்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் இருந்து பல லட்சம் அகதிகள் இடம்பெயர்ந்து அயல் நாடுகளில் வசிக்கின்றனர். இவர்களிடையே பெண்களின் நிலையை மேம்படுத்தப் போராடிய பலரும் அடங்குவர். பெண்கள் தமது உரிமைகளுக்கான குரலை உயர்த்தும் போதெல்லாம் அவர்கள் தமது உயிருக்கு ஆபத்தை எதிர்கொண்டனர். பல மிரட்டல்கள் விடப்பட்டன. தமது குழுக்களில் இணைந்து பணிபுரிவதால் உயிராபத்து ஏற்படுவதைக் கண்டஞ்சிய சில பெண்கள், வெளிநாட்டுக் குழுக்களுடன் இணைந்து பணிபுரிந்தனர். அவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படும் என்று சுவரொட்டிகள் ஒட்டப் பட்டன. இவ்வாறு பணிபுரிந்த இரு பெண்கள் பெஷாவர் பகுதியில் 1989ல் கொல்லப் பட்டனர். குனார் பகுதியில் ஆப்கான் படைப்பிரிவு ஒன்றால் ஏராளம் பெண்கள் கைது செய்யப் பட்டனர். இவர்கள் பின்னர் அராபிய ஷேக்குகளுக்கும், பாகிஸ்தானின் விபச்சாரப் பகுதிகளுக்கும் விற்கப் பட்டனர். இவர்களது நிலை பற்றி பாகிஸ்தானில் இருந்த ஆப்கான் கெரில்லாத் தலைவர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. மரியம் அஸீமியே இதுபற்றிப் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தார். அதே வருடம் குவேற்றா பகுதியில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் இதுபற்றி அவர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

பொதுவாகவே பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் ஆப்கான் கெரில்லாக் குழுக்களாலும், மத அடிப்படை வாதிகளாலும் ஆபத்தை எதிர்நோக்கினர். மரியம் அஸீமியும், அவரது சகோதரி ஃபரீதா அஹமதியும்

www.tamilarangam.net

அங்கம் வகித்த 'றாவா' (RAWA) என்ற அமைப்பின் முன்னணி உறுப்பினரான கெஷ்வார் கெமால் என்ற பெண் 1987ல் கொல்லப் பட்டார். கெமாலின் கொலைக்குக் காரணமானோர் சட்டத்தின் முற் நிறுத்தப்பட வேண்டும் என்று மரியம் அஸீமியும் ஏனையோரும் போராடினர். எதுவித பயனும் கிடைக்கவில்லை. ∴பரீதா அஹமதி 1989ல் சிறையில் அடைக்கப் பட்டார். அப்போதும் மரியம் அஸீமி முன்னணியில் நின்று போராடினார்.

மரியம் அஸீமியின் தொடர்ச்சியான போராட்டங்கள் அவரது உயிருக்கு எக்கணமும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய நிலையைத் தோற்றுவித்திருந்தன. இந்நிலையிலேயே அவர் நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரினார். ஆனால் அவரது கோரிக்கை நிராகரிக்கப் பட்டது. அவருடன் இணைந்து போராடிய பல பெண்கள் இப்போது வேறு நாடுகளில் அகதிகளாய் வாழ்கின்றனர். வேறு சிலர் தலைமறைவாகி உள்ளனர். இன்னும் சிலர் சிறைகளில். வேறு சில பெண்கள் தமது ஆபத்தை உணர்ந்து தமது போராட்டங்களில் இருந்து பின்வாங்கியுள்ளனர்.

அஸீமியின் அரசியற் தஞ்சக் கோரிக்கையை நிராகரித்த இதே அரசுதான், தஸ்லிமா நஸ்ரீனுக்கு, அவர் பங்களாதேஷில் இருந்தபோதே அரசியற் தஞ்சம் வழங்கி அவரை இங்கு வரவழைக்க முயன்றது. (நோர்வேயும், சுவீடனும் மாத்திரமே அவ்வாறு முயற்சி செய்தன. இறுதியில் அவர் இரகசியமாக சுவீடனுக்கு வந்து சேர்ந்தார்.) தஸ்லிமாவின் பாதுகாப்பிற்கு நோர்வே முயற்சி செய்தமைக்கு முக்கிய காரணம் இங்குள்ள எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களது தொடர்ச்சியான அழுத்தங்களே. இப்போதும் அஸீமியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவருக்கு அரசியற் தஞ்சம் வழங்குமாறு எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் போராடி வருகின்றனர்.

முதற் தடவை அஸீமியின் அரசியற் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டபோது, அவர் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப் படலாம் என்ற அச்சம் காரணமாகத் தலைமறைவாகவே வாழ்ந்தார். இப்போது அவரது மேன்முறையீட்டு முடிவுகள் வரும்வரை அவர் சுதந்திரமாகத் திரிய அனுமதி வழங்கப் பட்டுள்ளது. பொது அபிப்பிராயத்துக்கு அரசு செவிசாய்க்குமா அல்லது தனது தவறான முடிவில் உறுதியாக இருக்குமா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.

●

**தேவி**

# பண்டமாற்று

## பார்கவி

*கோர்த்து வைத்த மணிகளைப் போல்*
*நாற்புறமும் மலைத்தொடர்கள்.*
*வெண்பனியை உருகவிட்டு புன்னகைக்கும்*
*செம்மஞ்சள் நிற கதிரவன்.*

*கோடைகால வருகைக்காக காத்திருக்கும்*
*பனிபடர்ந்த வெண் நிலங்கள்*
*மொட்டுவிட எதிர்பார்த்திருக்கும் இலை*
*உதிர்ந்த சிறு செடிகள்.*

*தீண்டாமல் தீண்டுகின்ற இன்பசுக*
*இளந்தென்றல்.*
*மழலைகள் விளையாட மரத்தடியில்*
*நிற்கின்ற தாய்மார்கள்.*

*ஓ— இளவேனில்காலம் இது!*

*இயற்கையை நகைக்க வைக்கும்*
*இயந்திரமாக நான்*
*வாழ்வை விற்று வாழ்வை*
*வாங்கித்தர*
*பணத்திற்காய் அலைகின்றேன்.*

*ஆம்— ஈழத்துத் தங்கைக்கோர்*
*கணவனை வாங்கித்தர.*

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந.ஆனந்தி

# இன்னும் ஓர் இரவல் விடுதலை!



பெண்கள் விடுதலை என்று கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக ஈழத் தமிழர்கள் பேசிக் கொள்கிறார்கள். சிலர் தேசிய விடுதலையையும் பெண் விடுதலையையும் பிரித்துப் பார்க்க வேண்டாம் என்கிறார்கள். வேறு சிலர் சமூக விடுதலையின் ஓரங்கமே பெண்கள் விடுதலை என்பதால், சமூகம் முற்றாக விடுதலை அடையும்வரை பெண்கள் பிரச்சனைகள் இருந்தே தீரும் என்கிறார்கள். இந்தச் சந்தடிகளுக்கிடையில் பெண்கள் முன்னெப்போதும் இல்லாத துயரங்களையும் சேர்த்துச் சுமக்கப் பழக்கப் படுகிறார்கள்.

ஆக மொத்தத்தில் பெண்கள் விடுதலை என்பது இத்தனை வருடக் கதைத்தலுக்குப் பிறகும் பெண்களுக்கு மட்டுமன்றி, ஆண்களுக்கும் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாய் ஆகிவிட்டது போல் தெரிகிறது.

பெண் விடுதலை என்றால் என்ன என்பது பற்றியும் நூற்றுக் கணக்கான விளக்கங்கள். இவற்றில் ஒன்றுக்கொன்று முரணானவையும் உள்ளன. ஒரு பெண் தனக்கு விதிக்கப்பட்டுள்ள விலங்குகள் அனைத்தையும் உடைத்தெறிவது எனச் சுருக்கமாக இதைக் கூறலாம் என்றாலும், எவை பெண்களின் விலங்குகள் என்பதில்கூட ஆளுக்காள் மாறுபட்ட அபிப்பிராயங்கள். சீதனம் ஒரு விலங்கு எனச் சிலரால் கூறப்படுகிறது. ஆனால் சீதனம் பெண்ணின் விலங்காக மாத்திரமன்றி, முழுத் தமிழ்ச் சமூகத்தின் விலங்காகவும் அல்லவா உள்ளது. சீதனம் வாங்கித் திருமணம் செய்வது இன்றும் கௌரவமாகவே கருதப் படுகிறது. ஒரேயொரு வேறுபாடு என்னவெனில், சீதனத்தின் தொகை வேறுநாட்டு நாணயங்களில் கூறப்படுவது மாத்திரம்தான்.

பெண்களின் கல்வி வாய்ப்புகள் பற்றிக் கூறுவதெனிலும் பலர், இலங்கையில் இரு பாலார்க்கும் சம வாய்ப்புகள் உள்ளதாகக் கூறித் திருப்தி அடைந்துகொள்வர். வேலை விடயத்திலும் இப்படித்தான். பொதுவாக எல்லா வேலைகளிலும் இப்போது பெண்கள் இருக்கிறார்கள் எனக் கூறி நிலைமையைச் சரியானதாகக் காட்ட முயலும் சிலர் வேலைகளில் இருக்கும் வேறுபாடுகள், அங்கு நிலவும் பாலியல் நோக்கிலான துன்புறுத்தல்கள், சம்பளத்தில் இருக்கும் அடிப்படை வேறுபாடுகள் என்பன பற்றி இலகுவில் மறந்து விடுகிறார்கள்.

www.tamilarangam.net

குடும்பத்தில் பெண்ணின் நிலை பற்றி மிக மோசமான கற்பிதங்கள் நிகழ்காலத்தில் உலா வருகின்றன. பெண்ணின் (தாயின்) அரவணைப்பு, வளர்த்தெடுப்பு பிள்ளைக்குத் தேவை. எனவே பிள்ளை வளர்த்தெடுப்பில் தாய் முக்கிய பங்கெடுக்க வேண்டும் எனவும் சிலர் கருத்துக் கூறுகின்றனர். பிள்ளை வளர்ப்பு பெண்ணுக்கான சுமையாகத் திணிக்கப் படாமல் இந்தப் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்பது பற்றி இவர்கள் எவரும் கதைப்பதில்லை.

பெண்களின் பிரச்சனைகள் அதிகமாக விளங்கப்பட முடியாமல் இருப்பதில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றன முக்கிய பங்கு வகிக்கின்றன. பெண்களின் பிரச்சனைகள் சமுதாயத்தின் ஒவ்வோர் இயக்கத்திலும் உள்ளன. வெளித் தெரிகின்ற பிரச்சனைகளுக்கு ஊடாக வேறு பல பிரச்சனைகள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுகின்றன. எந்தப் பத்திரிகைக் காரரையும் கேட்பின், பெண்கள் பிரச்சனை பற்றி வரிசையாக எழுதித் தள்ளுவார்கள். ஆனால் இவர்கள் கூறுவது மாத்திரம்தான் பெண்களது பிரச்சனைகளா? பெண்களால் பகிரங்கமாகக் கூற அல்லது விவாதிக்க முடியாத பிரச்சனைகள் பற்றி இந்தப் பத்திரிகைக் காரருக்கு யார் சொல்வது? பெண்களது பிரச்சனைகள் இவ்வளவுதான் எனக் காட்ட முனைவதால், இவர்கள் பெண் விடுதலைக்கான தடைக் கற்களாகவே செயற் படுகிறார்கள் எனக் கருதுகிறேன். உண்மையான பெண்களது பிரச்சனைகளில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் எவ்வளவு தூரம் பங்காற்ற முடியும் அல்லது பெண்களது விடிவில் எவ்வளவு தூரம் இவர்களால் உதவ முடியும் என்பது நீண்ட காலமாகவே எவராலும் கேட்கப் படாத கேள்வி.

பெண்களது போராட்டங்கள் காலம் காலமாக வேறு காரணங்களைச் சாட்டி முறியடிக்கப் பட்டே வந்திருக்கின்றன. அதிலும் பொதுவாகப் பெண்கள் தனியாட்களாகத் தமது பிரச்சனைகளை எதிர்கொண்டு போராட முனைகையில், அந்தக் குறித்த பெண், சமூகத்தில் இருந்து விலக்கி வைக்கப்படும் அபாயங்களைச் சந்திக்கின்றாள். இது பல நூற்றாண்டுகளாக எல்லாச் சமூகத்திலும் நிகழ்ந்து வருகிறது, தமிழ்ச் சமூகம் இதற்கு விலக்கல்ல.

பெண்கள் பிரச்சனைகள் பெண்களாலேயே தீர்க்கப்பட வேண்டும்; அதற்கு ஆண்கள்

## பதிலீடு

இரண்டு துப்பாக்கிகள்
மாடிப்படியேறி
என் வாயிலைத் தட்டின.

சன்னல் இடுக்கால் எட்டிப் பார்த்தேன்
இரண்டு துப்பாக்கிகள்
மரணப் பசியுடன்
வாயிலைத் தட்டின.

உயிராசை துரத்த
ஓடினேன் பின்கதவால்
உயிர் என் கைப்பிடியில்.

மனைவி தாழ் நீக்க
தள்ளித் திறந்தன துப்பாக்கிகள்
"அப்பா இல்லை" என்றான் மகன்
"நீ இருக்கிறாய்தானே வாடா வெளியே"
துப்பாக்கிகள் அவனைக் கவ்விச் சென்றன.

என் இளம் தளிர்
என் விந்தில் விளைந்த குருத்து
இளங்காலையில்
தெருவோரம்
இரத்தம் உறைந்த தரையில் கிடந்தது
கருகி.

*எம்.ஏ.நு:.மான்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்விழக்கும் வார்த்தைகள் புதைந்தாலென்ன...?

பானுபாரதி



படர்ந்த நீர்த்தேக்கத்தில்
படிந்து கிடக்கும்
பனிப் பாளத்துள்
புதைந்துபோன
உன் வார்த்தைகள்

மீட்பாரற்று
வார்த்தைகள்
உன்னைப் போல்
இன்னொரு அகதியாய்

மீட்பென்ற உன்னை
மீட்பதற்கு யாரோ போல்
மீட்குமென்றுதிர்ந்த
உனது
வார்த்தைகளை மீட்பதற்கும்
யாரேனும் வரக்கூடும்
என்ற எதிர்பார்ப்பா.....?

தவிட்டு றொட்டித் துண்டுகளை
கொத்தி புறந்தள்ளிச் செல்லும்
பனிப்புலப் புறாக்களின்
ரோஷத்தைக்கூட
உனது வார்த்தைகள்
எட்டிவிட முடியாமல்
தோற்றோடுகின்றன.

எங்கிருந்து தொடங்கியது
எங்குகொண்டு முடிப்பதென்பது
தெரியாமற்போன வார்த்தைகள்
எந்த சுதந்திரதேசத்திலும்
வாழ்தற்குரியனவல்ல.

போ!
இரவிரவாய் கணம் கிடையாமல்
மூர்க்கமாய் உதிர்ந்து
தெருக்கள் மூடிய
பனிப்படர்களை வழித்தெறியும்
யந்திரங்களிடையே
உனது வார்த்தைகளையும்
கொண்டுபோய்க் காடாத்து.
முடிந்தால்
அதில்
நீயும் குதித்துக்கொள்

சுதந்திரமான,
சுதந்திரத்தின்பால்
தொடுக்கப்படும் சமரின் மீதான,
வெல்தலின் பெயரால் கொள்ளும்
நம்பிக்கை மீதான
வார்த்தைகள் மட்டும்
இங்கே வாழட்டுமுயிரெமக்குள்.

உதவலாமேயன்றி, ஆண்களால் பெண்களது விடுதலையை ஈட்டித் தரவோ உத்தரவாதம் செய்யவோ முடியாது. ஆனால் இங்கு நிகழ்வதென்ன? அறிவுக்கெட்டிய வரையில் அரசு என்கிற சாதனம் ஆண்களின் கையில்தான் இருக்கிறது. அதைவிட, நவீன உலகில் மிகவும் பலம் வாய்ந்த தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் ஆண்களால், ஆண்களுக்காக வடிவமைக்கப்பட்டுச் சீர்செய்யப் பட்டுள்ளன. இவர்களால் பெண்களது பிரச்சனைகளை எப்படி முற்றிலும் சரியாகப் பார்க்க முடியும்? இவர்களது பார்வையில் ஏற்படும் கோணல்கள் அனைத்தும் பெண்களது உரிமைக் குரலை நாசம் செய்யாதா?

ஐரோப்பாவில் வெளிவரும் பத்திரிகை ஒன்று அண்மையில் ஒரு பெண்ணிலைவாதியைப் பற்றிக் கிண்டல் செய்திருந்தது. அந்தக் குறிப்பிட்ட பெண்ணிலைவாதியிடம் ஒரு சிநேகிதி தனது குடும்பப் பிரச்சனைக்கு ஆலோசனை கேட்கச் செல்ல, அதற்கு அந்தப் பெண்ணிலைவாதி 'பிரச்சனை என்றால் விவாகரத்து எடுப்பதுதானே?' என்றாராம். இதனைக் கூறி அந்தப் பத்திரிகையில் வாராந்தம் எழுதும் ஒருவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நக்கல் அடித்திருந்தார். இங்குதான் ஒரு பெண்ணின் நிலையையும், அதனை விளங்க முடியாத ஒரு பத்திரிகை எழுத்தாளரின் நிலையையும் தெளிவாய்க் காண முடிகிறது. பெண்களுக்குக் குடும்பம் ஒரு சிறை என்கிற உணர்வு மாத்திரமே ஏற்படும்போது அதனை உடைக்க எந்தத் தயக்கமும் ஏற்படப் போவதில்லை, தேவையுமில்லை. சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு கலாச்சாரத்தின் (ஒருவனுக்கு ஒருத்தி என எழுத்திலும், பலர் என நடைமுறையிலும்) மத்தியில் குடும்பம் என்பது பெண்ணைச் சிறையில் இடுகிற ஒன்றாகவே உள்ளது. பெண்கள் எதைச் செய்தாலும் அது, குடும்பம் என்கிற அமைப்பைக் கட்டிக் காப்பதாகவே இருக்க வேண்டும் என்றுதான் இவர்கள் கருதுகிறார்கள் போலும்.

விவாகரத்து, ஒரு குடும்பப் பிரச்சனைக்கு உடனடித் தீர்வல்லத்தான். ஆனால், பெரும்பாலான குடும்பங்களில் விவாகரத்துக்கான காரணங்களாக ஆண்களே இருப்பதும், பெண்கள் விவாகரத்துக்குத் தள்ளப்படும் நிலையிலிருப்பதும் கண்கூடு. இந்த நிலையில் இத்தனை காலம் பொறுத்தது போன்று இனியும் ஒருமாதிரிச் சமாளித்துக் குடும்பங்களைக் காப்பாற்றுங்கள்

என்பதுதான் பெரும்பாலான, பெண்ணிலைவாதம் பேசும் ஆண்களின் நிலைப்பாடு. குடும்பம் இப்போதுள்ள நிலையில் பெண்களைப் பாதிப்பதையே தனது முக்கிய நடவடிக்கையாகக் கொண்டிருக்கிறது. எவ்வாறு ஒரு பெரும்பான்மை, திட்டமிட்ட முறையில் சிறுபான்மையை அடக்கியாள முயல்கிறதோ அதே வகையில் இதனையும் பார்க்கலாம். அந்த அடக்குமுறைக்குத் தனிநாடு தீர்வாகலாம் எனில் இந்த ஒடுக்குமுறைக்கு ஏன் தனிவாழ்வு தீர்வாகாது? அடக்குமுறையாளர்கள்தான் பிரச்சனைக்குத் தீர்வு முன்வைப்பது அவசியம் என்ற வகையில் இந்தப் பிரச்சனைகளைச் சரியான தீர்வில் நிறுத்துவது ஆண்களது கடமை அல்லவா? அந்தக் கடமை வீரர்கள் எங்கே?

பெண்களது விடுதலை பற்றி அனேகமான கவிஞர்களும், எழுத்தாளர்களும் பாடிக் களைத்து விட்டார்கள். இவர்களும் அடிப்படையில் பெரும்பான்மையாக ஆண்களே. ஏன் பெண்களது படைப்புகள் முக்கியம் பெறாமல் போகின்றன. உண்மையாகப் பெண்களது விடுதலையை இந்தப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆதரிப்பதாக இருப்பின் பெண்களையும் அல்லவா தமது ஆசிரியப் பீடத்தில் இருத்தவேண்டும். அவ்வாறு அமர்த்தும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் எத்தனை? ஒரு பக்கம் பெண்களின் விடுதலையைப் பற்றிக் கட்டுரைகள், கவிதைகள்; இன்னொரு பக்கத்தில் பெண்களது நிலையை இன்னும் மோசமாக்கும் தமிழ்த் திரைப்படங்களின் அங்குல அங்குலமான விமர்சனங்கள், அந்த நடிகை இந்த நடிகருடன் தொடர்பு போன்ற கேவலமான செய்திகள்; அரைகுறை ஆடைகளுடனான பெண்களின், நடிகைகளின் படங்கள் - இப்படித்தானே பெரும்பாலான பத்திரிகைகள், சஞ்சிகைகள் இயங்குகின்றன? இவற்றில் இருந்து மாறுபடும் ஒருசில பத்திரிகைகள் சஞ்சிகைகள் இல்லாமலில்லை. ஆனால் பெண்களது பிரச்சனைகள் அனேக சந்தர்ப்பங்களில் ஏனைய பல அம்சங்களைப் போல ஒரு வியாபார உத்தியாகவே அதிகமாகப் பயன்படுகின்றன. மங்கையர் மஞ்சரி போன்ற பெயர்களில் வடை சுடுவது எப்படி, பாயசம் செய்வது எப்படி என்று பெண்களைக் குறிவைத்த சமையற் குறிப்புகளும் பல பத்திரிகைகள் சஞ்சிகைகளது நிரந்தர அம்சம். இவர்களே

www.tamilarangam.net

பெண் விடுதலை பற்றியும் கட்டுரை, கவிதை பிரசுரிப்பது இந்த உலகின் முதற்தர மோசடி என்றே கூறவேண்டும்.

இவ்வாறு பல விதங்களில் - பெண்களது உரிமைகள் களவாடப் பட்டிருப்பது மட்டுமன்றி - பெண்களது குரல்கள் கொச்சைப்படுத்தப் படுகின்றன. இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம், பெண்களது உரிமைகளுக்காகத் தாங்களே போராடுவதாகப் பல 'முற்போக்குவாதிகள்', 'தேசியவாதிகள்', 'எழுத்தாளர்கள்' நினைத்துக் கொண்டிருப்பதுதான். இவர்களைப் பார்த்துச் சிரிப்பதா அழுவதா? அல்லது இவர்களது இரவல் விடுதலைக்காகப் பெண்கள் காத்திருப்பதா?

பெண்கள் தம்மை உறுதியான அமைப்புகளாகக் கட்டி எழுப்பாதவரை இந்த வரலாற்று மோசடிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இவர்களது கையில் கொடுக்கப்பட்ட காலத்தை மீட்டெடுப்பதே இன்றைய பெண்களது கடமை.

## ஒரு மடல்



என் பிரியமானவளே

தேடிக்கொண்டிருப்பது
வாழ்க்கையை அல்ல
அதன் அர்த்தத்தை.

விழுந்து எழுந்த
புழுதி கிளறி
மூச்சிரைத்தோடும்
பந்தயக் குதிரையைப் போல்
நானுந்தான்.

நீ மட்டும்
இன்னுமேன் இருட்டிற்குள்
வெளியே வா
வெளிச்சத்தைக் காண்.

எழுந்து வா...

பாட்டியும் பூட்டியுமுனது
பாட்டனுக்கும் பூட்டனுக்கும்
வெத்திலை மடித்துக் கொடுப்பதற்காகவே
வாழ்ந்தார்களாம்.

வேண்டாம்,
அந்தச் சராசரி வாழ்க்கைக்குள்
நீயும் சமாதியாக வேண்டாம்.

உன்முன் அவிழ்ந்து கிடக்கும்
உனக்காய் அல்லாத
உனது வாழ்வை
அள்ளி முடிந்து
உனதாக்கிக் கொள்.

**வேலணையூர் நவமகன்**

www.tamilarangam.net

# தமிழீழ - தமிழக மக்கள் உறவு வளரட்டும்!

## உலகளவில் புலம் பெயர்ந்த தமிழீழ அகதிகளே!
## உலக மக்களுடன் ஒன்றுபடுவோம்!

இலங்கையில், ஸ்ரீலங்கா சிங்கள பேரினவாத அரசும், வல்லரசியங்களும் தமிழீழ மக்கள் மீது தேசிய ஒடுக்குமுறையை, ஒடுக்குமுறையுத்தத்தை நடத்தி வருகின்றனர். 1948-க்கு பிந்திய புதிய காலனிய வரலாற்றின் பெரும்பகுதி, சிங்கள [redacted]பௌத்த பேரினவாதத்தின் தமிழர் உரிமைபறிப்பு. இனக்கலவரம், பிரதேச ஆக்கிரமிப்பு, இனப்படுகொலை என இன ஒடுக்குமுறையும் — அதற்கெதிரான தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தாலும் எழுதப்பட்டுள்ளது. அன்று முதல் இன்றுவரை ஸ்ரீலங்கா அரசின் கொலை வெறிக்கு தப்பிய தமிழீழ மக்கள் தாய் மண்ணிழந்து, உற்றார் உறவினரை இழந்து, பிரிந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ''உயிர் பாதுகாப்பு'' என்பதற்காக உலகளவில் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர்.

1983-க்கு முன் நடந்த இனக்கலவரம், இனப்படுகொலைகளில் அகதிகளான தமிழர்கள் ஸ்ரீலங்காவிலிருந்து தமிழீழம் நோக்கி வந்தனர். ஆனால் 83-ல் நாடு தழுவியளவில் நடந்த 'கறுப்பு யூலை படுகொலை' தமிழீழ மக்களை உலகின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் தப்பியோட தூண்டியது. உலக மக்களும், நிராதரவான மக்களை கைநீட்டி வரவேற்றனர். தாய் மண்ணைவிட்டு வெளியேறிய அகதிகளில் 90% பேர், மொழி, இன உணர்வால் ஆர்ப்பரித்துநின்ற, மனிதாபிமான சனநாயகஎண்ணங்களால் ஆதரவுக்கரம் கொடுத்த அண்டை நாடான தமிழகத்துள் நுழைந்தனர், இவர்களிலும் 75% மக்கள் சமூக ரீதியிலும், பொருளியல் ரீதியிலும் பின் தங்கியவர்களான விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் அரசு ஊழியர்களாக இருந்தனர்.

அன்றைய நிலையில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை இந்திய மத்திய மாநில அரசுகளும் ஆளும் வர்க்கங்களும் கூட தமது பிராந்திய, ஆட்சி அதிகார விஸ்தரிப்பு நோக்கங்களிலிருந்து ஆதரித்தனர்.

விடுதலை இயக்கங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும், தங்கும்இடம், பணம், ஆயுதம், போக்குவரத்து வசதி என எல்லா மட்டத்திலும் உதவியது. அதனால் தமிழகத்திலிருந்த அகதி முகாம்களிலும் இயக்கங்களின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அரசின் எழுதப்படாத அனுமதி இருந்தது. அப்போது அகதிகளின் வெளிநடமாட்டத்துக்கு சுதந்திரம் இருந்தது. தமிழக மக்களின் உளப்பூர்வ ஆதரவு எழுச்சி நிலையிலிருந்ததால் அகதிகளின் அடிப்படை பிரச்சனைகள் உணவு, பணம், தங்குமிடம், மருத்துவம், கல்வி என எல்லாம் குறிப்பிட்டளவுக்கு நிவர்த்திக்கப்பட்டது.

அதேவேளை இயக்கங்களின் அங்கும் இங்கொன்றுமான சனநாயக விரோத, மக்களை மதிக்காத அராஜக நடவடிக்கைகள் அகதி முகாம்களில் தொடங்கியது. இவற்றை அகதிகள் தம்மால் முடிந்த வழிகளில் எதிர்த்தனர். தமிழக அதிகாரிகளிடம் முறையிட்டனர். ஆனால் அன்று அரசியல்வாதிகள், அதிகாரிகள், அரசு இயக்கங்களை பயன்படுத்தும் தேவை பிரதானமாக இருந்ததால், அகதிகளின் சட்டத்துக்குட்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டது. உதாசீனம் செய்யப்பட்டது. சில முகாம்களில் நியாய உணர்வுள்ள அகதிகள் பொலீஸ் — இயக்கத்தவர்களின் கூட்டு நெருக்குதலுக்கு, அச்சுறுத்தலுக்கு கூட உள்ளாக்கப்பட்டனர். (ஆர்ப்பாட்டமான ஆரவாரத்தில் அன்றும் அகதிகளுக்கு எதிரான அநியாயங்கள் அமுக்கப்பட்டது.) அகதி முகாமுக்குள் அத்துமீறிய ஆள் கடத்தலுக்கும், போதை வஸ்து கடத்தலுக்கும் எதிராக குரல் கொடுத்த அகதிகள் சிலர் நடுக்கடலுக்கு கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொன்று வீசப்பட்டனர்.

தமிழீழ அகதிகளது வரலாற்றில் 1987 களின் பின் புதிய நிலையும் உருவானது. இந்திய மத்திய, மாநில அரசுகள் தமிழீழ விடுதலை இயக்கங்களை ''ஆதரிக்கும்'' கொள்கையில் ஏற்படுத்திக் கொண்ட மாற்றமும், விடுதலை இயக்கங்களின் தலைமை அதிகார போட்டி, இயக்க மோதல்களால் போராட்டகளத்தின் உள்ளேயே ஏற்பட்ட மாறுதல்களும் மேலும் மேலும் தமிழீழ மக்களும், இயக்கங்களின் கீழ்மட்ட போராளிகளும் கூட தாய் மண்ணிலிருந்து துரத்தப்பட்டனர்கள். மீண்டும் உலகளவில் புலம் பெயர்ந்த அகதிகளின் பலத்தை மதப்பிரிவு அதிகப்படுத்தியது: வடக்கின் பூர்வீக மக்களான தமிழ்த்தேசிய இனத்தின் முசுலீம் மதப்பிரிவு மக்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டு கிழக்கிலும், ஸ்ரீலங்காவிலும் அகதிகளாக்கப்பட்டனர்.

இந்திய 'சமாதான படைக்கு?' எதிரான தமிழீழ மக்களும், விடுதலைப் புலிகளும்நடத்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போராட்டம்: தமிழக, இந்திய மக்களின் ஆதரவு, உலக மக்களின் ஆதரவு என்பன, அதுவரையில் தமிழீழ அகதிகள் விவகாரத்தில் கொள்கையின்றி இருந்த நிலையில் தமிழீழ அகதிகளுக்கு 'அகதி அந்தஸ்து! கொடுக்கக்கூடாது, முழு அகதிகளையும்

www.tamilarangam.net

சுவடுகளுக்குத் தமிழகத்தில் இருந்து வந்த பிரசுரம் ஒன்றில் இருந்து.....

அரசின் முழுக்கட்டுப்பாட்டுள் (எந்த நிர்ப்பந்தம், எதிர்ப்பு பிரச்சாரம் நடத்தியும்) வைப்பது, நிர்ப்பந்தங்கள் மூலம் நாட்டைவிட்டு வெளியேற்றுவது என்ற கொள்கைகளை வகுக்க தூண்டியது. ''ராஜீவ் காந்தி கொலை'', ''பத்மநாபா கொலை'' அரசின் திட்டங்களுக்கு மத்தாப்பாய் விளங்கியது. அரசு படைகளில் இருப்பதுபோல் 'சாதாரண படை' 'அதிரப் படை' 'பயங்கரவாத எதிர்ப்பு படை—— போல் தமிழீழ அகதிகளை விதம் விதமாக பிரித்தனர். சாதாரண முகாம், 'திறந்தவெளி முகாம்,' சிறப்பு முகாம். புலிகளது சிறப்பு முகாம், பூனைகளது சிறப்பு முகாம்———என அமைக்கப்பட்டு அகதிகள் கணவன்—மனைவி, தாய்—பிள்ளை பேதமின்றி பிரித்தனர்.

''முகாம்களுக்கு வெளியே இருந்து முறையாக காவல் நிலையங்களில் தங்கள் பெயரை பதிவு செய்யாத, கடவுச்சீட்டு இல்லாத, இலங்கை குடிமக்களே வெளிநாட்டவர் பதிவுச் சட்டத்தின் கீழ் (அகதிகளாக அல்ல) கைது செய்யப்பட்டு சிறப்பு முகாமகளில் வைக்கப் படுகிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்கு சொந்த செலவில் போக விரும்பினால் அவர்கள் மீது வழக்கு பதிவு இல்லாவிடில் அவர்கள் நாட்டுக்கு அனுப்பிவைக்கப் படுவார்கள்'; பாதுகாப்பு இணை அமைச்சரின் கடிதம் நமக்கு தெளிவாக புரியவைக்கிற தல்லவா?

தமிழீழ அகதிகளின் தினசரி வாழ்வில் எல்லாவகை நிர்ப்பந்தங்களையும் கொடுத்து வெளி யேற்றுவது. 'தாமாகவே வெளியேறுகிறோம் என எழுதிக் கொடுப்பதற்கு' நிர்பந்தங்களை நேரடியாக, மறைமுகமாக கொடுக்க தொடங்கியது. அரசு அகதிகளின் இருப்பிடம், உணவு, நடமாட்ட சுதந்திரம், சுகாதாரம், கல்வி இவற்றில் கட்டுப்பாடுகள் அதிகரித்தது. தமிழக மக்களின் சனநாயக, மனிதாபிமான ஆதரவு உணர்வு என எல்லா வற்றுக்கும் 'வெட்டும், வேட்டும்' வைக்கப்பட்டது. இவை வேகமாக அமுல்படுத்தப்பட்டது. சென்னை. திருச்சி, பெங்களூர், பம்பாய் போன்றபெரிய நகரங்களில், பெரிய பங்களாக்களில் இருகின்ற தமிழீழத்தை சேர்ந்த சிலர் போதை வஸ்து கடத்தல். ஆள்கடத்தல், தலைமாற்றல் மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

இவர்களது சமூகவிரோத நடவடிக்கை களை காட்டி லட்சக்கணக்கான அப்பாவி அகதிகளையும்,போராளிகளையும் கொச்சைப் படுத்தும், தமிழக, இந்திய மக்களுக்கு அகதிகள்மேல் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளது. மறுபுறம் இந்த சமூகவிரோதி கும்பலிடம் மாதாமாதம் கைநிறைய பணம் பெற்றுக்கொண்டு அவர் களை சுதந்திரமாக செயல்பட அனுமதித் துள்ளர். ஆனால், அகதிமுகாம்களில் தங்கள் தேவைகளை நிறைவு செய்ய கேட்டு மனுக் கொடுத்தவர்கள். முகாம்களில் அதிகாரிகளின் அடாவடித்தனத்தை நிறுத்த கோரியவர்கள் புலி, புலி என முத்திரை குத்தப்பட்டு கேவல மான விசாரணைகளுக்கு பின் சிறப்பு முகாம் (சிறப்பு சிறைச்சாலை)களுக்கு மாற்றப் படுவது தொடர்கதை.

அப்பாவி அகதிகள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்த மனிதஉரிமை மீறல்கள், சனநாயக விரோத நடவடிக்கைகள் நிர்ப்பந்த வெளியேற்றங்கள், தமிழகத்திலும் உலகளவி லும் உள்ள புரட்சிகர சனநாயக அமைப் புக்கள், மனிதவுரிமை அமைப்புக்களால் கண்டனம் செய்யப்படுகிறது. ஏன் அய்நாவின் சர்வதேச அகதிகள் உயர் ஆணையகம் கூட தலையிடுகின்ற அளவுக்கு இருந்தது. அகதிகள் பராமரிப்பில் அரசு மேற்கொள்ளும் அணுகு முறைகள் சில.

★ 1992ல், 200 முகாம் இருந்தது: தற் போது 115 முகாம் மட்டும் உள்ளது. 40000 அகதிகள் 2 ஆண்டுகளில் அனுப்பபட்டுள்ளனர். 7000பேர் அனுப்பட இருக்கையில் இந்தியாவை குலுக்கிய பிளேக் நோய். அகதிகள் பயணத்தை இரத்து செய்தது. 1995 தை மாதம் இவர்கள் அனுப்ப ஏற்பாடுள்ளது.

★ மண்டபம், கொட்டப்பட்டு, விளாங் குடி. பெரியார் நகர், ஆனையூர் முகாம் இவை மட்டுமே ஒழுங்கமைகப்பட்ட முகாமகள். மற்றவை எல்லாம் வெயிலுக்கும் மழைக்கும் படும வேதனைகள் கொஞ்சநஞ்சமல்ல.

★ 92 மார்கழியில் வீசிய புயலில் பாம்பாறு அணை அகதிமுகாம் பெரியளவில் நிலைகுலைந்து போனது, தர்மபுரி அரூர் முகாம் தீ விபத்தில் 40 குடிசைகள் எரிந்து சாம்பலானது இன்றுவரை மனுக்கள் போட்டு மைதான் தீர்ந்தது, முகாமதிருத்தப்பட வில்லை.

★ பெரும்பாலான முகாம்களில் மல சலகூட வசதி, தண்ணீர் மின்சாரம்(இணைப் புள்ள இடங்களில் எப்போ என்ன நடக்கும் என்ற வகையில் தாறும்மாறுமான பாது காப்பற்ற ஏற்பாடு) எதுவும் இல்லை,

★ சிறப்பு முகாம்களை பொறுத்தவரை கைதர் மகாளில் 415பேர் இதில் 126சிறுவர்கள் கூட புலி என காட்டப்படுகிறது தனி ஆண்கள் புலிகள் என வாக்குமூலம் கொடுத்தவர்கள் திப்பு மகாலில் 113 பேர்.

ஆ. வேலூர் சிறப்பு முகாமில் 514 பேர்,

இ. எம். ஜி. ஆர். மாவட்டம் புழல் முகாமில் Eprlf, Plot Telo, Endlf என 930 பேர் சேலம் தம்பட்டி முகாமிலும் உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈ. பதிவு செய்யாதவர்கள், அதிகாரிகளை எதிர்த்து கேள்விகேட்டவர்கள் பேசியவர்கள் என 162 பேர் "துறையூர், செங்கல்பட்டு, மேலூர், திருவிடை மருதூர் முகாம்களில் உள்ளனர். சிறப்பு முகாம்களில் உள்ளவர்கள் வெளியில் நடமாட முடியாது. யாரும் அவர்களை சென்று பார்க்க முடியாது. வெளி உலக தொடர்பு இன்றி சிறப்பு சிறைச்சாலை உள்ளது. 25—07—94 தொடக்கம் துறையூர் அகதிமுகாமில் உணவு வசதியின்மை செய்திதாள் படிக்க தடை, தண்ணீர் வசதியின்மை, நேர்காணலுக்கு தடை இவற்றுக்கு தக்க பரிகாரம் காணுமாறு அரசை கேட்டு தொடர் உண்ணாவிரதம் இருந்தனர்.

★ முகாம்களில் வாழும் அகதிகள் வெளியே வேலைக்கு போக இருந்த சுதந்திரத்தை கூட இழந்துள்ளனர். காலை 7 மணிக்கு பின் 3 ாய் மாலை 6 மணிக்கு முன் வந்து விடவேண்டும். எங்கு யார் இதற்கு வேலை கொடுப்பார்கள்?

★ வெளியூர்கள் செல்ல வேண்டின் வருவாய் ஆய்வாளர் முதல் தாசில்தார்வரை அனுமதிக் கையொப்பம் வாங்கி செல்ல வேண்டும். அதுவும் கூடியது 3 நாள்களுக்கு தான். அனுமதியின்றி போனாலோ, ஒருநாள் அதிகம் வெளியில் இருந்தாலோ அதிகாரிகள் முதல் Q BRANCH வரை விசாரணைக்குள்ளாகவேண்டும்.

★ தமிழ்நாட்டில் எங்காவது கொள்ளை கொலை குண்டுவெடிப்பு மற்றும் வீரப்பன் நடமாடும் பகுதியை ஒட்டிய முகாம்களில் திடீர் திடீரென சுற்றிவளைத்து முகாம்கள் பரிசோதனை செய்யப்படுதல்.

★ அரசு உதவியை பொறுத்தவரை அகதி குடும்ப தலைவருக்கு 150ரூபா. 12 வயதுக்கு மேலுள்ளவர்களுக்கு 120 ரூபா 12 வயதுக்கு கீழ் உள்ள முதல் பிள்ளைக்கு 75, அதைவிட சிறியவர்களுக்கு 37-50, ஒரு மாதத்துக்கு கொடுக்கப்படுகிறது: அரிசி 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தினம் 400 கிராம், 12 வயதுக்கு கீழ் உள்ளவர்க்கு 200 கிராம் எனவும், குடும்பத்துக்கு சீனி 2Kg கூடியது. மண்ணெண்ணை மாதத்துக்கு 3 லிட்டர் முதல் 10 வரை இந்த உதவிப் பணத்தை பொருளை வைத்து வயிற்றின் எந்த மூலையை நிரப்ப முடியும்.

★ அகதிகளின் அன்றாட வாழ்வு பசி, பட்டினி, கர்ப்பிணிக்கு மருந்து இல்லை பிள்ளைக்கு ஊட்டசத்துக்கு பால் இல்லை எல்லாவற்றுக்கும் பணம் இல்லை. வேலைக்கு போக வழியில்லை: இவற்றால் விரக்தியடைந்த சிலர் இச் சமூகத்தில் நிலவும் சீரழிந்த சமூக நடவடிக்கைகளுக்கு விரைவாக பணம் சம்பாதிக்கும் தொழில்களுக்கு இரையாகியுள்ளனர்.

★ முகாம்களில் சீர்திருத்த வேலைகள் செய்து வந்த 'தொண்டு நிறுவனங்கள்' கூட இயங்க் தடை விதித்துள்ளது அரசு.

★ அகதி மாணவர்களின் கல்விக்குகூட சாவு மணியடிக்கப்பட்டுள்ளது. ஆயிரம், லட்சம் என லஞ்சம் கொடுத்து படிக்க அகதிகளுக்கு என்ன வழி? கல்வி கற்க்கும் வயதிலுள்ள சிறுவர்கள், லாட்டரி சீட்டு வியாபாரம் மதுபான கடை, மளிகைக் கடைகளில் மிகக் குறைந்த கூலியில் வேலை செய்கிறார்கள் மேல் படிப்பு இழந்த ஆண்பெண் மாணவர்கள் களும் விரக்தியில் உள்ளனர்.

இப்படியாக தமிழகத்திலுள்ள அகதிகள் எந்தவித மனிதாபினமும் இன்றி நடத்தப்படுகிறார்கள். இவற்றை எந்த வழியிலும் வெளிப்படுத்துகிற அதற்காக போராடுகின்ற உரிமை அகதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள புரட்சிகர சனநாயக அமைப்புகள் மனிதவுரிமை அமைப்புகள் அகதிகளுக்கு ஆதரவு குரல் கொடுக்க முன் வரும்போது 'புலி சார்பு' ஆயுதக் கலாச்சார ஆதரவாளர்கள் தமிழக அமைதியை குலைப்பவர்கள் என்று கூறி தேசிய பாதுகாப்பு சட்டம் பயங்கரவாத தடுப்பு சட்டம் கைது செய்து அடைத்து வருகிறது. இவற்றை தாண்டியும் தமிழக மக்களின் ஆதரவுக்குரல் கேட்டுக்கொண்டிருக்கிறது.

புலம் பெயர்ந்த தமிழீழத்தவர்கள் இந்தியாவில் மட்டுமல்ல ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் உள்ளனர். ஒப்பிட்டளவில் தமிழகத்திலுள்ள அகதிகளை விட அந்நாட்டு அரசுகள் அகதி அந்தஸ்து' கொடுத்து அடிப்படை வாழ நிலைக்கும் ஓரளவு உத்தரவாதம் கொடுத்துள்ளது. சுவிடன் நாடு மட்டும் அங்குள்ள 92க்கு பின் வந்த அகதிகளை திருப்பி அனுப்ப ஸ்ரீலேங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது, அந்நாடுகளிலும் பரவிவரும் இனவெறி, நிறவெறி பாசிச சக்திகள் வெளிநாட்டு அகதிகள்மீது தாக்குதல் நடத்துகின்றனர். அவர்களின் தாக்குதலுக்கு பலியான சர்வதேச அகதிகளில் தமிழீழ அகதிகளும் அடங்குவர். அங்குள்ள அகதிகள் தங்கள் பிரச்சனைகளை எடுத்துகூறவும், எழுதவும், சிறு அளவில் போராடவும் கூட அந்நாட்டு அரசுகள் தடை விதிக்கவில்லை.

ஆனால் உலக தமிழர்களின் சக்கரவர்த்திகள் ஆளும் தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகளுக்கு 'அகதி அந்தஸ்து' கூட கொடுக்கப் படவில்லை. அகதிகள் தங்களது வாழ்வின் அவலங்களை தமிழக சகோதரர்களிடம் வெளிப்படுத்த உரிமை இல்லை அகதிகள் பேச எழுத கூட்டம் கூட்ட தங்களது கோரிக்கைகளை வெளிப்படுத்தினால்—'சிறப்பு முகாம் பெயர் மட்டும் தமிழில்' போட்டு வைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துள்ளனர். அகதி மக்களின் குரல்களை புலிகளின் உறுமல்களாக, அகதி முகாம்களை தீவிரவாதிகளின் கோட்டைகளாக சித்தரிக்கும் நயவஞ்சகம் மட்டும் நாவில் தவழ்கிறது. தமிழ் தமிழ் 'உலகத் தமிழர் மாநாட்டுக்கு'' கோடி கோடியாக கொட்டும் இந்த தமிழ் வளர்க்கும் விளம்பர தலைவர்கள் தமிழகத்தில் சோமாளிய அகதிகளை போல் மாறிக் கொண்டிருக்கும் தமிழீழ அகதிகளை, அவர்களது பிரச்சனைகளை ஏன் கவனிக்கு மறுக்கிறார்கள்? தமிழ் மக்களின் அழிவில் தமிழை வளர்க்கும் புரட்சி தலைவர்களாக இருப்பதால் அவர்களால் தமிழீழ அகதிகளை மட்டுமல்ல, தமிழக மக்களையும் காப்பாற்ற மாட்டார்கள். உணர்வுள்ள தமிழ் மக்கள் விழிக்க வேண்டிய வேளையிது உலகத் தமிழ் மாநாட்டில், தமிழ் மக்களின் பிரச்சனைகள் பேசப்படவேண்டும். தமிழ் மொழியை தமிழர் வாழ்வில் இருந்து அகற்றும் துடிக்கும் துரோக கூட்டத்தை அம்பலப்படுத்த வேண்டும். மாநாட்டில் பங்கு பற்றும் உணர்வுள்ள உலகத் தமிழர்களது கடமையாக இருக்கவேண்டும்.

இன்று உலகளவில் அகதிகள் பிரச்சனை மையப்பட்டுள்ளது. உள்நாட்டு இனவெறி மதவெறி மோதல்களாலும் ஆளும் அரசுகளின் வல்லரசியங்களின் தேசிய இன ஒடுக்குமுறையாலும் வல்லரசியங்களின் புதிய காலனி கொள்ளை சுரண்டல் ஒடுக்கு முறைகளால் யுத்தங்களால் மண்ணின் [redacted]கள் தாய் தேசத்தை விட்டு தங்கள் உயிர் பாதுகாப்புக்காக எந்த பெரிய கடல்களையும் மலைகளையும் ஆறுகளையும் கடக்க நிர்பந்திக்கப்படுகிறார்கள், தஞ்சம் புகுந்த நாடுகளிலும் எதோஒருவகையில் தம்மிதானமேலதிகஒடுக்கு முறைகளை தனிமைப்படுத்தல்களை உணர்கிறார்கள். இன்று வல்லரசியம் உலகு தழுவியதாக இருப்பதால் தேசிய ஒடுக்குமுறையுடன் தனது ஜீவனை பிணைத்துள்ள வல்லரசியத்தின் வலைகளிலிருந்து உலகின் எந்த மூலையிலும் அகதிகள் புலம்பெயர்ந்தவர்கள் தப்பி வாழமுடியாது. இதனால் ஒரு காலத்தில் உள்நாட்டு அரசின் கொலைக்கரங்களுக்கு தப்பி ஓடிய அகதிகள். இப்போது அகதி வாழ்வில் ஏற்பட்ட வெறுப்புக்களால் மீண்டும் தாய் மண்ணுக்குபோய் உள்நாட்டு கொலை வெறி அரசால் கொல்லப்பட்டாலும் நமது மண்ணில் சாவோம் என்கிற அளவுக்கு தயாராகிவிட்டார்கள்.

ருவண்டா அகதிகள் [redacted]லும், தான் சானியாவிலும், சோமாலியா, பாலஸ்தினம், குர்திஸ்தான், போசுனியா என பட்டியல் நிற்கிறது. ஒப்பீட்டளவில் தமிழீழ அகதிகள் தான் உலகின் பல நாடுகளில் சிதறிக்கிடக்கின்றனர். தமிழீழ அகதிகள் தாங்கள் தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் சர்வதேச சட்டத்துக்குட்பட்டு அகதிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதிலும் அந்நாடுகளிலுள்ள மக்களுக்கு தங்களது நிலமையை புரியவைத்து மக்களுக்கு இடையிலான உறவை வளர்க்கவேண்டும்.

ஸ்ரீலங்கா பேரின இனவாத அரசின் வல்லரசியங்களின் தேசிய இன ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டும் -'தமிழீழ மக்களது தேசிய சுதந்திரம்' மட்டுமே அகதி வாழ்வுக்கு, வேர் பிடுங்கப்பட்ட வாழ்வுக்கு புலம் பெயர்ந்த வாழ்வுக்கு முற்றுபுள்ளி வைக்கும்.

**மத்தியமாநில அரசுகளே !**

தமிழீழ அகதிகளுக்கு ''அகதி அந்தஸ்து'' வழங்கு!

அகதிகளின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு உத்தரவாதம் கொடு!

தமிழீழ அகதிகளின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்!

**தமிழகஇந்திய மக்களே !**

தமிழீழ அகதிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தாருங்கள்!

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள்!

மத்திய மாநில அரசுகளுக்கு நிர்ப்பந்தம் கொடுங்கள்!

**தமிழீழ அகதிகளே !**

அகதி முகாம்களில் நமது அடிப்படை உரிமைகளுக்காக போராடுவோம்!

நமது துன்ப துயரங்களை உலக மக்களுக்கு எடுத்துரைப்போம்!

நமது வாழ்வை மாற்ற நாமே போராட வேண்டும்!

## தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் (த. தே. மு. க.)
## PATRIOTIC VANGUARD'S ORGANAIZATION (PVOT)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சுவடுகள்,
ஒஸ்லோ.

தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட சுவடுகள் ஆறாவது ஆண்டிதழ் உட்பட டிசம்பர் இதழும் பெற்றேன். நன்றிகள்.

சுவடுகளின் ஒவ்வோர் ஆக்கங்களையும் பண்டித பாணியில் அக்கு வேறு ஆணி வேறாய் விமர்சிக்க நான் விரும்பவில்லை. சுருக்கமாகக் கூறப்போனால் ஆண்டிதழ் பிரமாதம். பேராசிரியர் கைலாசபதி பற்றிய குறிப்புகள் பிரேயாசனமுள்ளவை. நு.்மானின் கவிதைகளும், சுகுமாரனின் பொய்ச் சிரிப்பும், சோலைக்கிளியின் வாத்ஸல்ய உங்கள் உழைப்பைப் பாராட்டுவதொன்றும் மிகையாகாது.

சுவடுகளுக்கான படைப்புகளின் தரத்தைப் பேணுவதில் இன்னுஞ் சிறிது கவனஞ் செலுத்தலாம் போலுள்ளது.

ஏஎம்.றஸ்மி,
அக்கரைப்பற்று,

தங்களால் வெளியிடப்பட்ட சில பிரதிகளை நான் வாசிக்க நேர்ந்தது. உண்மையிலேயே நான் அதைப் பார்த்துப் பரவசப்பட்டேன். நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றித் திரியும் குர்ஆனுக்கு நிலையான பூரண விளக்கம் இருக்கிறது. அது எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியது.

அடுத்து கோவிலூர் செல்வராஜனின் சிறுவர் வளர்ப்பு முறை கட்டுரை அருமையாக உள்ளது. தமயந்தியின் கவிதையும் நன்றாக இருக்கிறது. சுவடுகள் சிறுவர் மலரால் பல இளசுகளின் இலக்கிய ஆர்வம் வளர்ச்சியடையும்.

நேசங்களுடன்,
முகமட் அபார்.

நாற்சந்தி

பெருந்தகையீர், வணக்கம், வாழ்க!

புலம்பெயர்ந்தோரின் சுவடுகள் மிகச் சிறப்பாக வளர்ந்து வருவதைக் காண்கிறேன்.

சிறுவர் சிறப்பிதழில் நோர்வே மக்களின் தமிழ்க் கல்வித் தாகமும், இன்றைய ஐரோப்பியச் சிறுவர்களின் போக்கும், சமுதாயப் பலவீனப் போக்கும் நன்கு ஆராயப் பட்டிருக்கின்றன.

தமிழ்க் கல்விக்கு இங்கே நாங்கள் போராடுகிறோம். 15லட்சம் தமிழரின் பிள்ளைகள் தமிழ்ப் பள்ளியில். ஈழவர் பிள்ளைகளும், தமிழ் விரோதிகளின் பிள்ளைகளும் முக்கால் லட்சம் பேர் தமிழ்

www.tamilarangam.net

நடையழகும் கவிதையீரமும் மெய்சிலிர்க்க வைத்தன.

சுவடுகளின் ஆசிரியபீடக் கருத்துகளைப் படித்தபோது நெஞ்சு நிரம்பிற்று. காய்தல் உவத்தலின்றி, சத்திய வேட்கையுடன் கருத்துகளை முன்வைத்திருக்கும் தொனி மெச்சத் தக்கது.

சிறுகதைகள் பற்றிக் கூறுவதானால் ஒவ்வொருவரும் இயல்பாகவே மெல்லிய, ஆனால் உஷ்ணமான உணர்வினால் உந்தப்பட்டுக் கொட்டியிருக்கிறார்கள். புலம்பெயர்ந்த தங்களின் தமிழ்த் தொண்டும் இலக்கியப் பற்றும் மெச்சத் தக்கது. சுயவிளம்பரமின்றி, அலட்டலில்லாத இந்தப் போக்கினைத் தொடர்ந்து பின்பற்றுக.

ஒட்டமாவடி அறபாத்,
இலங்கை.

ஆசிரியர்,
சுவடுகள்.

சுவடுகள் கிடைத்தன, மிகவுமே மகிழ்ந்தேன்.

தொலைதூரத் தேசமொன்றில், புலம்பெயர்ந்து வாழ்தலின் நெருக்குவாரங்களுக்கிடையே இருந்தும்; தமிழ்பேசும் மக்களின் கலை இலக்கிய கலாச்சார சமூக அரசியல் மேம்பாட்டிற்கான இவ்வலகில் உங்கள் சேவை நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றே. தங்கள் சஞ்சிகை என்றென்றும் நல்ல முறையில் வெளிவருவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

இ.தியாகலிங்கம்,
வார்டோ,
வடநோர்வே.

ஆசிரியர்,
சுவடுகள்.

சுவடுகளின் நாற்சந்தி பகுதியில் இளைய அப்துல்லாவின் கடந்த கட்டுரைக்குப் பலரும் சாட்டை அடி கொடுத்துக் கடிதம் எழுதியுள்ளார்கள். இதில் சமர் என்பவரின் கடிதத்தின் சில வரிகள் பிற்போக்குத் தனமாக எழுதப் பட்டுள்ளன. அவர் ஒரு வரியில் குர்ஆன் 1200 ஆண்டுகளாக நிலையான விளக்கமின்றி இருக்கின்றது என எழுதியுள்ளார். இது அவரின் குர்ஆன் பற்றிய பூரண விளக்கமின்மையை விளக்குகின்றது. இளைய அப்துல்லாவை எப்படியும் சாடலாம். ஆனால் இறைமறையில் பிழைகாணத் துடிப்பது மகா மடத்தனம் என்பதை அன்பருக்கு அன்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

படிப்பதே இல்லை. இவர்கள் மலாய் பள்ளியில்தான் படிக்கிறார்கள். ஆனால் ஓர் இலட்சம் பிள்ளைகள் நாள்தோறும் 540 தமிழ்ப் பள்ளிகளில் (ஈழத்தைப் போலவே) தமிழ்ப் பயிரை வளர்க்கிறார்கள். ஓர்லட்சம் ஈழத் தமிழர் நூறாண்டு வாழ்ந்தும் தமிழுக்கு எதிரிகளாவர்.

புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகள் பத்தில் செர்மனியைத் தவிர, மற்ற நாடுகளில் கட்டொழுங்கான தமிழ்ப் பாடமும் பயிற்சியுமில்லை என எனக்குத் தெரியும். இதன் உலகளாவிய ஒருங்கிணைப்புக்குப் பாடுபட்டு வருகிறோம். 28 நாடுகளில் நான் கண்டது திடுக்கிடும் அதிர்ச்சி பலவகையானது. தமிழை இழந்துவிட்டுப் பேசவும், கதைக்கவும், எழுதவும் தெரியாத கொடுநிலைச் சூழல் உலகம் எங்கும் வளர்ந்து வருகிறது. கரிபியன் தீவுகளில் அழிந்தது. மொரிசியஸ், றியூனியனில் அழிக்கப் படுகிறது. புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் 50%தான் விழிப்பாகச் செய்து பாதுகாக்கிறார்கள். எப்படியும் அடுத்த ஐந்து - பத்து வருடங்களில் வீழ்ச்சி தெரியும். நான் கண்டுவந்த ஒலந்து, டென்மார்க்கில் இந்த முயற்சி போதாது. சுவிசிலும் குறைவுதான். நோர்வேயில் மிக அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

உலகத் தமிழ் ஏடுகளில் ‘சுவடுகள்’ போல ஓர் ஏடு இல்லை. வெளிநாடுகளில்

www.tamilarangam.net

இருந்து எனக்கு வந்துகொண்டிருக்கும் இருபது ஏடுகளை விட சுவடுகளே குற்றங் குறைகளையும், உண்மைகளையும் மிகத் தெளிவாக வெளியிடுகின்றது. மிகப் பெரிய உலகப் பிரச்சனைகளை ஆய்கிறது.

நமது இனிய தோழர்களான உங்கள் உழைப்பு வெற்றியைத் தரும். உங்கள் கனிவும் பண்பும் வாழ்க எனப் பாராட்டுகிறேன்.

பேராசிரியர் இர.ந.வீரப்பன்,
மலேசியா.

பிரியமுள்ள தோழர்களுக்கு,
இனிய வணக்கம்.

சுவடுகள் நாளுக்கு நாள் கனம் ஏறிக்கொண்டிருப்பதை எண்ணி மகிழ்கிறேன். 60வது இதழ் தமிழியலில் மாபெரும் சாதனை. அது வந்த நாள் முதல் என் கையைவிட்டு நீங்கவில்லை. பெருமைக்குரிய சாதனையைப் படைத்த உங்கள் உழைப்பிற்குத் தாழ்மையான வணக்கங்கள்.

கனிவண்ணன்,
நாகபட்டினம்,
தமிழ்நாடு.

மத்தியில் பல்வேறு பயங்கள் காரணமாய் வெளியில் சென்று சுதந்திரமாக விளையாடப் பிள்ளைகள் அனுமதி மறுக்கப் படுகிறார்கள். இதுபற்றியெல்லாம் கட்டுரையாளர்கள் போதிய கவனம் செலுத்தியிருக்கலாம். இனியாவது இவை பற்றி எழுத நீங்கள் தூண்டுதலாக இருக்க வேண்டும்.

இளம் வயதினரான யொஹான், நிருந்தா ஆகியோரின் எழுத்து, வளர்ந்தவர்களது கட்டுரைகளைவிடத் தெளிவாகத் தம்மை வெளிப்படுத்துகிறது என்பதே உண்மை.

சுவடுகள் தொடர்ந்து இவ்வாறான விடயங்களில் அக்கறை காட்ட வேண்டும்.

ந.வசந்தி,
பேர்லின்.



**படித்ததும் பார்த்ததும் கேட்டதும்**

தினகரன்

அந்தனிஜீவா

படித்தது – 5/2/95

**சுவடுகள் ஆண்டு மலர்**

தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் ஆர்வத்துடன் வளர்ப்பவர்கள் யார் என்றால்... துணிவுடன் 'உலக நாடுகளில் புலம் பெயர்ந்து வாழுகின்ற யும் என்ற காத்திரமான கட்டுரை ஒன்றை விரிவுரையாளர் செ. யோகராசா எழுதியுள்ளார். பத்திரிகைத்துறை, எழுத்துத் துறை, பல்கலைத்துறைக்கு அவர் ஆற்றிய பணிகள் பற்றி சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

அன்புத் தோழர்களுக்கு,
வணக்கம்.

சுவடுகள் சிறுவர் சிறப்பிதழ் கிடைத்தது. மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இதழ் வசீகரித்தது. சிவசேகரத்தின் 'அந்திமம்', தமயந்தியின் 'அலைகளிடையொரு விண்ணப்பம்' ஆகிய கவிதைகள் பாராட்டும்படி இருக்கின்றன. தமிழவனுக்கெதிரான சிவசேகரத்தின் விமர்சனங்கள் ஈழத் தமிழர்கள் எதிலும் எந்தக் காலத்திலும் பின்தங்கி நிற்கவில்லை என்பதை மட்டுமன்றி அரசியல் பிரக்ஞையையும் வெளிப்படுத்தியது.

தமிழ்நாட்டு சிற்றிதழ்களிடையே ஏற்பட்டுள்ள அரசியல் விழிப்புணர்வு பற்றி அ.மார்க்ஸின் 'மனிதம்' பேட்டியின் வாயிலாக நீங்கள் அறிந்திருக்கலாம்.

புலம்பெயர்ந்து வாழும் உங்களது சஞ்சிகைகளைப் பார்க்கும்தோறும் இங்கே எங்களது செயல்பாடுகள் பற்றிய போதாமை குறித்தான குற்ற உணர்வுதான் முதலில் வருகிறது. உலகில் வேறு எங்குமே இல்லாதபடி சினிமா/ பத்திரிகைகளால் மூழ்கடிக்கப்பட்டு வரும் தமிழ் மக்கள் எல்லாவற்றையும் spectacleஆகப் பார்த்துச் சந்தோஷிக்கிறார்கள். ஈழத்தில் நடந்துவரும் விடுதலைப் போராட்டம்கூட அவர்களுக்கு, அவர்கள் பார்க்கும் தமிழ்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆசிரியர்,
சுவடுகள்.

தங்கள் சிறுவர் சிறப்பிதழ் பார்க்கக் கிடைத்தது. இவ்வாறு சிறுவர்களை மையப்படுத்தி இதழ்கள் வருவது குறைவு. அதிலும் சிறுவர்களது பிரச்சனைகள் பற்றிப் பேசும் இதழ்கள் மிகக் குறைவு. தயாரிப்பு வடிவத்தில் இருக்கும் சிறப்பு, உள்ளே இருக்கும் கட்டுரைகளில் இருப்பது போல் தெரியவில்லை. பலரும், புதிய சூழலில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றியே எழுதியுள்ளனர். ஆனால் அவர்களது பார்வை தெளிவற்றதாக உள்ளது. கட்டுரையாளர்களது பெயர்களோ உதாரணங்களோ அவசியமில்லை என நினைக்கிறேன்.

பிரச்சனைகள் தொடர்பான தீர்வாக அவர்கள் பெரும்பாலும் எதையும் காட்ட மறந்துவிடுவது அல்லது பழைய பல்லவியையே பாடுவது வாசகர்களைக் குழப்பலாம். முக்கியமாகச் சிறுவர்களின் உலகில் என்ன நிகழ்கிறது என்பதைப் பார்க்கும் பக்குவம் எமக்கில்லை. ஏதாவது ஒருவிதத்தில் எதையாவது திணிக்கவே முயல்கிறோம். ஐரோப்பாவில் சிறுவர்களுக்கு விளையாட்டுக்கு அதிக நேரம் ஒதுக்கப் படுவதுடன், அவர்கள் விளையாட்டுகளூடாகக் கற்கத் தூண்டப் படுகிறார்கள். இங்குள்ள எமது சமூகத்தின்

தமிழர்கள்' என்று கூறிவிட-லாம். புலம் பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் சோதனைகளுக்கும், வேத-னைகளுக்கும் மத்தியில் பத்தி-ரிகை, சஞ்சிகைகள் வெளி-யிட்டு வருகிறார்கள். இப்படி வெளிவரும் சஞ்சிகைகளில் மிக முக்கியமானது நோர்வே-யிலிருந்து வரும் 'சுவடுகள்' ஆறு ஆண்டுகளாக வெளிவரு-கிறது. இதன் ஆறாவது ஆண்டு மலர் நவம்பர் 94இல் வந்துள்ளது.

'சுவடுகள்' மலரின் அட்-டையை தமிழகத்து ஓவியர் புகழேந்தியின் 'ஈழத்தமிழ் அக-திகள்' என்ற புகழ்பெற்ற ஓவி-யர் அலங்கரிக்கின்றது.

"ஈழத் தமிழர்களின் வாழ்-வில் முக்கிய அம்சமாக மாறி-விட்ட புலம் பெயர்ந்த வாழ்-வுக்கும் அதிலேற்படும் பிரச்சி-னைகட்கும் இவற்றை கருக் கொண்டு படைக்கப்படும் இலட்சியங்கட்கும் சுவடுகள் தொடர்ந்து தொடர்ந்தும் இடம் தரும் அதே வேளை புலம் பெயர்ந்தோர் இலக்கியத்-துக்குத் தன்னாலான காத்திர-மான பங்களிப்பைத் தொ-டர்ந்து வழங்க விரும்புகிறது என ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏ. ஜே. என்று அனைவரா-லும் அன்புடன் அழைக்கப்ப-டும் ஏ. ஜே. கனகரத்னா அண்-மையில் யாழ்ப்பாணத்தில் மணிவிழாக் கண்டார். அவ-ரைப் பற்றி 'அன்புலகிற்கு அவர் ஒரு குழந்தை, அறிவுல-கிற்கு அவரொரு பொக்கிஷம் என்ற தலைப்பில் சிறப்பான குறிப்பு இடம் பெற்றுள்ளது.

"ஈழத்து இலக்கிய வளர்ச்சி-யும் பேராசிரியர் கைலாசபதி-

ஆனால் 'தினகரன் ஊடாக ஈழத்துப் பத்திரிகை உலகினுள் கைலாசபதி பங்களிப்பு பற்றிக் குறிப்பிடும் பொழுது டானியல், இளங்கீரன், டொமினிக் ஜீவா, நந்தி, எஸ். பொ, சொக்கன், வ. சு. இராசரத்தினம், கவிஞர்கள் தான்தோன்றிக் கவிராயர், நீலாவணன், கலைஞர்கள் சிவஞானசுந்தரம், யூனூஸ் எனப் பெயர்களை செ. யோக-ராசா குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடும் பெயர்களுடன் இன்னும்சில பெயர்கள் குறிப்-பிடப்பட்டிருக்க வேண்டும். மலையக மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை, என். எஸ். எம். ராமையா, சாரல் நாடன் ஆகியோர்கள் மற்றும் சிற்றிதழ்கள் சேகரிக்கும் பொள்ளாச்சி நசன் 'வேதனை-களுக்கிடையில் எழும் சாத-னைகள்' என்ற தலைப்பில் தமிழ் நாட்டிலும் வெளிநாடுக-ளிலும், இலங்கையில் வெளிவ-ரும் சிற்றிதழ்களின் பெயர்-களை குறிப்பிட்டு கட்டுரை வரைந்துள்ளார். 'தமிழ் நாட்-டில் அகதி முகாம்கள் சிறை முகாம்களாகிவிட்டன' என்ற கட்டுரைபடத்துடன் பல தக-வல்களை தருகின்றது. மற்றும் சாரல் நாடனின் 'புகலிட இலக்கியம்' மலையகச் சிறுக-தைகள் லே. முருகபூபதி, சாள்ஸ் ஆகியோர்களின் சிறுகதைகள் சி. சிவசேகரத்-தின் கட்டுரை, சுகுமாரன், சோலைக்கிளி, த. பழமலய் ஹாங் ரிக்ஸ், முல்லை அமு-தன் தமயந்தி, பானுபாரதி ஆகியவர் கவிதைகள் 'சுவடு-கள்' ஆண்டு மலரை தரமாக்கி-யுள்ளன.

'சுவடுகள்' மலர் படித்து பா-துகாக்க வேண்டிய மலராகும்.

சினிமாவின் நீட்டிக்கப்பட்ட சண்டைக் காட்சிகளாக அர்த்தமானாலும் வியப்பதற்கில்லை.

ரவிக்குமார்,
பாண்டிச்சேரி.

ஆசிரியர்கள்,
சுவடுகள்,
நோர்வே.

தாங்கள் அனுப்பி வைத்த சுவடுகள் சிறுவர் சிறப்பிதழ் கிடைத்தது. மிகவும் மகிழ்ந்தேன். வெளிநாடுகளில் - மாற்றுக் கலாசாரங்களின் மத்தியில் சிதைக்கப்படும் சிறுவர்களது பிரச்சனைகளை முதன்மைப் படுத்தியதாக இதழ் மலர்ந்துள்ளது வரவேற்கக் கூடியதே. பெரியவர்களுக்கும், சிறுவர்களுக்கும் இடையேயான இடைவெளி புதிய கலாச்சாரத்தால் விரிவாகி, தமிழ்க் கலாச்சார அந்நியப் படுத்தலுக்கு வித்திடுவது விரும்பத் தகாத ஒன்றே.

இளம் மொட்டுகளின் சாதனைகளைப் பட்டியலிட்டு ஊக்குவிப்பது அவர்களைக் கட்டாயம் உற்சாகப் படுத்தும். தாங்கள் குறிப்பிட்டுள்ள 'வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கான தமிழ் கற்பித்தல்' முறையில் எளியதும் விரைவானதுமான ஒரு முறையை நான் தயாரித்து



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வைத்துள்ளேன். (நான் ஆசிரியர் பயிற்சிக்கான நிறுவனத்தில் அறிவியல் விரிவுரையாளராக உள்ளேன். கல்வித் தகுதி M.A, M.Sc, M.Ed, DDE). தாங்கள் விரும்பினால் அதை அனுப்பி வைக்கிறேன். முயற்சி செய்து பார்த்து நம் மக்கள் தமிழ் 'எழுதப் படிக்க' பழகினால் மகிழ்ச்சி அடைவேன். இம்முறையில் தமிழ் பேசத் தெரிந்தால் மட்டும் போதும். எழுதப் படிக்க எளிதான முறை.

.........

பொள்ளாச்சி நசன்,
1, சம்பத் நகர்,
சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி 6,
தமிழ்நாடு 642 006.

ஆசிரியர்,
சுவடுகள்.

சுவடுகள் 62ல் ஆசிரியர் தீட்டிய 'கேட்டு வைப்போம்' என்ற உண்மையின்படி நான் சில வரிகள் எழுதுவது அவசியம் என நினைக்கிறேன். தமிழ் முஸ்லிம் உறவுகள் மீண்டும் கட்டியெழுப்பவும் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் பரஸ்பரம் தமது உரிமைகளை மதித்து ஏற்றுக் கொள்ளவும், தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனவாதக் கும்பல்கள் பொத்தான்களை அவிழ்த்துவிட்டு, நெஞ்சு நிமிர்த்தி எழுவதை நிறுத்தவும் இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என நினைக்கிறேன்.

எதற்கும் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்றுபடுவோம். இனவாதங்களையும் கட்டுக்கதைகளையும் விரும்பாது விலகி நிற்கின்ற சிங்கள மக்களை இனம்கண்டு அவர்களையும் நம்மோடு இணைப்போம். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இந்நாடு சந்தர்ப்பவாத - இனவாத அரசியலில் தங்கியிருக்கின்ற வரைக்கும் பொ.ஐ.முன்னணியும் ஐ.தே.க.வும் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன்வைக்கத் தவறினால் நாம் கவலைப்பட்டுப் பிரயோசனமில்லை. வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற மக்களின் பதிவுகளைப் புரட்டுகின்ற வேளை, அங்கே சாதனையாளர்களாகத் தமிழர் முஸ்லிம்களின் பெயர்கள் தெரிகின்றன. வடகிழக்கின் அற்புத இயற்கைச் சூழலிலும், அழகிய கலாச்சார ஆணிவேரிலும் உயர்ந்து நிற்கின்ற மக்கள் தமிழர் முஸ்லிம்கள்தான் என்பதை யாரும் மறைக்க முடியாது. யாருக்கும் யாரும் அடிமை இல்லை என்பதையே இது துலாம்பரமாகக் காட்டுகிறது.

இன்றைய சூழ்நிலையில் சமாதானம் கிழிக்கப் பட்டால் எதிரொலியாகத் தமிழ் முஸ்லிம் உறவுகள் பிளவுபடக் கூடாது. புலிகள் முஸ்லிம்கள் பற்றியும் இரக்கப்பட வேண்டும். அவர்களிடம் ஆளுமைத் திறன் இருப்பினும் அது முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒருபோதும் திருப்பப்படக் கூடாது. இதில் அவதானமாக புலிகள் செயற்படுவார்களாக இருந்தால் நம் உறவுகள் மேலும் வலுவடையும். இரக்கம் காட்டுகிற பக்கமே மனசு ஓடும் என்பதுபோல் மனிதாபிமான அடிப்படையில் இச் சூழலைப் பயன்படுத்தி முஸ்லிம்களைக் கைதிகளாக வைத்திருக்கும் விடுதலைப் புலிகள் அவர்களை விடுதலை செய்வார்களாயின் இது ஒரு ஏற்புடைய நிலையைத் தோற்றுவிப்பதுடன் பேரங்களற்ற தன்மானத்தையும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் அமையும்.

அதுபோல் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் திருப்பி அழைக்கப் படுவார்களாக இருந்தால் புலிகள் முஸ்லிம்களுக்குள் உண்டு, குடித்துப் போகும் சமநிலை நிகழலாம். தமிழ் முஸ்லிம் அணிகளின் வருத்தம் இல்லாதபடி தத்தமது உரிமைகளுக்கு உத்தரவாத மளிக்கப்பட்டு புலிகள் ஒரு கூட்டான முடிவை - கோரிக்கையை முன்வைக்க முடியுமாக இருந்தால் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் பலத்தை வெறுமனே சிங்கள இனவாத சக்திகளால் தட்டிக் கழித்துவிட முடியாமல் போகும். அல்லது அந்த சக்திகள் சர்வதேச அரங்கில் மேலும் அம்பலப்பட்டுப் போகும்.

ஒரு நீள நினைவுடன்,
றிஸ்வியூ முஹம்மத் நபீல்,
வெலிகமை

www.tamilarangam.net

# Bandit Queen

## திரைப்படம்: ஒரு நோக்கு



சத்யத்ரேயின் "கொனசத்ரு"வுக்கு பின் ஒஸ்லோவில் பார்க்கக் கிடைத்த தரமான இன்னொரு இந்திய திரைப்படைப்பு Bandit Queen.

எழுபதுகளில் செக்ஸ் புத்தகங்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்துவந்த வீரகேசரி நிறுவனத்தின் இன்னொரு பத்திரிகையான மித்திரன் காட்டிய பூலான் தேவியை,"பருத்த மார்பகங்கள் குலுங்க குதிரையில் புயலென வந்து எதிரிகளைச் சுட்டுப் பொசுக்கும்" பூலான் தேவியை எனக்கு நன்றாக ஞாபகத்திலிருந்தது. பின்னர் ஓரிரு இந்திப் படங்களில் தொடைகள், தொப்புள் தெரிய நடனமாடும் சிவப்பான வடஇந்திய நடிகைகளை பூலான் தேவியாகப் பார்த்த ஞாபகமும் உண்டு. இப்போது இதே பூலான்தேவியைப் பற்றி இன்னொரு படம் ஒஸ்லோவில் திரையிடப்பட்டுள்ளது என்ற செய்தி என் கவனத்தைத் தொட்டது. பூலான் தேவி பற்றி நான் ஏற்கனவே பார்த்த இந்திப் படங்களைப்போல் இதுவும் இருக்கும் என்ற நினைத்தபடி சென்ற என்னை இந்தப்படம் அதிரவைத்தது. சம்பல் பள்ளத்தாக்கை கிடுநடுங்கவைத்ததாகச் சொல்லப்பட்ட பூலான்தேவி என்ற மிகச்சாதாரண பெண்ணின் கொடுமையான வாழ்வு தாங்கமுடியாத வலியுடன் படமெங்கும் சொல்லப்பட்டிருந்தது.

என்னுள் படம் ஏற்படுத்திய முக்கிய பாதிப்பு என்னவெனில், நாங்கள் எந்தளவுக்கு எழுத்து வியாபாரிகளாலும் சினிமா வியாபாரிகளாலும் ஏமாற்றப்படுகிறோம் என்பதேயாகும். உயர்சாதி என அழைக்கப்படும் ஒரு சமூகம் தனக்கிழைத்த கொடுமையை எதிர்த்த ஒரு சாதாராண பெண்ணொருத்திதான் பூலான்தேவி என்ற சாதாரண உண்மையை இவர்கள் மறைத்தார்கள். பதிலாக தனது காமவெறிக்கு ஆண்களைத்தேடும் வெறிபிடித்தவளாக காட்டினார்கள்; ஈவிரக்கமற்ற கொலைக்காரியாக, கொள்ளைக்காரியாக காட்டினார்கள்; மின்னல் வேகத்தில் தாக்கி மறைந்துவிடும் சாகஸக்காரியாக காட்டினார்கள். இந்தப் படம் எந்தவித பரபரப்புமில்லாமல் மத்தியப் பிரதேசத்தில் எல்லாவிதத்திலும் பின்தங்கிய கிராமம் ஒன்றில் ஏழைப் பெண்ணொருத்திக்கு ஏற்பட்ட சோகங்களை வேதனையுடன் சொல்கிறது.

கனவுகள் சிதைய கணவனின் பின்னால் நடக்கும் அந்தப் பதினொரு வயதுச் சிறுமியின் கண்களில் தெரியும் ஏக்கத்தை என்னவென்று சொல்வது? இரவில் கணவனிடம் கருணை காட்டுமாறு கெஞ்சும்போதும் மறுநாள் காலை "வேலை செய்யாமல் சும்மா இருந்தால் இன்னும் நோகும். எழும்பி வேலை செய்!" என்று மிரட்டும் கணவனை யாசித்து அவள் அழும்போதும் அரங்கம் அவமானப்பட்டது. சில ஆண்டுகளின் பின்னர் பூலான்தேவி விக்ரம்சிங்குடன் வந்து வேறொரு

www.tamilarangam.net

தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த பதினொரு வயதுச் சிறுமி பூலானை மனைவியாக (தகப்பனை ஒத்த வயதுக்காரன்) ஒருவனிடம் தள்ளிவிடப்படுவதுடன் அந்தச் சிறுமியின் சோகம் ஆரம்பமாகிறது. சில ஆண்டுகளின் பின் கணவனினதும், அவனது குடும்பதினரதும் கொடுமைகளைத் தாளமுடியாமல் தாய்வீடு திரும்பும் பூலானை அக்கிராமத்தின் தாக்கூர் உயர்சாதிச் சமூகம் வெறிநாயாக துரத்துகிறது. உயர்சாதிக்கார இளைஞர்கள் அவளைத் தங்களுடன் படுக்க வருமாறு நிர்ப்பந்திக்கிறார்கள். அவள் மறுத்ததும் பஞ்சாயத்தில் நிறுத்தி அவளைக் காமவெறி பிடித்து அலைபவளாக நடத்தை கெட்டவளாக குற்றஞ்சாட்டி அவமானப்படுத்தப்படுத்துகிறார்கள். அவளின் ஏழைத் தந்தைக்கு அவளை வீட்டில் வைத்திருப்பதற்றே அச்சமாக இருக்கிறது; அதனால் அவளின் கணவனிடம் செல்லுமாறு நிர்ப்பந்திக்கிறார். கணவனிடம் செல்ல மறுக்கும் பூலான் பெற்றோர்களுக்கு சுமையாகிறாள். இச்சந்தர்ப்பத்தில் அவள்மீது இரக்கங்கொண்ட உறவினர் ஒருவருக்கு அக்கிராமத்துக் கொள்ளைக்காரர்களுடன் இருந்த தொடர்பினால் விக்ரம் சிங் என்ற கொள்ளைக்கார இளைஞனுக்கு அறிமுகமாகிறாள். அந்த அறிமுகம் விக்ரம்சிங் இன்னொரு சந்தர்ப்பத்தில் அவள்மீது பாலியல்வதை புரிந்த சககொள்ளைக்காரனைச் சுட்டுக்கொன்று அவளை மீட்டதன்பின் உறவாக மாறுகிறது. விக்ரம் சிங்கை பூலான் நேசிக்கிறாள். அவனுடன் சேர்ந்து வாழ்கிறாள். அவனுடன் சிறுசிறு கொள்ளைகளில் ஈடுபடுகிறாள். நீண்டகாலத்துக்குப்பின் அவள் வாழ்க்கையில் வசந்தம் எட்டிப்பார்க்கிறது; ஆனால் நீடிக்கவில்லை. விக்ரம்சிங் சுட்டுக்கொல்லப்படுகிறான். பூலான் தேவியை கட்டி இழுத்துவந்து மாட்டுத்தொழுவத்தில் கட்டி வைக்கிறார்கள். மாறி மாறி பதினெட்டுப்பேர் அவள் மீது பாலியல்வதை புரிகிறார்கள். தெருத்தெருவாக இழுத்துவந்தார்கள். “கீழ்சாதி நாய்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்” என்று கூறி அவளை நிர்வாணமாக்கி, தெருவிலிருந்த கிணற்றில் “நீர் எடுத்து வா” என்றார்கள். உயர்சாதிச் சமூகம் வீணிவடிய சுற்றி நின்று வேடிக்கை பார்த்தது. பின்னர் தப்பிப்போய் விக்ரம் சிங்கின் நண்பனான மான் சிங்குடன் சேர்ந்து தனியாக ஒரு கொள்ளைக் கூட்டத்தை உருவாக்கிறாள். தன்னை வதம் செய்த உயர்சாதிக்காரர்களை பழிவாங்க வேண்டுமென்ற அவளின் ஆத்திரத்துக்கு உயர்சாதி ஆண்கள் பலர் பலியாகின்றனர். ஆட்சி அதிகாரத்தைக் கையில்கொண்ட உயர்சாதிச் சமூகம் கொதித்தெழுகிறது. பொலிஸ் அவளின் கூட்டத்தை வேட்டையாடுகிறது. பூலான்தேவிம் மான்சிங்கும் கூட்டத்தை இழந்து காடுகளில் அலைகின்றனர். வெகுவிரைவில் அவளும் பிடிபட்டுவிடுவாள் என்ற நிலைவரும்போது அதிர்டவசமாக தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன் அவளைச் சரணடையச் சொல்கிறது. “எனது கிராமத்துக்கு கல்வி வசதி ஏற்படுத்தித் தரவேண்டும்” என்பது போன்ற சமூகநலன் மிக்க கோரிக்கைகளை நிபந்தனையாக வைத்துச் சரணடைகிறாள். சில ஆண்டுகளின் பின் ஒடுக்கப்பட்ட மக்களைக் கொண்ட அர ஆட்சியைப் பிடித்ததும் அவளை விடுதலை செய்கிறது.

பெண்ணுடன் குடும்பம் நடாத்தும் அவளின் பழைய கணவனை கழுதைமேல் கட்டி இழுத்து வந்து ஒவ்வொரு காலாக, ஒவ்வொரு கையாக அடித்து முறிப்பதைப் பார்க்க, “இனி எவனாவது சிறுமிகளை மனைவியாக்கினால் அவனுக்கு பூலான்தேவியிடமிருந்து சாவு வரும்” என்று அவள் அதிர்வதைப் பார்க்க, இது கற்பனையல்ல; நடந்த கதை என்பதை நினைக்க, மனம் இலகுவாகிப் போனதை மறுக்க முடியாது.

ஜேர்மனிய தொலைக்காட்சி ஒன்றில் விவரணப்படத்தில் நான் கண்ட உண்மையான பூலான்தேவி நமது ஒழுங்கைகளில் அடிக்கடி காணக்கூடிய சாதாரண ஒரு தோற்றம் கொண்ட பெண். அவளைப்போன்ற ஒரு நடிகையை நீண்டகாலத்தின் பின்னரே கண்டுபிடித்ததாக நெறியாளர் சேகர் கபூர் செவ்வியொன்றின்போது சொல்லியிருந்தார். மனித உறவுகளும், மனித வதைகளும் இயற்கையான அழகுடனும், குரூரத்துடனும் படமாக்கப்பட்டிருந்தமை இந்தியப் படங்களில் இதுவரை காணாத ஒன்று. உண்மை சுடும். அதனால் இந்தப் படத்துக்கு இன்னும் இந்தியாவில் தடையாம். கலாச்சாரம் அல்லது பாரம்பரியம் அல்லது பண்பாடு என்று இந்திய மண்ணாங்கட்டிகளில் ஏதாவது ஒரு மண்ணாங்கட்டிக்கு பாதகம் வரும் என்று காரணம் காட்டியிருப்பார்களாக்கும். இப்படியெல்லாம் இடங்கள் இருக்குமா என்று வியக்க வைக்கும் படப்பிடிப்பு. சம்பல் பள்ளத்தாக்கிற்கே போனதுபோல் உணர்வு.

மனத்தில் கனத்தை ஏற்றிய ஒரு இந்தியப்படம்.

**கண்ணன்**

www.tamilarangam.net



உடம்பெல்லாம் எங்களுக்கு
சக்கரங்கள் முளைத்த தினம்
அன்று!
பொன்வண்டின் குணம்கூடி பூ மொய்க்கும் தனத்தோடு
இந்த உலகிற்கு அப்பாலும் போகின்ற வேகமுடன்
தவழ்ந்தோம்
தவழ்ந்தோம்
ஒன்று.... இரண்டு...... மூன்று.....
சிறு மிட்டாய் உண்பதற்குள்;
கடந்த தூரம் அதிகம்!
மனிதனென்றால்;
இருநாள் எடுக்கும் பயணம்.

புரிகிறதா;
இப்படிச் சொன்னால் புரியாது உங்களுக்கு
போங்கள்!

நீங்கள்
புளித்த கவிதை உண்ட ஜீவன்கள்!
தமிழில்
நவீன
கவிதை அப்பம் தந்தால், விரைவில்
விளங்காது, உங்களுக்கு
இனிக்காது!

நாங்கள் சைக்கிளில் நெடுந்தூரம் போன கதையைத்தான்
சொல்லுகிறேன் கேளுங்கள்;

என்னோடு இருவர்
இருவருக்கும் இரு சைக்கிள்.
மிதிவண்டி,
ஆம்!
எனக்கும் ஒரு வண்டி.
தவழ்ந்தோம் தவழ்ந்தோம் இன்பம் பெருங்காடாய்
தலை உச்சியிலும் விளைய.

நீங்கள் சந்திரனில் கல்பொறுக்கி கொண்டுவந்து வீடுகட்ட
பூ மொய்க்கும் தனத்தோடு சைக்கிளிலே போங்கள்;
ஒரு மிட்டாய் உண்பதற்குள், நடக்கும்!
உங்கள் பல்லும் உருளும்,
தேன் காற்றுவந்து உருட்டி.

www.tamilarangam.net



**சிறுகதை**

- புவனன் -

# தேடல்

0

வீடு முழுவதும் தேடியாச்சு. கிடைக்கேல்ல. ஒருமணித்தியாலத்துக்கு மேல - மூல முடுக்கு -ரொய்லெற் தண்ணிராங் வரைக்கும் தேடியிருக்கெண்டால் யோசிச்சுப் பாருங்கோவன்!
அது இனிக் கிடையவே கிடையாது. இருவரும் முடிவுக்கு வந்திருந்தனர்.

0

உது அவன்தான். அவன் முழுசேக்கயே தெரியும் வலுத்தஆள் எண்டு.
போகேக்க கவனிச்சனியளே, தாய்தேப்பனுக்கு முன்னுக்கே ஓடீட்டான்.

கையில ஒரு Bag வைச்சிருந்தவனல்லேப்பா ?

ஓ. . ஓ. . அதுக்குள்ளதான் நைஸா வைச்சுக்கொண்டு போட்டான்.
உந்த அஞ்சுவயசுக்குள்ள உந்தக் கள்ளப்புத்தியெண்டா, உதுகள் எக்கணம் வளந்தா! சிவசிவா. . .!
உது தானே பிரெஞ்சுக்காரன் வெளிநாட்டுக்காறரை கலைக்கப்பாக்கிறது. நாயள் !

0

இஞ்சேருங்கோ, ஓ சொல்லிப்போட்டன், இனிமேலக்கு மட்டும் கண்டகிண்டதுகள வீடுவாசலுக்க கூட்டிக்கொண்டு வாற வேலயை வைச்சுப்போடாதயுங்கோ.
வீடுவாசல், வாங்கிவச்சிருக்கிற புதுச்சாமானுகள். . இதுகள ஆக்களுக்கு காட்டி விலாசமெழுப்ப எனக்குமென்ன ஆசையில்லயே! அதுக்காவண்டி உப்பிடி காய்ஞ்சுபோய்க்கிடக்கிறதுகளையே வீடுவாசலுக்கு கூப்பிடுறது?

www.tamilarangam.net

0

..ம்.. அவர்தான் உங்கடெ பிறெண்ட் களக்ககனக்கத்தான் லெக்சர் அடிக் கிறுர். பரிஸில குழந்தைப்பிள்ளையள் பாவங்களாம். சின்ன அறேக்குள்ள அதுகளின்ர வாழ்க்கை, இருக்கிறசாமானுகள்ளயும் முட்டவிடமாட்டம். அதில முட்டிஞ அடி, இதில முட்டிஞ அடி. அதுகள் ஒரு சிறை வாழ்க்கைதான் வாழுதுகளாம்.

இல்லக்கேக்கிறன், உவர ஆராலும் சொன்னவையே இஞ்சை வரச்சொல்லி. உவர் பிள்ளைகுட்டியளோட சிலோனில இருந்திருக்கலாந்தானே! நாங்களும் பரிஸில தானே இருக்கிறம். வசதியா இருக்கேல்லையே?

0

அருமந்த பொம்மையப்பா. அவன் ரவி எங்கட பிள்ளைக்காவண்டி சிங்கப்பூரில இருந்தல்லே வாங்கியந்தவன்.
உப்பிடிப்பொம்மையை நானே இதுவரையில பாக்கேல்ல.
என்ன வடிவு. என்னமாதிரி அது பாடுது.
இனி, இவளும் பழகீட்டாள். அது இல்லாம நித்திரையே கொள்ளமாட்டாள்.
இண்டைக்கு என்ன நடக்கப்போகுதோ?
சொல்லிப்போட்டன் ராவைக்கு அழுதால் நீங்கள்தான் பாப்பியள்.

0

இஞ்சேருங்கோ, வடிவாக்கவனிச்சனியளே! அவன் வந்தநேரந்தொடக்கம் அந்த பொம்மையோடதான் இருந்து விளையாடிக்கொண்டிருந்தவன்.
முன்பின் நல்லதுநறியதுகள கண்டறிஞ்சதுகளே?
அட, கேட்டுப்போட்டுக் கொண்டுபோ.

கேட்டாலும் நான் விட்டிருக்கமாட்டன்.

அது தாதேப்பன் ஒழுங்கானதுகள் எண்டாத்தானே பிள்ளையள் ஒழுங்கா வளரும். அதுகளின்ர பழக்கவழக்கங்கள் தானே பிள்ளையளுக்கும் வரும்.
சரி, போய்த்துலையட்டும். கள்ளச்சனியன். சனியன்.
இனிமேலக்கு எங்கயெண்டாலுங் காணட்டும், பாருங்கோ இரகசியமாய்ப் போய்க் குட்டி விர்றன் -சனியனுக்கு.

0

இஞ்சேருங்கோ.. இஞ்சேருங்கோ, பொம்மை இஞ்ச இருக்கப்பா! உந்த பின்அறை யன்னல்ல கொழுவிக்கிடக்கு.

எப்பிடியப்பா அவனுக்கு உந்த உயரம் எட்டினது ?

0

www.tamilarangam.net

# பெண்கள்
## இலக்கியத்திலும் வாழ்க்கையிலும்

சிவகாமி

பெண்கள் நிலையைக் குறிக்க, இன்று பல்வேறு பிரயோகங்கள் நடப்பிலுள்ளன.

ஆணாதிக்கம், பார பட்சம் இரண்டாம் நிலை, கீழ் நிலை அடிமை நிலை, ஒடுக்கு முறை என்று பட்டியல் நீளும். ஆணாதிக்கம், பாரபட்சம் இரண்டாம் நிலை ஆகியவை கருத்தியல் சார்ந்ததாகக் கருதபடும் வேளையில் ஒடுக்கு முறை, அடிமை நிலை என்பவை உடல், மன ரீதியான வன்முறையையும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதையும் குறிக்கிறது. எல்லா சொற் பிரயோகங்களுமே இன்று நிலவி வரும் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமானவைதான்.

எனினும் கடந்த ஐம்பது வருடங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்றைய தலை முறைப் பெண்கள், தங்கள் முந்தைய சந்ததியினரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், சில உரிமைகள் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

கல்வி, வேலைவாய்ப்பு, சமுதாய சீர்திருத்தங்களும் மட்டுமின்றி சிசுக் கொலை, சதி ஒழிப்பு, சம ஊதியம், திருமண வயது, விதவைகள் மறுமணம், விவாகரத்துக் குறித்த சட்டங்களும் கிராமப்புறங்களில் அரசின் நலத் திட்டங்கள், பொருளாதாரத் திட்டங்களையும் இம் மாற்றங்களுக்குக் காரணமாகக் கொள்ளலாம். இம் மாற்றங்களின் தாக்கம் இலக்கியத்திலும் வெளிப்பட்டது.

ஆனால், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதால் சிலவற்றை மறந்து விடக்கூடாது.

நமது சமுதாய, வர்க்க, கட்டமைப்பு இன்னும் மாறவில்லை. சாதி அமைப்பு நம் முன்னேற்றத் திற்கு பெரும் தடைக் கல்லாக உள்ளது.

தொன்னூறு சதவிகித திருமணங்கள், இன்னும் பெற்றோர்களாலேயே நிச்சயிக்கப்படுகின்றன. கூட்டுக் குடும்பம் அழிந்து விட்டதெனினும், 'குடும்பம்' இறுக்கம் குறையாமல், பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் களமாக இருந்து வருகிறது. வரதட்சணைக் கொடுமை இதன் சொச்சமாகக் கட்டவிழ்க்கப் பட்டுள்ளது. பெண் கல்வி விகிதாச் சாரமும், பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பும் குறைவாக உள்ளன. சம ஊதியம் என்பது பெண்கள் செய்யும் வேலைகளுக்குக் குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான சட்டங்கள் நடைமுறைக்குப் போய்ச் சேரவில்லை. பெண்கள் பற்றிய கருத்தியல் இன்னமும் மாறவில்லை. அவளைப் போகப் பொருளாகவே கருதுகிறது விளம்பர உலகம்.

சிறிது குறையுள்ளதுமான சில மாற்றங்களின் தாக்கம், பெண்களிடையே காணப்பட்டாலும் உலகின் பல்வேறு நாடுகளைப் போலவே கீழ்ப் படிதலுள்ள மகள், கற்புள்ள மனைவி. கடமை உணர்வுள்ள தாய் என்ற மூன்று நிலைகளையும் ஏற்று அதைத் தங்கள் வாழ்வின் லட்சியமாகப் பெரும்பாலான பெண்கள் அதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களை வேறு நிலைகளில் வளர விட குடும்ப அமைப்பில் இடமில்லை என்பதை உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை.

நவீன இலக்கியம் என்பது பெரும்பாலும் ஆண்களால் எழுதப் பட்டவை. சுதந்திரத்திற்கு முன்புள்ள கால கட்டத்தில் இந்த பழமை சார்ந்த மூன்று நிலைகளும் வலியுறுத்தப்பட்டதோடு அல்லாமல்,

அவை பெருமைப்படுத்தப்பட்டன. அவர்களது கதைகளில் பெண்கள் கற்பனையின் ஊற்றாகவும், பின் புலத்திலிருந்து கொண்டு ஆணின் வல்லமைக்கு வித்தாகவும் வர்ணிக்கப்பட்டார்கள். குடும்ப வாழ்க்கையை நெறிப்படுத்தி, பழுதற்ற நிறுவனமாகக் கொண்டு செல்வதில் அம்மாக்களின், மனைவிகளின், அக்காமார்களின் பங்கு பற்றியதாக இருந்தன. மரபு சார்ந்த ஒழுக்கம், முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. மீறல் என்ற கேள்விக்கே இடமில்லாததாக இருந்தது. எனினும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையும் அநீதியையும், நிலவும் அசமத்துவத்தையும், கலாப்பூர்வமாக வெளிக் கொணரத் தவறவில்லை.

அந்த வகையில்தான் பெண்கள் விடுதலைக்கு அவர்களின் பங்களிப்பை நிர்ணயிக்க முடியும்.

சமுதாய, பொருளாதார மாற்றங்களின் விளைவாக, சம

உரிமையும், பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியும் வெகுவாகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

.....(இலக்கியத்தில்) 1950க்கும் 60க்கும் இடைப்பட்ட...
புதுமைப்பெண் மெல்லத் தலையெடுத்தாள். இது படித்த பெண்கள் இலக்கியம் படைக்க வந்ததன் விளைவாகக் கொள்ளலாம்.

பேசப்பட்டது குறைந்து, கிடைத்த உரிமைகளைப் பயன்படுத்துவதில், அனுபவிப்பதில் எழுந்த பிரச்சனைகளையும், சிக்கல்களையும் மையமாகக் கொண்டு படைப்புகள் வரலாயின. மாற்றங்களின் விளைவால் எழுந்த தனி மனிதப் பிரச்சனைகளும் மையப்படுத்தப்பட்டன. வேலைக்குச் செல்லும் பொருளாதார சுதந்திரம் பெற்ற பெண்கள் அங்காங்கே நாவல்களில் கதாநாயகிகளாக இடம் பிடித்தனர். படித்தப் பெண்கள் நிறைய வந்து போயினர். 1950க்கும் 60க்கும் இடைப்பட்ட காலத்தில்தான் புதுமைப்பெண் மெல்ல தலை எடுத்தாள். இது படித்த பெண்கள் இலக்கியம் படைக்க வந்ததன் விளைவாகக் கொள்ளலாம். சமூக சேவை, வேலை இவற்றை வாழ்க்கையின் பிரதான அம்சங்களாக பெண்கள் ஏற்றுக் கொள்வதாகப் படைப்புகள் வெளிவரத் தொடங்கின. இம் மாதிரி எழுத்துக்களில் குறிப்பாக இருவகையான போக்குகள் வெளிப்பட்டன.

கல்வுஅறிவு பெற்ற, பொருளாதார சுதந்திரமும்பெற்ற, சமுதாயக் கட்டுப்பாடுகளினால் அதிகம் பாதிக்கப்படாத மேல்தட்டுப் பெண்களைப் பற்றிய எழுத்துக்கள் ஒரு வகை. அவர்களது பிரச்சனைகள் தனிமை, சமுதாயத்தை இவர்களாகவே அல்லது இவர்களை சமுதாயமே தள்ளி வைத்தது போன்ற ஒரு ஒதுக்கம், தவறாக புரிந்து கொள்ளப்பட்டமை. எனவே அப்பெண்கள் தங்கள் வாழ்க்கை நியாயங்களை முன் வைத்து சமுதாய நியதிகளையும் தகர்த்து இன்னும் அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்களாக;

இன்னோரு வகை நடுத்தர வர்க்கம் மற்றும் கிராமப் பெண்கள் பற்றியது அவர்களது பிரச்சனைகளோ அன்றாட வாழ்க்கையின் அவலங்களும் போராட்டங்களும்.

பெண்களை, சீதை, சாவித்திரி என்று அச்சுக்களில் வார்த்தெடுத்தவர்கள், விழிப்புணர்வு பெற்றப் பெண்களையும் - தலித் இன்று தங்கள் சுய அடையாளங்களைக் காண விழைவது போல்-ஆணாதிக்க சமுதாயத்தில் தங்கள் சுய அடையாளத்தைக் காண விரும்பிய பெண்களைப் படைத்ததைக் குறிப்பிடத்தக்க மாற்றமாகக் கருதலாம்.

நவீன தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக நாவல் இலக்கியத்தில், லக்ஷ்மி, அனுத்தமா போன்றோர் தியாகப் பிம்பங்களைப் படைத்து கண்ணீர்க்கடலில் மிதக்க விட்டனர். ராஜம்கிருஷ்ணன் இன்றும் ஆணாதிக்கத்தை எல்லா நிலைகளிலும் எதிர்க்கிறார் எனினும் குடும்பம் என்று வரும் போது, அதை மாற்று இல்லாத உன்னத நிறுவனமாகப் பார்க்கிறார். பெண்ணின் சுய அடையாளங்களைத் தேடுவதாக அம்பையின் எழுத்துக்கள். நளினமான மெல்லிய தொனியில் ஆணாதிக்க எதிர்ப்புக் குரல் வாஸந்தியிலும் சூடாமணியிலும். பெண்களின் மீதான ஒடுக்கு முறை குறித்து சிவ சங்கரி, திலகவதி, காவேரியும் எழுதி வருகிறார்கள். சமீப காலங்களில் வத்ஸலாவும் அங்காங்கே குறிப்பிட்டுச் சொல்லும் படியான பதிவுகளை ஏற்படுத்தி இருக்கிறார். பிரபஞ்சனும் இவர்களுடன்.

1950களில் தலை காட்டிய 'புதுமைப் பெண்' எத்தகையவள்? வரதட்சணைக் கொடுமை, பாலியல் வன்முறை குறித்து மேலோட்டமாகக் குரல் கொடுப்பவளா? கல்வி கற்று குடும்ப பொருதாரத்திற்குத் தன் பங்கை அளிப்பவளா? சுயமாகச் சிந்தித்து சிக்கல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் சமயோசிதம் நிறைந்தவளா? புதுமைப்பெண் எப்படிப்பட்டவள்?

புதுமைப்பெண் வழக்கமான அச்சிலே வார்க்கப்படாது தனக்கென தனி அடையாளம் தேடிக் கொண்டவள்,...

சமுதாய நெருக்கடியையும் மீறி, தன் வாழ்க்கையை, தான் விரும்பும் வழியில் அமைத்துத் தன்னைச் சுதந்திரமாக்கிக் கொள்பவள்..

கல்வியறிவும், பொருளாதார சுதந்திரமும் பெற்றவள். ஆணைத் தனக்கு நிகராகக் கருதுபவள்.

இன்றுள்ள சிக்கல்களில் சமயோசிதமான வழிகளைத் தேர்ந்தெடுப்பதும் தன்னை நிலைநாட்டிக் கொள்வதுமான போக்குகளைத் தவிர்த்து, தன் தளைகளைத் தறித்துக் கொண்டு அர்த்தமுள்ள வாழ்வையும், இன்றைய சமுதாயத்தின் நியதிகளை, மரபுகளைக் கேள்விக்குட்படுத்திபுதிய சமுதாயத்தைப் படைப்பவளாக புதுமைப் பெண் இருப்பாள்

இத்தகைய பெண் நம் இலக்கியத்தில் படைக்கப் பட்டிருக்கிறாளா? என்று எனக்குத் தெரியவில்லை.

புதுமைப் பெண்ணைப் பற்றிய கருத்துக்கள் பெரும்பாலும் மேலை நாட்டில் தோன்றியவையே...19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தொடங்கிய தாராளவாதம், மனித உரிமைகள் இயக்கத்தைத் தொடர்ந்து, பெண்ணியச் சிந்தனைகள் வலுப்பெற்றன. இலக்கியத்தில் பெண் எழுத்து எனத் தொடங்கி இன்று பல்பேத மறுப்பு வரை அவற்றிற்கு நீண்ட வரலாறு உண்டு.

வரலாற்றை மறுக்கும் விதமாக திரு. சுந்தரம் சில வாதங்களை முன் வைத்தார். வேத காலத்திலும் சங்க காலத்திலும் பெண்களை உயர்வாகப் போற்றி மதித்த நிலை இருந்தது என்று. ஒன்றிரண்டு ரிஷி பத்தினிகள், பெண்பாற்புலவர்களை உதாரணங்களாகச் சொன்னார். வேலைப்பாகுபாடும், தந்தை வழிச் சமுதாயமும், ஒருதார மண முறையும், குடும்பமும் தோன்ற ஆரம்பித்த கால்களிலேயே பெண்

பெண்ணியச் சிந்தனைகளின் விளைவாக இன்றைய இலக்கியத்தில் பெண்கள் தங்கள் மரபு ரீதியான பாத்திரங்களை விடுத்து, தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்கிறார்கள்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிமைப்பட்டுவிட்டாள். இவையே பெண் அடிமை முறையின் வரலாற்றுக் காரணங்கள் என்பதை மறுக்கும் விதமாக அவர் பேசியது வியப்பளித்தது. நால்வருணங்களும் குடும்பமும் நிலை பெற்ற வேத காலத்திலும், பரத்தையர் இல்லம் செல்வது நிறுவனப் படுத்தப்பட்ட காலத்திலும், பெண்கள் நிலை உயர்வாக இருந்திருக்க முடியும் என்று நம்புவது இந்து மதத்தையும் மரபு நியதிகளையும் உயர்வாகத் தூக்கிப் பிடிக்கும் முனைப்பில் எழுந்தவையாகத் தான் இருக்க முடியும்.


மேலெழுந்தவாரியான சீர்திருத்தங்கள், எதிர்பார்க்கும் மாற்றங்களைக் கொண்டு வந்து விடாது. குடும்பத்தை, மாற்று இல்லாத உன்னத நிறுவனமாக்குவதில் பெண்கள் முடக்கப்படுகின்றனர். அதைக் கேள்விக்குரியதாக்கிய ஒரு சிறிய பரிசோதனை சோவியத் ரஷ்யாவில் நிகழ்ந்தது. விளைவாக அநாதை இல்லங்கள் எழுந்தன. குடும்பத்தின் மாற்று மேலை நாடுகளில் திருமணமாகாத தாய்களையும்-தொடர்பான பிரச்சனைகளையும் உருவாக்கியிருக்கிறது. வரையரையற்ற பாலுறவு எயிட்ஸில் முடிந்திருக்கிறது. குடும்பத்திற்கு பதிலாக சில மேலை நாடுகளில் குழு வாழ்க்கை வந்திருக்கிறது. ஆண் பெண் சமத்துவம் என்பது, பால்பேத உணர்வு அற்ற உயிரி நிலைக்குச் செல்ல, பழைய அனுபவங்களையும் கணக்கில் கொண்டு குடும்பத்தை வென்றெடுக்கும் நிலையை நோக்கிய நகர்வு அவசியமாகிறது. பெண்ணுக்கு பிரத்யேகமான குழந்தை பிறப்பு. இருவருக்கும் பொதுவான குழந்தை வளர்ப்பை இருவருக்கும் சாதகமானவையாக வளர்த்தெடுப்பது எப்படி என்பது குறித்தும் ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

எல்லாக் கலை இலக்கியங்களின் நோக்கும் மனிதனை சாந்த நிலைப்படுத்துவது என்றால் பெண் விடுதலை என்பது, ஆண் பெண் சமத்துவத்தில் மட்டுமன்றி பால்பேதம் பாராட்டாத உயிரி என்ற நிலைக்கு எடுத்துச் செல்வதாகவே இருக்க முடியும். பெண் பற்றிய பழைய கருத்துருவாக்கங்கள் சிதைக்கப்பட்டு புதிய கருத்துருவாக்கங்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

கருத்தரங்கங்கள் இம்மாதிரியான அறிவுப்பரவல் என்றளவில் இருந்தாலே கூட அதன் நோக்கத்தில் வெற்றியடையும் என்று கூறி விடலாம்.

பெண்ணியச் சிந்தனைகளின் விளைவாக இன்றைய இலக்கியத்தில் பெண்கள் தங்கள் மரபு ரீதியான பாத்திரங்களை விடுத்து, தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் பெரும்பாலான பெண்களுக்கு உதாரண நாயகிகளாக இல்லாவிடினும் ஆழந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறார்கள் ... ஏற்படுத்துவார்கள்.

நன்றி **கணையாழி**






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேவை ஒரு பொதுப் பாடத்திட்டம்

புலம்பெயர் வாழ்வு தற்காலிகமானது என நாம் எமது ஆறுதலுக்காக இடையிடையே கூறிக் கொண்டாலும், இந்த நாடுகளில் எமது வாழ்வு மெல்ல மெல்ல நிலைபெறத் தொடங்கியுள்ளது என்பது உண்மை. இந்த வாழ்வின் பல அம்சங்கள் எமக்கு முரண்பாடாக இருப்பினும், நாம் அவற்றையெல்லாம் வழமையாக ஏற்றுக் கொண்டு வாழப் பழகத் தொடங்கிவிட்டோம்.

நீண்டகாலம் எமது மண்ணில் வாழ்ந்து, எமது மண்ணின் காற்றையே இங்கு புலம்பெயர்ந்த பிறகும் மனதால் சுவாசித்துக்கொண்டு பெரியவர்கள் வாழ்ந்தாலும், எமது அடுத்த தலைமுறையின் வாழ்வு சிக்கல்களை எதிர்நோக்குகிறது என்பதில் ஐயமில்லை. தமது அடையாளம் பற்றி இந்தச் சமூகங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் இலகுவிற் தீர்க்கப்படக் கூடியனவல்ல.

ஒரு இனம் தனது அடையாளமாக மதம், நிலம், மொழி என எவற்றையும் கொண்டிருக்கக்கூடும். நாம் மொழியாலேயே எம்மை அடையாளப்படுத்துபவர்கள். எமது மொழி பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. எமது அடுத்த தலைமுறை தனது தாய்மொழியாகத் தமிழைக் கூறமுடியாது போய்விடுமோ என்ற அச்சம் பலரிடை எழாமலில்லை. மொழியை இழந்தால் நாம் எம்மையே தொலைத்தவர்களாவோம். கண்டம் விட்டுக் கண்டம் சென்ற தமிழர்கள் மொழியை மறந்த பல வரலாறுகளையும் நாம் கண்டிருக்கிறோம்.

எமது அடையாளமான மொழியை நாம் இழக்கக்கூடாது என்ற அக்கறையுடனும், வேறு பல காரணங்களுக்காகவும் உலகில் தமிழர் வாழும் நகரங்கள் எங்கனும் தமிழ்ப் பள்ளிகள் சிறப்புற நடாத்தப்படுகின்றன. இவற்றை வெவ்வேறு அமைப்பினர், தனிநபர்கள் நடாத்துகின்றனர். இவற்றுக்கிடையே எத்தனை வேறுபாடுகள் காணப்படினும், இந்தப் பள்ளிகளை நடாத்தித் தமிழ் மொழியை மழலையாகக் கேட்க இந்த நாடுகளிலும் சந்தர்ப்பம் ஏற்படுத்த உழைக்கும் அனைவரது உழைப்பும் தலைவணங்கப்பட வேண்டியது.

புலம்பெயர் நாடுகளின் தமிழ்ப் பள்ளிகளில் அவற்றின் வசதிக்கேற்பப் பல்வேறு பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. எந்தப் பாடம் பயிற்றுவிக்கப்படினும், முக்கியமானது தாய்மொழியாகவே உள்ளது; அவ்வாறே இருத்தலும் அவசியம். ஆனால் இந்தப் பாடசாலைகள் அனைத்திலும் மொழிப் பயிற்றுவிப்பில் ஒரு பொதுவான பாடத்திட்டம் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. இது மிக அவசியமானது.

எல்லாப் பாடசாலைகளதும் நிர்வாகிகள் ஓரிடத்தில் கூடி இவ்வாறான முயற்சியைச் செய்வது சாத்தியமில்லை. ஆனால் ஒருவரோடொருவர் தொடர்புகளை வளர்த்துக்கொண்டு இவ்வாறான முயற்சியில் படிப்படியாக ஈடுபடல் அவசியம். சூழலுக்கேற்பக் கற்பிக்கும் முறைகள், நேரங்கள் மாறுபட்டாலும் அடிப்படை ஒன்றாக இருத்தல் பயன்தரும் என்பது கண்கூடு.

சுவடுகள் 65,
பங்குனி 1995

www.tamilarangam.net

# துரண்ணியத்தில் ஒரு கலைமாலை



இக் கலாச்சார மாலை நிகழ்வு பற்றி எழுதுவது மிக வேதனையானது. அதை விட வேதனை இதைப் பற்றி எழுதாமல் விடுவது. நிகழ்வுகள் எழுதக் கூடிய எந்தத் தரத்தினையும் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் எனது எழுத்துக்கள் துரண்ணிய தமிழ்க் கலாச்சார நிர்வாகிகளுக்கு, இந்த வகை நிகழ்வுகளை நிகழ்த்தி தங்களதும், பார்வையாளர்களதும் ஓர் அருமையான மாலையை வீணாக்கக் கூடாது எனும் ஓர் சிறு பொறியை அவர்கள் எண்ணத்தில் ஏற்படுத்துமாயின், என்னை எழுதத் தூண்டிய வேதனை மறையக் கூடும். ஆகவே இது ஒரு விமர்சனக் குறிப்பன்று. ஓர் துன்ப அபிப்பிராயம் மட்டுமே.

நிகழ்வுகள் தனியாகக் குறிப்பிடும் தரத்தையோ கலைஞர்களின் அக்கறையையோ கொண்டிருக்கவில்லை. நிகழ்வுகளின் தரத்தினை விளக்க ஓரிரு நிகழ்வுகளை மட்டும் இங்கு குறிப்பிடல் போதுமானது. சினிமாப் பாடல்களைப் போட்டு வளரும் பிஞ்சுகளையும் மேடையில் ஏற்றி, பெரியோர்களும் சேர்ந்து போட்ட ‘கும்மாளம்’ எமது கலாச்சாரம் பற்றி நோர்வேஜிய மனங்களில் ஒரு கேலியான ஓவியத்தையே வரையக் கூடும். தமிழ்நாட்டு மூன்றாம் தர சினிமாக்களால் எமது சமுதாயம் சிதைவுறுவதைக் கண்டு, வேதனைப் பட்டிருக்க வேண்டிய தமிழ்ச் சங்கம் (துரண்ணியம்) அதையே எமது கலாச்சார வடிவமாக்கி விடுவது ஒரு புரியாத வேதனை.



அனேகமாக எல்லா நிகழ்ச்சிகளிலும் சினிமாத்தனம் மிகைப் பட்டிருந்தது. தவிர ஒரு ஆங்கிலப் பாடலுக்கு சிறுவன் நவீன மேற்கத்தைய நடனம் (break dance) ஆடினான். இங்குள்ள நல்ல கலைகளை (நடனக் கலை) அல்லது நமது கலைகளையும் சொல்லித் தராது, இளவயதிலேயே தவறான வழிகளைக் காட்டுவது ஓர் அவலமான எதிர்காலக் குறியீடாகும். இவ்வகையான நவீன வியாபாரக் கலைகளில் இருந்து தமது உண்மையான கலாச்சார அடையாளங்களை இனிவரும் தலைமுறைகளுக்கு இனம் காட்டி மேற்கு நாடுகளே மிகப் போராடி வருகின்றன. எமக்கு ஏன் இந்த விஷப் பரீட்சை?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடையே ஒரு ஆபிரிக்க இசை. அதை வாசித்தவர்கள் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள். மேடையில் ஆடிய நோர்வீஜியப் பெண் நன்றாக ஆடினார். ஆனால் எமது இரு இளைஞர்கள் போலவும் ஆடினார்கள். கலைகளில் ஏன் இந்த வக்கிரம். ஆபிரிக்க நடனம் தெரியாவிட்டால் ஆடாமல் விடலாம் தானே.

எமது கலாச்சாரம் தொடர்பாகக் கலைஞர்களுக்கு மட்டுமல்ல, அறிவிப்பாளர்களுக்குக் கூட தீவிர அக்கறை இன்மையே காணப்பட்டது. "குறத்தி நடனம்" - இந்தியாவின் வீதிகளில் பிச்சை எடுக்கும் போது இந்த நடனம் ஆடப்படும் என்ற அறிவிப்புடன் நிகழ்த்தப்பட்டது. இந்தியாவில் மலைக்காடுகளில் வாழ்ந்த குற இன மக்கள் என்று அழைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தின் பாரம்பரிய நடனமே குறத்தி நடனம் என அடையாளம் காணப்படுகிறது. சினிமாப் படங்களை வைத்து தமிழ்க் கலாச்சாரத்தை விளக்க முயன்றால் இவ்வகைக் கலாச்சாரக் கொடூரங்கள் தவிர்க்கப்பட முடியாது தான்.

ஒரு நகைச்சுவை நாடகம். உடனடி உதவி பூஜ்யம், பூஜ்யம், பூஜ்யம்..... ஒரு வைத்தியர் தனது நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை மூலம் மனித மூளைக்குப் பதில் ஆட்டு மூளையைப் பொருத்தி விட, நோயாளி ஆடு மாதிரிக் கத்த நாடகம் முடிவு பெறுகிறது. இதில் ஏற்கனவே வந்த சினிமாப் பகிடிகளும் கலக்கப் பட்டிருந்தது. எந்த விதமான நாடக அக்கறையும் அற்ற இந்த முயற்சி, ஏனைய பெரும்பாலான நிகழ்வுகள் போல் பூஜ்யம் தான்.

இது நோர்வேஜிய மக்களுக்காக துரண்ணிய தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்க் கலாச்சார (?) மாலை. முன்பு பெருமளவு வரும் நோர்வேஜியர்கள், மிகக் குறைந்த அளவிலேயே (10 அல்லது 12 மட்டும் தான்) வந்திருந்தார்கள். எமது கலாச்சாரச் சீரழிவை விரிந்த அளவில் நிகழ்த்தாது, மிகச் சிறிய வீச்சுக்குள் (குறைந்த நோர்வேஜியப் பார்வையாளர்களுக்கு) நடாத்துவது, அந்த வேதனையிலும் ஒரு ஆறுதலாக இருந்தது. கடந்த தமிழ்க் கலாச்சார மாலைகளின் ஒரே சாதனை நோர்வேஜியப் பார்வையாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது தான் போலும்.

● யோகி

## சர்வ 'அதிகாரமும்' கொண்ட அப்பா

●
வாந்தி முதலாய்
வலியால் துடித்து
முனகி.....
முக்கி......
மலமும் கழிந்து,
யோனி கிழிந்து
குருதி வழிந்து.....

இவ்வளவு நிகழ்வும்
நடந்து முடிந்தது.

தாதி ஒருத்தி
சேதி சொன்னாள்
'சுகப் பிரசவம்'

நானும் எனது பங்களிப்புக்காய்,
இனிப்புப் பெட்டியுடன்
நண்பனைத் தேடி.....
கேட்டான்,
சொன்னேன் 'சுகப்பிரசவம்'

நண்பனும் சொன்னான்
'எனது ஐந்து குழந்தைகளும்
சுகப்பிரசவம்தான்'

என்ன சுகம்! என்ன சுகம்!
ஆகா
அப்பன் ஆகுதல் என்ன சுகம்!!

● இராஜீன்குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆபிரிக்காவின் பொருளாதாரத்தை அச்சுறுத்தும் எய்ட்ஸ்




எய்ட்ஸ் நோய் உலகில் முதலில் எங்கிருந்து தோன்றியது என்பது பற்றிய முரண்பாடான கருத்துக்கள் இருக்கின்ற போதும், இதற்கான முழுப்பழியையும் ஆபிரிக்க சமூகம் மீது சுமத்துவதில் மேற்கத்தைய தொடர்பு சாதனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆபிரிக்காவின் வறுமையும் சமூகக்கட்டுமானங்களும் இந்நாடுகளில் எய்ட்ஸ் நோய் வேகமாகப்பரவி வருகின்றமைக்கு முக்கிய காரணங்களாகும். இந்நாடுகளில் காணப்படும் தீவிர மதக் கலாச்சார கட்டுப்பாடுகளும் இந்நோய் வேகமாகப் பரவக்காரணங்களாகும் பொருளியல் நிபுணர்களின் கருத்துப்படி ஆபிரிக்காவின் உழைக்கும் வர்க்கத்தினரில் குறைந்தபட்சம் 25% ஆனோர் 2010 ம் வருடத்திற்குள் இந்நோயினால் கடுமையான பாதிப்பிற்குள்ளாவதுடன் இந்நாடுகளில் பொருளாதார சீர்கேடுகளும் உச்சநிலையை அடையும் எனவும் இன்னும் எட்டு வருடங்களில் சுமார் 70 - 80 இலட்சம் ஆபிரிக்கர்கள் எய்ட்ஸ் நோயால் மரணமடையவுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர். எய்ட்ஸ் நோயிற்கெதிராக ஆபிரிக்க நாடுகள் கடுமையாக போராட வேண்டும் எனத் தெரிவித்துள்ள டாக்டர் Kekoura Kourouma (Guineas AIDS program leder) ஒரு எய்ட்ஸ் நோயாளி இயலாத நிலையில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படவோ அல்லது தனது கடன் நிலுவைகளை செலுத்துமாறு நிர்ப்பந்திக்கவோ முடியாது என்ற சர்வதேச சட்டங்களை கோடிட்டுக் காட்டுகின்றார்.

இன்றைய நிலையில் ஆபிரிக்க சமூகத்தில் 15 - 49 வயதிற்கிடைப்பட்டவர்களில் சுமார் 2.5% ஆனோர் எய்ட்ஸ் நோயை உருவாக்கக் கூடிய HIV வைரசுக் கிருமிகளால் தாக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தென் சகாராவின் முக்கிய பொருளாதார வளங்களான சுரங்கத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில், கால் நடை வளர்ப்புத் தொழில் மற்றும் கனிமத் தொழில் நிறுவனங்கள் என்பன முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஸம்பியா நாட்டின் நகர்புறங்களில் வாழும் மக்களில் சுமார் 1/5 பகுதி பிரிவினர் HIV வைரசு கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான செப்பு இரும்பு உட்பட சுரங்கத்தொழில் முற்றாக மூடவேண்டிய நிலை விரைவில் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கென்யா உகண்டா போன்ற நாடுகளில் இந்நோயின் தாக்கம் அந்நாடுகளின் பொருளாதாரத்தை முன்னெப்போதும் இல்லாத அளவில் பாதிப்படையவைத்துள்ளது. 1988 இல் மேற்கொள்ளப்பட்ட நாணய மதிப்பிறக்கமும் வர்த்தக நிலுவையின் மோசமான தாக்கமும் சென்மதிநிலுவையில் (Payment of balance) தோன்றிய வலுவான கடன் சுமைகளும் சேர்ந்து இந்நாடுகளின் பொருளாதாரத்தை அதாள பாதாளத்தில் தள்ளிய அதேசமயம் இந்நாடுகளின் முக்கிய வருமானமாக இருந்த சுற்றுலாத்துறையும் முற்றாகக் கைவிடப்பட்டுவிட்டது. இந்நிலையில் இந்நாடுகளில் எதிர்காலம் பற்றிய கேள்வியே முன்நிறுத்தப்படுகின்றது. போதியளவு பொருளாதார உதவிகள் வழங்குவதாக மேற்கதைய நாடுகள் கூறியுள்ள போதிலும் கடந்த 5 வருடங்களில் வாக்களித்தில் 1/4 பகுதிகூட வழங்கப்படவில்லை வழங்கப்பட்டதும் கூட ஊழல் துஷ்பிரயோகங்களிற்கு உள்ளாகி அப்பாவி மக்களிற்கு *எதுவுமே* கிட்டவில்லை.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்துப்படி (WHO) உலகில் வேறு எந்தப் பிராந்தியமும் பாதிக்காத அளவிற்கு ஆபிரிக்கா மீதான எய்ட்ஸின் தாக்கம் அகோரமானது எனத் தெரிகின்றது சுமார் 7 வருடங்களுக்கு முன்பே எய்ட்ஸ் நோய் பரவலிற்கு எதிராக முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் எதிர்பாக்கப்பட்டதைவிட குறைந்தளவிலான ஒத்துழைப்பையே பொதுவாக ஆபிரிக்க அரசுகள் வழங்கின. இந்நாடுகளில் காணப்படும் ஸ்திரமற்ற அரசியலும் மதக்கலாச்சார சம்பிரதாயங்களும் எய்ட் ஸ் நோய்க்கெதிரான எதிர்பியக்கம் வலுபெறாமைக்குக் காரணங்களாகும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்துப்படி தற்போது உலகில் சுமார் 20 மில்லியன் மக்கள் HIV வைரசுக் கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் (எய்ட்ஸ் நோயாளிகள் இதில் உள்ளடக்கப்படவில்லை) இதில் 9 மில்லியன் நோயாளிகள் ஆபிரிக்கர்கள் என்றும் சுமார் 1 மில்லியன் ஆபிரிக்கர்கள் தற்போது மரணத்தை நெருங்கிவிட்டதாகவும் புதிதாக 14 மில்லியன் எய்ட்ஸ் நோயாளிகள் 2000 ம் ஆண்டிற்குள் உருவாகுவார்கள் என்றும் தெரிவித்துள்ளனர். தற்போது HIV வைரசுக் கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இன்னும் 10 வருடங்களிற்குள் எய்ட்ஸ் நோய்க்கான அறிகுறிகளை பெறுவதற்கான வாய்ப்பு மிக மிக அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் எய்ட்ஸ் நோயால் இறப்போர் எண்ணிக்கை அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கணிசமான அதிகரிப்பாய் இருக்கும் என்றும் தெரியவருகின்றது. பரந்துபட்ட ஆபிரிக்காவின் ஒரு சில நகரங்களில் காணப்படும் வைத்தியசாலைகளில் உள்ள நோயாளிகளில் 80% நோயாளிகள் HIV வைரசுக் கிருமிகளாலோ

www.tamilarangam.net

அல்லது எய்ட்ஸ் நோயாளிகளாலோ நிரம்பி வழிகின்றன. எய்ட்ஸ் நோய் அறிகுறிகள் தெரிந்தவுடனேயே அதற்காகப் பாவிக்கும் மருந்துகளின் விலை சாதாரண ஒரு ஆபிரிக்கனால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாதவை குறிப்பாக தற்போது பிரபல்யமடைந்துள்ள மருந்தான *AZT* பொதுவில் எந்த ஆபிரிக்க நாட்டின் அரச மருத்துவ மனையிலும் பாவனையில் இல்லை. வசதிபடைத்தவர்கள் மட்டும் தனியார் மருத்துவ மனையில் இம் மருந்தினைப் பெற்றுக்கொள்கிறார்கள். இப்பிரச்சனையில் மனதை உறுத்தும் செய்தி என்ன வென்றால் எய்ட்ஸ் நோயால் இறக்கும் நோயாளிகளால்

எதிர்வரும் 2000 ம் வருடத்திற்குள் சுமார் 10 மில்லியன் குழந்தைகள் அனாதைகளாகவுள்ளனர் அதில் குறிப்பிட்ட அளவிலான குழந்தைகள் HIV வைரசுக் கிருமிகளால் பாதிக்கப்படவுள்ளனர் என்பதும் தான்.

HVI, AIDS பற்றிய சில முக்கிய குறிப்புக்கள்

HIV - Humant munsviktvirus

AIDS - Acquired mmune deficiency syndrome

நோய்பரவுதல்

இரத்தத்தனூடாக, பாலியல் உறவுமுறைகள், நோயுள்ள தாயார் கர்ப்பமடையும் போது பிள்ளைக்கும் நோய் தொற்ற வாய்ப்புண்டு.

HIV வைரசுக் கிருமிகளாலோ அல்லது AIDS நோயிற்குள்ளாகிய ஒருவர் கூடியவரை இந்நோய் மற்றவர்களிற்கும் பரவாமல் இருப்பதற்குரிய மருந்து ஆலோசனைகளைக் கைக்கொள்ளல் அவசியம் அதேசமயம் இந்நோயாளியைப் பராமரிக்கும் வைத்தியர்கள் தாதிகள் உதவியாளர்கள் அனைவரும் இதற்குரிய விசேட பயிற்சி முறைகளைக் கையாளவேண்டும்.

HIV, AIDS போன்ற நோய்களின் தாக்கத்திற்குள்ளாகியுள்ள நோயாளியைக் கண்டு யாரும் அஞ்சி ஒடவேண்டிய அவசியமில்லை. முறையான தற்பாதுகாப்பு முறைகளைக் கையாண்டால் எதுவித ஆபத்தும் இல்லை. முக்கியமாக இந்நோய்களின் தாக்கத்திற்குள்ளானோர்க்கு போதிய மனஅமைதியையும் மனோவியல் ரீதியான ஆதரவும் அரவணைப்பும்

இன்றியமையாதது. இவர்களின் உணர்வுகள் உணர்ச்சிகளிற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் எப்போதும் அவசியம் இது நோயாளிற்கு மட்டுமல்ல நோயினால் பாதிப்புற்றவரின் நெருங்கிய உறவினர்களிற்கும் மனோவியல் ரீதியான ஆதரவும் அன்பும் காட்டப்படல் வேண்டும்.

உலகின் முதலாவது எயிட்ஸ் நோயாளி 1981ம் ஆண்டு அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டார். கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில் மேற்கு ஐரோப்பாவில் பல எயிட்ஸ் நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டனர். வைத்தியத்துறையையே அதிர்ச்சியில் ஆழ்த்திய இந்நோய் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக தற்போதைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

*-* நிலா *-*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நீறு பூத்த நெருப்பு

செவ்வந்தி



பாலஸ்தீனம் - உலகில் தொண்மையான நாகரீகத்தையும் கலாச்சாரபண்பாடுகளையும் கொண்ட பழமையான நாடு தொடர்ச்சியாக பல நூற்றாண்டுகளாக ஏகாதிபத்தியவாதிகளாலும் ஆதிக்க வெறியர்களாலும் அடிமைப்படுத்தப்பட்டு சூறையாடப்பட்டு வந்தாலும் பாலஸ்தீன மண்ணும் பாலஸ்தீன மக்களும் ஒடுக்குமுறையாளர்களிற்கும் பாசிஸ சியோனிஸ்ட்டுக்களுக்கு சிம்ம சொப்பனமாகவே இருந்துவந்துள்ளனர். உலகில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய எழுச்சிப் போராட்டங்களிற்கு உதாரணமாக விளங்கும் பாலஸதீனமக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை எத்தனை ஒஸ்லோ ஒப்பந்தங்கள் வந்தாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை தற்போது அங்கு நடந்துவரும் சம்பவங்களே எடுத்துரைக்கின்றன.

ஐக்கிய நாடுகள்(ஐ.நா) சபை தனது 50வது ஆண்டை விரைவில் நிறைவு செய்யவுள்ளது. சர்வதேசங்களின் அங்கீகாரத்துடன், சர்வதேச நாடுகளின் சார்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் மேற்குலக முதலாளிகளிற்கும் பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் ஐ.நா சபையின் பிறப்பே பயங்கரவாதத்துடனும் பாசிஸ அரசின் ஸ்தாபிதத்துடனேயே பிறந்தது. ஐ.நா சபையால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பாஸிச சியோனிஸ இஸ்ரேல் எனும் நாடு நடத்திய மனித உயிர்களின் நரபலி வேட்டையும் ஒரு இனத்தை பூண்டோடு அழிக்க முயன்றதையும் அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் வெறுமனே வேடிக்கை மட்டும் பார்க்கவில்லை. போதிய ஆயுதங்களும் பொருளாதார வசதிகளும் வழங்கி இஸ்ரேலின் பயங்கரவாதத்தை முடிந்தளவு உரமிட்டு வளர்த்து வந்தன.

ஜேர்மனிய நாஜிகளாலும் இத்தாலிய பாசிஸ்ட்டுக்களாலும் சித்திரவதை செய்து துரத்தப்பட்ட யூதர்கள் ஆயிரமாயிரமாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலஸ்தீனர் வந்தபோது இன்முகத்துடன் வரவேற்று அடைக்கலம் கொடுத்த பாலஸ்தீன அப்பாவி மக்கள்மீது தமது சியோனிசத்தை கட்டவிழ்த்துவிட்ட யூதவெறியர்கள் மிகக்குறுகிய காலத்திலேயே பாலஸ்தீன மக்களை அவர்களது சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கியது ஈவுஇரக்கமின்றி பாலஸ்தீன மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று பாலஸ்தீன நாட்டைக் கொள்ளையடித்து சூறையாடிய யூதர்களின் கோரிக்கையை ஏற்று 1948ல் பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் எனும் நாட்டை பலவந்தமாக ஐ.நா சபை சர்வதேச நாடுகளின் சார்பாக திணித்தது. இஸ்ரேல் நாடு பாலஸ்தீனத்தில் உருவாக்கப்பட்டது தான் சம்பவம் ஆனால் பாலஸ்தீனமே இஸ்ரேலாகியதுதான் வரலாறு. மிகக் குறுகிய காலத்திலேயே பாலஸ்தீனத்தில் எஞ்சியிருந்த பகுதிகளையும் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து முழுமையாகவே பாலஸ்தீனத்தை கபளிகரம் செய்தது.

பெரும் ஆர்ப்பாட்டத்துடன் கோலாகலமாக அரங்கேறிய ஒஸ்லோ ஒப்பந்தம் அடிப்படையில் ஒரு முழுமையான பூச்சுதல். இஸ்ரேலின் அரசியல் இராணுவ நிலமைகளை ஸ்திரப்படுத்த மேற்கத்தைய நாடுகளும் அமெரிக்காவும் கையாண்ட கபடநாடகம். பாலஸ்தீன மக்களின் உயிர்நாடியான மக்கள் போராட்டத்தை (இன்டிபாதா) திட்டமிட்டு ஒடுக்கும் நோக்கில் அம்மக்களின் குறைந்தபட்ச கோரிக்கையைத்தானும் அங்கீகரிக்காது அரங்கேற்றியுள்ள இவ்ஒப்பந்தம் பாலஸ்தீனமக்களின் முதுகில் குத்தப்பட்ட கத்தியாகும். நோர்வே உட்பட ஒருசில மே.ஐ.நாடுகளாலும் அமெரிக்காவில் இரகசியமாக திட்டமிடப்பட்ட இவ்ஒப்பந்தம் பாலஸ்தீனத்திற்கு சுயாட்சி என்ற போர்வையில் மேற்குக்கரைப் பிரதேசத்திற்கும் காஸா(பள்ளத்தாக்கு) பிரதேசத்திற்கும் போலிச் சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைவிடயத்தில் எதுவித அக்கறையும் காட்டப்படாது பாலஸ்தீனத்தைத் துண்டாடி நாலாபக்கமும் பிரச்சனைக்குரிய அயல்நாடுகளின் மத்தியில் வழங்கப்பட்டுள்ள இச்சுயாட்சி(?) பாலஸ்தீனர்களின் குறைந்தபட்ச கோரிக்கையைத்தானும் அங்கீகரிக்கவில்லை. தற்போது பாலஸ்தீனத்தில் இடம்பெறும் சம்பவங்களால் மகிழ்ச்சியடைந்திருப்பவர்கள் பாலஸ்தீன விடுதலை விரோதிகளே. இவ்ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் பாலஸ்தீனமக்களின் விடுதலையுணர்வையும் தியாகத்தையும் கொச்சைப்படுத்தி விலைபோயுள்ள பாலஸ்தீன விடுதலை முன்னணி(plo) அதன் தலைவர் யாசீர் அரபாத் போன்றவர்கள் பாலஸ்தீனமக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அழிக்கமுடியாத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். பாசிஸ சியோனிஸ்ட்டுக்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் அத்துமீறிய குடியேற்றங்களை தடுத்துநிறுத்த எவருமே திராணியற்றுப் போயுள்ளனர் ஒப்பந்தம் ஏற்படக் காரணமாயிருந்த நாடுகள் கைகட்டி வேடிக்கை பார்க்க துரோகமிழைத்த பாலஸ்தீன விடுதலை முன்னணியின் எதிர்ப்புக்குரல் பலவீனமாக வெளிவருகின்றது. மறுபுறம் சியோனிஸ இஸ்ரேல் அரசும் பாசிஸ இஸ்ரேல் இராணுவமும் குடியேற்றங்களைப் பகிரங்கமாக ஆதரிக்கின்றன. ஒஸ்லோ ஒப்பந்தம் எதை பாலஸ்தீனமக்களிற்காக சாதிக்காவிட்டாலும் அம்மக்களின் போராட்டத்தை பின்னடையச் செய்து பல ஆண்டுகளிற்கு பின்தள்ளியுள்ளதை மறுக்க இயலாது.

இதுவரை காலமும் முரண்பாடுகள் மத்தியிலும் பொதுவில் ஐக்கியமாகப் போராடிவந்த போராளிக்குழுக்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளதுடன் தமக்குள் மோதிக்கொள்ளவும் தொடங்கியுள்ளனர். அதேசமயம் பாலஸ்தீனமக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தை பிற்போக்குத்தனமும் தீவிரமத அடிப்படைவாத கருத்துக்களையும் கொண்ட ஹாமாஸ்(Hamas) என்ற பயங்கரவாதக்குழுவின் கைகளிற்குச் சென்றுள்ளது. இதன்மூலம் இதுவரை காலமும் மதச்சாயல் பூசப்படாமல் இருந்த பாலஸ்தீனமக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை அடிப்படை

www.tamilarangam.net

மதப்பயங்கரவாதம் என்ற குறுகிய வட்டத்திற்குள் கொண்டு வந்துள்ளனர். மறுபுறம் அரபுநாடுகளும் வட ஆபிரிக்க நாடுகள் பலவும் வேறுசில முஸ்லீம் நாடுகளும் இஸ்ரேல் மீதான தடையை நீக்கியுள்ளதுடன் இஸ்ரேலை அங்கீகரித்து வர்த்தக கலாச்சார உறவுகளை விருத்தி செய்யவும் முன்வந்துள்ளன. இதுவரைகாலமும் பாலஸ்தீனத்தை மையப்படுத்தியே இஸ்ரேல் அரபு உறவு இருந்துவந்த நிலை ஒஸ்லோ ஒப்பந்தம் மூலம் முற்றாக மாற்றமடைந்து பாலஸ்தீனத்தின் வலிமை முறியடிக்கப்பட்டுள்ளது. அரபுநாடுகளிடையே காணப்படும் மதப்பிரிவுகளும் மதவாதங்களும் அதிகாரமோகங்களும் மேற்கத்தைய அமெரிக்க நாடுகளைப் பொறுத்தவரை பாலும் தேனுமாகும். அரபுநாடுகளின் பொருளாதாரவளமும் மனிதவளமும் சுதந்திரமாக சிதறடிக்கப்பட்டாலும் இதற்கான முழுப்பொறுப்பும் அரபுநாடுகளையே சாரும். பாலஸ்தீனமக்கள் என்றோ சுலபமாக பெற்றிருக்கவேண்டிய விடுதலை இன்னும் கைகூடாமல் இருப்பதற்கு அரபு உலகின் சுயநலமும் ஒற்றுமையின்மையுமே காரணம்.

பாலஸ்தீனமக்களின் இன்றைய துயரிற்குரிய வரலாற்றுக் காரணங்கள் யாது? பாலஸ்தீனத்தின் உண்மை வரலாறு என்ன? ஆதிக்க வெறியர்களும் ஏகாதிபத்தியவாதிகளும் சியோனிஸ யூதத்தத்துவமும் பாலஸ்தீனத்தை எப்படியெல்லாம் சுரண்டினார்கள்? பாசிஸ சியோனிஸ ஒடுக்குமுறைகளையெல்லாம் பாலஸ்தீனமக்கள் எப்படி உடைத்தெறிந்தார்கள்? என்பவற்றை அறிய வேண்டுமானால் நாம் பாலஸ்தீன வரலாற்றை தெரிந்து கொள்வதும் அவசியமாகும்.

(தொடரும்)

## வரலாற்று பெருமை மிக்க ஜெரிக்கோ நகரம் இதுதான்

வேதாகமத்தின்(Bible) பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள ஜெரிக்கோ நகரமே உலகின் மிகப் பழமையான நகரம் என தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். கடல் மட்டத்தில் இருந்து சுமார் 300 மீட்டர்கள் தாழ்வாக உள்ள இந்நகரின் நிலப்பகுதியில் கணிசமானளவு சதுப்புநிலங்களாகும். வழமையான மத்திய கிழக்கின் காலநிலையில் இருந்து வேறுபட்ட வரட்சிக் காலநிலைக் கொண்ட இந்நகரம் பல ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பு வணிக வியாபாரத்தின் முக்கிய தளமாக விளங்கியது. 1952ல் இந்நகரில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் இந்நகரம் சுமார் 8800 ஆண்டுகளிற்கு முன்பு(கி.மு.6800) ஆண்டுகளிற்கு முன்பு நிர்மானிக்கப்பட்ட நகரம் எனத் தெரிவித்துள்ளனர். மிகநேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டிருந்த இந்நகரின் கட்டிடக்கலை இன்றைய பொறியியலாளர்கள் பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாக News Week பத்திரிகை தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது. 1950களில் நடுப்பகுதியில் இந்நகரம் இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டமையால் இங்கு தொடர்ந்தும் அகழ்வாராச்சியில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டது. பாலஸ்தீன மக்களின் கலைகலாச்சார வரலாறுகளை எடுத்தியம்பும் இந்நகரில் மேலும் அகழ்வாராச்சிகளை மேற் கொண்டால் இன்னும் பழைமையான பல ஆதாரங்களையும் வரலாற்று உண்மைகளையும் திரட்ட முடியும் அகழ்வாராட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

www.tamilarangam.net

# சீதைக்கு மட்டுமல்லச் சிதை



மு.சிவாஜினி, நெதர்லாந்து

உலகில் மிக நீண்ட காலமாகவே பல மூட நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. விஞ்ஞானம் எத்தனையோ மூட நம்பிக்கைகளைத் தகர்த்துவிட்டாலும் பல மூட நம்பிக்கைகள் இலகுவில் அழிந்து விடாதனவாய் மக்களைப் பல விதத்திலும் அலைக்கழிக்கின்றன. இவற்றில் பெண்களைப் பாதிக்கும் மூட நம்பிக்கைகளே அதிகம். அண்மையில் இந்தியப் பத்திரிகை ஒன்று கிராமத்தின் துயரங்களுக்கு ஒரு குறித்த பெண்/ அவளது குடும்பத்தினரே காரணம் எனக் கூறி அவளை ஒதுக்கி வைத்தது பற்றி எழுதியிருந்தது. இந்நிலை தெற்காசியாவில் எல்லா இடங்களிலும் உள்ளதுதான். தமிழர்கள் விதவைகளை முக்கிய சடங்குகளில் முன்நிற்க அனுமதிப்பதில்லை. சொந்தப் பிள்ளைகளின் திருமணத்தில்கூடத் தாய் தனது விருப்பப்படி பங்கெடுக்க அனுமதி மறுக்கப் படுகிறது. அதிக துயரங்களைச் சுமக்கும் பெண்களே, அந்தத் துயரங்களுக்குக் காரணம் எனக் கூறித் தண்டனை அதிகரிக்கப் படுகிறது.

இதிகாசத்தில் சீதை 'கற்பு' உடையவளா என்ற ராமனின் சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகத் தீக்குளிக்க வேண்டி இருந்தது. இந்த நூற்றாண்டிலும் கணவன் இறந்து விட்டால் அவனுடன் மனைவியையும் தீக்குளிக்கச் செய்த சம்பவங்கள் இந்தியாவில் ஏராளமாக இடம்பெற்றுள்ளன.

'நாகரிகம்' அடைந்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஐரோப்பிய நாடுகளிலும் பெண்கள் மீதான இவ்வகை நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளன. பெண்களைப் பலியிடுவது, பெண்களைத் துர்த்தேவதைகள் எனக் கூறிக் கொலை செய்வது போன்ற நடவடிக்கைகள் கிழக்கு நாடுகளுக்கு மட்டும் சொந்தமானவை அல்ல. படத்தில், டென்மார்க் நெதர்லாந்து போன்ற நாடுகளில் துர்த்தேவதைகள் எனக் குற்றம் சாட்டப்பட்டுத் தீக்குள் வீசப்படும் பெண்களைப் பற்றி உள்ளது. இப்போது தீயினுள் வீசுவதை நிறுத்திவிட்டாலும், தீயைப் போன்ற ஆபத்துகளைப் பெண்கள் எதிர்கொள்வது முற்றிலும் மாறிவிடவில்லை.

www.tamilarangam.net




**எட்வர்ட் சைத்**

## பயங்கரவாதமும், அடிப்படைவாதமும்

தனது, இராணுவம் மற்றும் மக்கள் தொகை மாறிலிகளை இணைத்து உருவாக்கிய கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரம் ஆகிய இன்றைய உலக அமைப்பானது, தன்னை ஒரு நிறுவனமாக்கிக் கொள்ளும் போக்கில் அளவீடுகளுக்கு அப்பாற்பட்ட, தேசியங்களைக் கடந்த படிமங்களை உருவாக்கி அவற்றை சர்வதேச சமூகச் சொல்லாடல்களின் புதிய திசைவழியில் இயக்கமடைவதாக ஆக்கியுள்ளது. 1980-களில் மேலெழுந்து வந்த இரு முக்கிய சொற்பிரயோகங்களான "பயங்கர வாதம்" மற்றும் "அடிப்படைவாதம்" ஆகியவற்றை எடுத்துக் கொள்வோம் - சுன்னி/சியா, குர்து/ஈராக்கி, அல்லது தமிழ்/சிங்களம், அல்லது சீக்கியர்/இந்து - இந்த பட்டியல் நீளமானது - ஆகியவற்றிற்கு இடையிலான (சர்வதேச சொல்லா டல்கள் நிறைக்கப்பட்ட பொதுக்களங்களின்) அரசியல் முரண்களை மிகவும் சிரமப் பட்டு ஆராயத்துவங்கும் ஒருவருக்கு, வாஷிங்டன், லண்டன் போன்ற தலைமை மைய ங்களைச் சேர்ந்த அறிவுஜீவி தொழிற்சாலைகள் மற்றும் குறிப்பிட்ட நிறுவனங்க ளால் வரையறுக்கப்பட்ட "பயங்கரவாதம்" மற்றும் "அடிப்படைவாதம்" போன்ற படிமங் களை அடைவது தவிர்க்க முடியாததாக உள்ளது. உள்ளடக்கம், வரையறை ஆகிய வற்றில் நிறைய குறைபாடுடைய, பயமுட்டும் படிமங்களான இவைகள், யாரால் பயன்படுத்தப்படுகிறதோ அவர்களை தார்மீக நியாயவாதிகளாக அங்கீக ரிப்பதையும், யார் மீது பிரயோகிக்கப்படுகிறதோ அவர்கள் தங்களை தார்மீக ரீதியில் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய குற்றவாளிகளாக்கப்படுவதையும் குறிக் கின்றது. இந்த இரு மாபெரும் குறுக்கப்பட்ட சொற்களும், இராணுவத்தை ஒழுங்கமைத்தலையும், அதே நேரத்தில் இனங்களை சிதறடித்தலையும் (Disperse) செய்கிறது. [1]ருஷ்தியின் நாவலுக்கு ஈரான் அரசின் எதிர்ப்பு, அல் லது மேற்குலகின் அரசு ஆதரவற்ற இஸ்லாமிய சமூகங்களால் அவருக்கு கிடைத்த ஆதரவு, அல்லது புரிந்து கொள்ளமுடியாத ஈரானின் 'ஃபத்வா'[2] (fatwa) அமைப்பிற்கு எதிராக பொதுவாகவும், தனிப்பட்ட முறையிலும் வெளிக்கிளம்பிய எதிர்ப்புக்குரல்கள் ஆகியவற்றின் இயக்கங்கள் ஏற்படுத்தும் விளைவுகளை, இந்த ஆதிக்க வெறிகொண்ட அமைப்பின் ஒட்டு மொத்த தர்க்கம் மற்றும் நுண்ணிய செயல்பாடுகளை குறிப்பிடாமல் விளங்கிக் கொள்ளமுடியாது, என்பதே என் அபிப்ராயம், இதனையே இங்கு நான் விளக்க முயற்ச்சிக்கிறேன்.

www.tamilarangam.net

எனவே, இவைகள் திறந்த சூழல்களைக் கொண்ட வாசகக்கூட்டத்திற்கு காலனியாதிக்கத்திற்கு பின் எழுந்த, எடுத்துக்காட்டாக, ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு இலக்கியத்தின் மீது ஆர்வம் கொள்ளச் செய்கிறது. இவ்விலக்கியங்களின் அடிப்படையான வடிவமைப்புகள் யாவும் உரைகூறும் மரபுச் (Hermeneutic Investigation) செயலின் ஆராய்ச்சிகள், அல்லது பரஸ்பரக்கூட்டு மற்றும் இலக்கிய உள்ளுணர்வுகள், முன்னேறிய வாசிப்பின் வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் இயக்கப்படவோ அல்லது கட்டுப்படுத்தப்படவோ இல்லை, மாறாக, அவற்றின் நோக்கம், அதிக முரட்டுத்தனத்துடன் மற்றும் கருவிகள் வளர்ச்சியின் உதவியால், அங்கீகரிப்புகளை திரட்டுவது, மாற்றுக்கருத்துக்களை ஒழிப்பது, கிட்டத்தட்ட கண்மூடித்தனமான தேசபக்தியை வளர்ப்பது என்பதுதான். அந்த அர்த்தத்தில்தான் பெரும்பாண்மையான மக்களை அவர்களால் நிர்வகிக்கும் போக்கு உறுதிப்படுத்தப்படுகிறது. பாரிய சன சமூகத்தில் சனநாயகத்திற்காகவும், கருத்துரிமைக்காகவும் நிற்பவர்களின் சிதறலான வேட்கைகளை ஒடுக்குவது (அல்லது போதையுறச்செய்வது)- இதில் நிச்சயமாக மேற்கத்தியமும் ஒன்று.

அந்நிய பூதங்களால் உருவாக்கப்பட்ட சர்வதேச மற்றும் தேசியம்பாற்பட்ட கற்பனை உருவங்கள் என்று அழைக்கப்படும் "பயங்கரவாதம்" மற்றும் "அடிப்படைவாத"-த்தின் மிகைப்படுத்தப்பட்ட படிமங்களால் பயமும், பயங்கரமும் தூண்டப்பட்டு தனிமனிதர்கள் ஆதிக்க முறைமைகளுக்குள் ஒடுங்கும் செயலானது விரைவுபடுத்தப்படுகிறது. இது காலனியத்திற்கு பிறகான புதிய சமூகங்களில் எத்தனை உண்மையோ அந்த அளவு, பொதுவாய் மேற்கத்திய நாடுகளிலும், குறிப்பாய் அமெரிக்காவிலும் உண்மையாகும். இந்த உண்மைகள் எதைக்குறிப்பிடுகின்றன என்று பார்த்தால், பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதம் - ஆகியவற்றில் கட்டுண்டிருக்கும் இயல்பின்மை, தீவிரவாதம் ஆகியவற்றை எதிர்ப்பதன் மூலம் நடுநிலைமை, பகுத்தறிவு, ஸ்தூலமற்று குறிக்கப்படும் "மேற்கத்தியம்" (அல்லது சுயம் மற்றும் தேசபக்தியாக இருக்கலாம்) -போன்ற செயல் மையங்களை உயர்த்திப்பிடிப்பதாக உள்ளது என்ற உண்மை விளங்கும். எனது இந்த உதாரணங்கள் இப் 'பரோடியின் (PARODY) ஒரு சிறிய கோணத்தை மட்டுமே காட்டுகின்றன. 'இயல்புகளை' (NARMOLITY) நம்பிக்கையுடன் பாதுகாக்கும் மேற்கத்திய அடிப்படைகளினால் விளைந்த பயன்களிலிருந்து விலகி நிற்கிறது இந்த 'ஐரணி' (IRONY), 'நாம்' நேர்மையான உரிமையுடன், நியாயமான கோபத்துடன், கடைசியில் நமது எதிரிகளாக போகிற 'பிறர்களி' டமிருந்து பாதுகாப்புடன், நமது நாகரீகத்தை, வாழ்க்கை முறையை வளைத்து அழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு எதிராக நமது உணர்வுகளை கிளர்ந்தெழச்செய்து ஒருங்கிணைக்க வேண்டும்.

******************************

அடிக் குறிப்புகள்:

1. சல்மான் ருஸ்டியின் சாத்தானிள் கவிதைகள் (SATANIC VERSES)- என்ற நூலிற்கு ஈரான் அரசு ஏற்படுத்திய தடை மற்றும் நெருக்கடிகளை ஒட்டி, உலக நாடுகள் பலவற்றில் எழுந்த இஸ்லாமிய அடிப்படைவாதம்பற்றிய பேச்சே, இங்கு குறிப்பிடப்படுகிறது.

2. FATWA - என்ற சொல்லிற்கு 'இஸ்லாமிய இறையதிகாரம்' என்று பொருள். ஆனால் இங்கு குறிப்பிடப்படுவது இஸ்லாமிய மதக்காவலர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

www.tamilarangam.net

ஆ.பரந்தாமன்

# கொடிமாற்றிக் குடியரசாக விரும்பும் நாடு

பல அரசியல் மாற்றங்கள் உலகின் பல பாகங்களிலும் கடந்த ஆறேழு வருடங்களாக நிகழ்ந்து வருகின்றன. நாடுகள் பிரிவதும், நாடுகள் இணைவதும், தீர்க்கப்பட முடியாத பிரச்சனைகள் 'தீர்க்கப்' படுவதுமாக உலகம் ஏறத்தாழ அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான மாற்றங்கள் நிகழும் எனக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால் மாற்றங்கள் எப்போதும் வந்தே தீரும் என்பதற்கு அண்மைக்கால உலகம் நல்ல சாட்சியாக விளங்குகிறது.

எல்லா நாடுகளும் மாற்றமடைகின்றன, நாங்கள் ஏன் மாறக்கூடாது என்ற குரல் அவுஸ்திரேலியாவில் இருந்தும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அவுஸ்திரேலியா உலகின் வரலாற்றில் கடந்த சில நூற்றாண்டுகளாகவே இடம் பிடித்து வந்திருக்கிறது. அதற்குமுன் அங்கு பூர்வகுடி மக்கள் தமது எளிமையான, ஆனால் செழிப்பான, இயற்கையோடு ஒன்றிய வாழ்வை வாழ்ந்துவந்தனர். நாடுகளைப் பிடிக்கும் ஐரோப்பியப் படையெடுப்புகளுக்குள் சிக்கி, சொந்த மக்களே அந்நியர் போல் ஆகிய துயரத்தில் கடந்த சில நூற்றாண்டுகளாகச் சிதைந்துள்ளது அவுஸ்திரேலியா. பிரிட்டனின் கடல்கடந்த நாடுபிடிப்பில் முக்கியமான ஒரு புள்ளி அவுஸ்திரேலியா. உலகின் மிகப்பெரிய தீவுகளில் ஒன்றான இந்த நாடு தனது வளங்களை பிரிட்டனிடம் இழந்தது மட்டுமன்றி, ஏனைய பல ஆசிய நாடுகளைப் போலன்றி, பிரிட்டன் அரசின் குடியேற்ற நாடாகவும் மாறியது.

கடந்த சில நூற்றாண்டுகளில் ஏறத்தாழ






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பியர்கள் அமெரிக்காவைப் பிடித்தது போல, அவுஸ்திரேலியாவை பிரிட்டிஷ்காரர் பிடித்துக் கொண்டனர். தமது சந்ததியினரைக் கொண்டுசென்று அங்கு குடியேற்றிய வெள்ளையர்களால் அந்த நாட்டில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பூர்வகுடி மக்கள் சிறுபான்மையினராக, உரிமைகள் மறுக்கப்பட்டு, தமது வாழ்க்கை முறையை மாற்றும்படி நிர்ப்பந்தம் செய்யப்பட்டு, இப்போது அவுஸ்திரேலியா வெள்ளையர்கள் தேசம் என்றே உலகம் முழுவதும் அறியப்படுகிறது.

என்னதான் இருந்தாலும், பிரிட்டனின் ஆதிக்கம் இந்த நாட்டில் நேரடியாக இல்லாமல் இப்போது அது சுதந்திர நாடாகவே உள்ளது. ஆனால் அவுஸ்திரேலியா ஏனைய பல பிரிட்டிஷ் கொலனிகள் போல இன்றுவரை குடியரசாக ஆகவில்லை. அதற்கான காலம் விரைவில் வந்துவிடும் என்றே அவுஸ்திரேலியக் குடிமக்களின் அபிப்பிராயங்கள் கூறுகின்றன. தாம் பிரிட்டிஷ்காரர் அல்லர் என மறுக்கும் இந்தக் குரல்கள், தாம் பிரிட்டனின் கீழ் இருக்க வேண்டியதில்லை என்பதையும் கோடிகாட்டுகின்றன.

பிரிட்டனின் முடியாட்சிக்குக் கீழ் இருப்பதே சிறப்பு எனக் கருதும் அவுஸ்திரேலியர்களின் கணிசமானளவு குரல்கள் ஒலித்தாலும் நாடு குடியரசாக மாறவேண்டும் என்ற குரல்கள் பலமாகவே ஒலிக்கின்றன. ஏறத்தாழப் பாதிப்பேர் குடியரசாக மாறும் அவுஸ்திரேலியாவையே விரும்புகின்றனர் எனக் கணிப்பீடுகள் கூறுகின்றன. ஒரு குறிப்பிட்ட தொகையினர் இதுபற்றி முடிவு எடுக்காமல் இருக்க, அவுஸ்திரேலியா தொடர்ந்தும் முடியாட்சிக்குக் கீழ்ப்பட்டே இருக்க வேண்டும் என விரும்புவோர் தொகை குறைந்தளவிலேயே உள்ளது.

பிரிட்டனின் உறவுக்கார நாடு என்ற அடையாளத்தை விட, ஆசிய நாடுகளுடன்

## நிலம் தின்னி

அவனின் மூளையைத் திருகி
குடிக்கத் தந்தான்
குமட்டக் குமட்டக் குடிக்கத் தந்தான்

வெறி ஏறிப் போனேன் நான்
வீங்கி
புற்றாகி எழுந்தன விசப்பாம்புகள்
என் கையிலிருந்தும்
காலில் இருந்தும்
கவிண்டு தொங்கியது
என்ர மூளை
வௌவால் போல ஒற்றைக் காலில்
மேசையில் இருந்து நிலத்தைச் சாப்பிட்டேன்
குரைத்தன நாய்கள்
மூச்சு இளைத்துக் குரைத்தன நெடுக
ஒரு தரம்
மூஞ்சியைக் காலால் கிடாசியும் குரைத்தன
வாலைத் தெற்கால்
நீட்டியாட்டி
கைகளை விரிக்கப் போகிறேன் நான்
புழுத்த விரல்களை உதறி
பொறுக்கவரும் வெள்ளைப் புறா
நான் பேய்க்காட்ட
இனி நான்
நிலத்தில் இருந்தே நிலத்தை உண்பேன்
என்னை ஒண்டும் பண்ண ஏலாது
எவரும்
எங்கும் வியாபித்திருக்கும் என் ஏப்பக் காற்
அடங்காது
அடங்கவே அடங்காது
என்ர பசியும் ருசியும் மலத்தையும் தின்னும்
தெரியுமா உங்களுக்கு

**ஜீவிதன்**

எம்மை நெருக்கப்படுத்திக் கொள்வதே நல்லது எனக் குடியரசு ஆதரவாளர்கள் சிலர் கூறுகிறார்கள். தமது

www.tamilarangam.net

பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் உறவை வளர்ப்பதே அவசியம் எனக் கூறும் இவர்கள், பிரிட்டன் மிகத் தொலைவில் இருப்பதால் தமக்கு நெருக்கமான உணர்வு ஏற்படுவதில்லை என்பதை வலியுறுத்துகின்றனர்.

பிரிட்டனின் தொப்பூள்க் கொடியை வெட்டிவிட வேண்டும் என்பதில் பலர் முனைப்பாக நிற்க, பிரிட்டன் அரச பரம்பரையின் குடும்ப விவகாரங்கள் சந்தி சிரிப்பதும் முக்கிய காரணம் எனலாம்.

தொடர்ந்து இந்தக் குடும்ப விவகாரங்கள் பற்றிய செய்திகள் வந்தவண்ணமே இருப்பதால், அரசகுடும்பத்தினர் மீது ஆதரவு குறைந்துகொண்டே வருகிறது. தற்போதைய பிரிட்டிஷ் அரசியான எலிசபெத் மகாராணி, உடைந்து விழும் ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டிக்காத்து வருகிறார் எனவும், அவர் மரணமானால் சாம்ராஜ்யமும், முடியரசிற்கான அவுஸ்திரேலிய மக்களின் ஆதரவும் கணிசமான அளவில் குறைந்துவிடும் என்று பல அவதானிகளும் கருதுகிறார்கள்.

கடந்த பதினொரு வருடங்களாக அவுஸ்திரேலியாவின் ஆட்சியைத் தக்கவைத்திருக்கும் தொழிற்கட்சி அரசின் நடவடிக்கைகள் ஓரளவு முடியாட்சியிலிருந்து விலகும் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றன. அவுஸ்திரேலியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்கள், முன்புபோல அரசபரம்பரைக்கு விசுவாசம் தெரிவித்து பிரதிக்ஞை செய்யவேண்டிய அவசியமில்லை. நாட்டின் தேசிய கீதம் மாற்றப்பட்டுவிட்டது (முன்பு 'God save the queen, இப்போது Advance Australia Fair).

அடுத்த நூற்றாண்டிற்குள் தாம் குடியரசாகவே காலடி வைக்க வேண்டும் என்று குடியரசு ஆதரவாளர்கள் குரலெழுப்புகின்றனர். சிட்னியில் ஒலிம்பிக் போட்டிகள் நிகழும்போது, நாட்டின்




## கொடியே ஒரு நாட்டின்

அடையாளமாகப் பல சந்தர்ப்பங்களில் பாவிக்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் கொடி தனித்துவம் கொண்டதல்ல. அந்தக் கொடியைப் பார்க்கும் எவரும், பிரிட்டனின் கீழ் இருந்த நாடு என்று அவுஸ்திரேலியாவை இலகுவில் அடையாளம் காணமுடியும். எனவே குடியரசாகும்போதோ, அதற்கு முன்னதாகவோ கொடி வேறுவிதமாக, அவுஸ்திரேலியாவைப் பிரதிபலிக்கும் விதத்தில் மாற்றப்பட வேண்டும் எனப் பலரும் விரும்புகின்றனர்.

ஆனால் கொடி மாற்றப்படக் கூடாது என்றும் சிலர் விரும்புகின்றனர். இவர்கள் 'கொடிக் காப்பு' அமைப்புகளை உருவாக்கித் தங்களது கொள்கைகளைப் பிரசாரம் செய்து வருகின்றனர். குடியரசாவதா இல்லையா என்பதைவிட, கொடியைத் தொடர்ந்து பேணுவதா இல்லையா என்ற விவாதமே பலரது உணர்வலைகளைக் கிளறிவிடக் கூடியதும் சூடானதும் எனக் கருதப்படுகிறது. கொடி எவ்வாறு மாற்றப்பட வேண்டும் என்பது பற்றி உறுதியான கருத்து உடன்பாட்டில் மக்கள் இல்லை. ஆனால் கொடி எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் குறிகாட்டும் பல ஆடைகள் விற்பனையில் உள்ளன.

www.tamilarangam.net




தலைவர் என்ற அந்தஸ்தில் அவுஸ்திரேலியப் பிரஜை ஒருவரே இருத்தல் அவசியம் என்பதும் இவர்களது குரலாக உள்ளது.

அவுஸ்திரேலியாவின் கொடியில் பிரிட்டனின் கொடியும் உள்ளடக்கப் பட்டுள்ளது. இது நிரந்தரமாகவே ஒரு அடிமைக் குறியீடாகக் கருதப்படுகிறது. கொடி மாற்றப்பட வேண்டும் என்பதும் குடியரசை ஆதரிக்கும் வாக்காளர்களில் கணிசமானோரது விருப்பாக உள்ளது.

அவுஸ்திரேலியா குடியரசாக மாறவேண்டுமா என்பது சர்வசன அபிப்பிராய வாக்கெடுப்பிலேயே தீர்மானிக்கப்படும். ஆனால் அந்த வாக்கெடுப்பு நிகழ்வதற்கான காலம் விரைவில் வந்துவிடும் என்று குடியரசு ஆதரவாளர்கள் கருதுகிறார்கள். இன்னும் மூன்று வருடங்களில் இந்தத் தேர்தல் நிகழக்கூடும்.

1960கள் வரை அவுஸ்திரேலியாவில் சகல திரையரங்குகளிலும் முதலில் தேசிய கீதமே பாடப்படும். அனைவரும் எழுந்து நின்று அதற்கு மரியாதை செலுத்த வேண்டும். 'கடவுள் அரசியைக் காப்பாற்றட்டும்' என்ற இந்தக் கீதம் இப்போது சற்றே மாற்றிப் பாடப்படுகிறது: 'கடவுள் அரசியை ஒழித்துக் கட்டட்டும்' (God sack the queen). கடவுள் வரலாவிட்டாலும், அவுஸ்திரேலியர்கள் மாற்றியேவிடுவார்கள் என நம்பலாம்.

# போதை வஸ்துக்களும் நூறு மில்லியன் சிறார்களும்

உலக சுகாதாரஸ்தாபனம் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றில் உலகம் முழுவதிலுமுள்ள பல நூறு மில்லியன் வீதிச்சிறார்களில் சுமார் நூறு மில்லியனுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் போதைவஸத்துக்கு நிரந்தர அடிமைகளாகி உள்ளனர். கௌத்தமாலாவில் மாத்திரம் 90% சிறார்கள் போதைவஸ்த்துக்கு அடிமைகளாகியுள்ளனர். பொலிவியா, கொலம்பியா, பெரு ஆகிய நாடுகளிலுள்ள சிறார்களில் எட்டு வயதிற்குட்பட்ட சிறார்கள் பலர் மிக ஆபத்தான பாவிக்கின்றனர். பங்களாதேஷ், இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் கணிசமான வீதிச்சிறார்கள் போதைவஸ்த்துக்கு அடிமையாகி உள்ளனர். போதைவஸத்துக்கு அடிமையாகியுள்ள சிறார்களில் பலர் எயிட்ஸ் உட்பட வேறுபல பாலியல் நோய்களிற்கு உள்ளாகியுள்ளனர். வீதிச் சிறார்களின் இந்நிலைக்கு முக்கிய காரணம் உணவுப் பற்றாக்குறையே. போதைவஸ்த்துக்களைப் பாவிப்பதன் மூலம் பல நாட்களிற்குப் பட்டினியாக இருக்கின்றார்கள். சிலர் இப் போதைவஸ்த்து வியாபாரத்தின் மூலம் உணவுப் பிரச்சனையைத் தீர்க்க முயல்கின்றனர். காலப் போக்கில் அதற்கு அவர்களே அடிமையாகி விடுகின்றனர். எனினும் பெரும்பாலான சிறுவர்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஏற்படும் பிரச்சனைகளில் இருந்து விடுபடவே போதைவஸ்த்துக்களைப் பிரயோகிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.


செந்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்டது, கேட்டது, கண்டவர் சொன்னது



அயலான்

இந்த வருடம் திரைப்படங்களின் நூற்றாண்டு என்று பலருக்குத் தெரிந்திருக்கலாம். திரைப்படங்களின் வரலாற்றில் இதுவரை பல ஆயிரக் கணக்கான திரைப்படங்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் ஒவ்வொரு வருடமுமே பல நூற்றுக் கணக்கான திரைப்படங்களைத் தயாரித்துள்ளன. ஆனால், தரத்தைக் கணக்கில் எடுத்தால் ஒரு வருடத்தில் வரும் திரைப்படங்களில் மிகச் சிலவே ஒவ்வொரு மொழியிலும் குறிப்பிடத் தக்கனவாக உள்ளன. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இதுவரை பல ஆயிரக் கணக்கான திரைப்படங்களைத் தயாரித்துவிட்ட தமிழ்த் திரையுலகம் நல்ல படங்கள் எனத் தந்தது மிகச் சொற்பம். தமிழ்த் திரைப்படங்களை ஏனைய மொழி பேசுவோர் பார்த்து ரசிக்கும் சூழல் இன்றுவரை உருவாகாதது கவலைக்குரிய விடயம். நல்ல படங்களை எப்படித்தான் தேடிப் பார்ப்பது என்பது பலருக்கும் ஒரு கேள்விக்குறியான விடயம்.

நோர்வேயில் பல திரைப்படக் கழகங்கள் இயங்குகின்றன. இவற்றில் உறுப்பினராக உள்ளவர்கள் தேர்ந்தெடுத்த படங்களைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள். இந்தக் கழகங்களின் அங்கத்தவ ரசனைக்கேற்ப அங்கு திரையிடப்படும் படங்கள் மாறுபடலாம். ஆனால் இந்தத் திரைப்படங்கள் மிகவும் அரிதாகவே ஏனைய இடங்களில் பார்க்கக் கிடைப்பன. ஒஸ்லோவில் உள்ள திரைப்படக் கழகம் (Film institute) தினசரியும் (ஏறத்தாழ வருடம்தோறும்) நல்ல திரைப்படங்களைத் தனது அங்கத்தவர்களுக்குக் காட்டி வருகிறது. ஒரு படத்திற்கான கட்டணம் மிகக் குறைவானதே. இவற்றை விட்டால், இந்த வருடம் திரைப்பட நூற்றாண்டை ஒட்டி, நோர்வேயின் தேசியத் தொலைக்காட்சி (NRK) திரைப்பட வரலாற்றில் இருந்து வெவ்வேறு காலப் பகுதிகளையும், வெவ்வேறு நாடுகளையும் பிரதிபலிக்கும் படங்களை ஒளிபரப்புகிறது.

அண்மையில் பிரான்சின் திரைப்பட வரலாற்றின் பொற்காலம் எனக் கூறப்படும் 1930களில் இருந்து மூன்று திரைப்படங்கள் ஒளிபரப்பாகின. இவ்வாறே அல்பிரட் ஹிட்ச்கொக்கின் மூன்று திரைப்படங்கள், புகழ்பெற்ற ஆரம்பகால நடிகை ஒருவரின் மூன்று திரைப்படங்கள் என்று வரிசையாக ஒளிபரப்பாகின. இவை குறிப்பாக வியாழக் கிழமைகளிலேயே ஒளிபரப்பாகின்றன. இந்த வருடத்தில் கணிசமான நல்ல அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில் பிரான்சின் திரைப்பட வரலாற்றின் பொற்காலம் எனக் கூறப்படும் 1930களில் இருந்து மூன்று திரைப்படங்கள் ஒளிபரப்பாகின. இவ்வாறே அல்பிரட் ஹிட்ச்கொக்கின் மூன்று திரைப்படங்கள், புகழ்பெற்ற ஆரம்பகால நடிகை ஒருவரின் மூன்று திரைப்படங்கள் என்று வரிசையாக ஒளிபரப்பாகின. இவை குறிப்பாக வியாழக் கிழமைகளிலேயே ஒளிபரப்பாகின்றன. இந்த வருடத்தில் கணிசமான நல்ல அல்லது புகழ்பெற்ற திரைப்படங்களைத் தொலைக்காட்சியில் காணச் சந்தர்ப்பம் உள்ளது. ஆர்வம் உள்ளோர் தமது நேரத்தை இந்த வழிகளில் செலவு செய்யலாம்.

சில சமயங்களில் திரைப் படங்களைப் பார்க்கும்போது அந்தத் திரைப் படத்தை எங்கேயோ பார்த்த ஞாபகம் தோன்றுவதுண்டு. ஏற்கனவே அந்தத் திரைப் படத்தைப் பார்த்திரா விட்டாலும் இவ்வாறான எண்ணம் தோன்றக் காரணம், அதே மாதிரியான காட்சிகள் ஏற்கனவே வேறு திரைப் படத்தில் இடம்பெற்றதாக இருக்கலாம் அல்லது கதையே திருடப் பட்டதாக இருக்கலாம். தமிழில் வெளிவந்த 'தலைவாசல்' (The principal), 'நம்மவர்' (The principal, Dead poets' party) என்பன எனக்குத் தெரிந்த உதாரணங்கள்.

அண்மையில் பதின்மூன்று வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட சுவீடிஷ் திரைப்படம் ஒன்றைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. சுவீடனின் திரைப்பட வரலாற்றில் புகழ்பெற்ற ஒருவராகக் குறிப்பிடப்படும் ஹன்ஸ் அல்ஃபிறெட்ஸன் (Hans Alfrdson) இயக்கிய இந்தத் திரைப்படத்தின் பெயர் 'டென் என்ஃபால்டிய மோர்டரன் (Den enfaldige mördaren).

பதின்மூன்று வருடங்களுக்கு முந்திய இந்தப் படத்தின் கதை, அது படமாக்கப்பட்ட விதத்தில் ஒரு தமிழ்த் திரைப்படத்தை நினைவுபடுத்தியது. சில வருடங்களுக்கு முன் தமிழில் வெளிவந்த 'குணா' படமே அது. இரண்டு படங்களுக்குமான தொடர்பு தற்செயலானதா அல்லது பல தமிழ்த் திரைப்படங்கள் போலக் கதைத் திருட்டா என்பது தெரியவில்லை.

ஒரு 'வலதுகுறைந்த' இளைஞன், அவனது விபச்சாரியான சகோதரி, அவனைப் பலவந்தப் படுத்தித் தனது வேலையாளாக வைத்திருக்கும் முதலாளி என்போர் படத்தின் முன்பகுதியில் முக்கிய கதாபாத்திரங்கள். இவர்கள் குணா படத்தின் கமலஹாசன், ரேகா, ஜனகராஜ் ஆகியோரது பாத்திரங்களை நினைவுபடுத்தினர். இவனில் அனுதாபம் கொண்டு அவனைத் தப்பவைத்துத் தொழில் வாய்ப்பும் கொடுத்த ஒருவரது, உடல் ஊனமுற்ற மகளின்மீது அவனுக்கு ஏற்படும் ஈடுபாடுதான் படத்தின் மையம். அவர்கள் இருவரும் தனியே தப்பிச் செல்ல முனைந்து ஒளித்திருந்த இடத்தைப் பொலிஸ் படைகள் சூழ்கின்றன. இறுதியில் ஒரு துப்பாக்கிச் சத்தத்துடன் படம் முடிகிறது. 1930 - 40களைப் பின்னணியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் திரைப்படத்தின் கரு, ஒரு புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படத்தின் கருவாக ஆகியது தற்செயலானது என்று என்னால் நம்ப முடியவில்லை. ஒழுங்காகப் பிறமொழிப் படங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் எல்லாத் தமிழர்களுக்கும் கிடையாது என்ற நினைப்பில் கதை திருடப் பட்டதா அல்லது அந்தத் திரைப்படத்தின் பாதிப்பில் இந்தத் திரைப்படம் (குணா) எடுக்கப் பட்டதா என்பது தெரியவில்லை. தெரிந்தவர்கள் கூறினால் நலம்.

அண்மையில் தமிழகத்தில் இருந்து ஒரு கவிதைநூல் படிக்கக் கிடைத்தது. தமிழின் கவிதை வளத்துக்குப் பிறமொழிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதைகளை உரமாகச் சேர்க்கும் முயற்சி அது. 1941 முதல் அடுத்துவந்த நான்கு வருட காலத்தில் சோவியத்தைக் காப்பாற்றப் போரிட்ட பல கவிஞர்களின் அல்லது போராளிகளின் கவிதைகளைக் கொண்ட தொகுதி இது.

வீரஞ் செறிந்த போராளிகளின் உணர்வுகள் யுத்த முனையைக் கண்டு பின்வாங்குவன அல்ல; அவை எதிரிப் படைகளிடம் சரணடைய மறுப்பன; வெற்றி ஒன்றையே நம்பிக்கை நாதமாய்க் கொண்டு ஒலிப்பன. இந்தக் கவிதைகளில் அந்த உணர்வுகளை யாரும் இலகுவாகத் தரிசிக்க முடிகிறது. கவிதை என்றால் அது 'படித்தவர்களுக்கு' மட்டும் என்ற மாயத் திரையை விலக்கிவிட்டு, இயல்பான வார்த்தைகளில் அவற்றைப் படிக்கும்போது எவருக்கும் கவிதையுலகில் இலகுவாக நுழைய முடிகிறது. போராளிகளது உணர்வுகள் நாடு, மொழி என்ற எல்லைகளைக் கடந்து ஒன்றுபட்டு நிற்பதைத் தரிசிக்க முடிகிறது.




கடந்த 1993இன் இறுதியில் தமிழகத்தில் வெளிவந்த இந்த நூலை சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்தினர் வெளியிட்டுள்ளனர். கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர் சுவடுகள் வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான கனிவண்ணன்.

## பெரிய நாட்டின் பெரிய விவகாரம்

உலக சனத்தொகையில் பெரிய பங்களிப்பை நல்கும் சீனா இன்று மிக வேகமாக முதலாளித்துவத்தை நோக்கி முன்னேறி வருகின்றது. போலிக் கம்யூனிஸ்ட்டுக்களின் பிடியில் இருக்கும் சீன மக்கள் எதுவித அரசியல் உரிமைகளுமற்றவர்களாக புதிதாகத் தோன்றியுள்ள முதலாளிகளால் சுரண்டப்பட்டு வருகின்றனர். தங்களது அரசியல் பதவிகளை நிலைநிறுத்திக் கொள்ள கம்யூனிஸத்தையும் நாட்டையும் மக்களையும் சூறையாட சந்தைப் பொருளாதாரத்தையும் கையாளும் சீன ஆட்சியாளர்களால் இன்று சுமார் 150 மில்லியன் மக்கள் நிரந்தர வேலையின்றிக் கஷ்டப்படுகின்றனர். சுமார் 800 கோடி மக்களில் நிரந்தர வேலையற்றோர் 19% ஆக இருப்பதற்கு முக்கிய காரணம் பெருமளவிலான அரச நிறுவனங்கள் தனியார் மயமாகி வருவதாலும் சந்தைப் பொருளாதாரக் கோட்பாடுகளை இந்நிறுவனங்கள் கடுமையாக கடைப்பிடிப்பதாலுமே இந்நிலை. இதனை அரசகட்டுப்பாட்டிலுள்ள செய்தி நிறுவனமான Xinhua வெளியிட்டுள்ள இருந்து அறியக்கூடியதாயுள்ளது. சீனாவின் 100000ற்கு மேற்பட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பே (சேமிப்பு, ஆட்குறைப்பு, நிதிக்கட்டுப்பாடுகள் உட்பட இன்னும் பல) இதற்குக் காரணமாக தெரிவிக்கப்பட்டாலும் புதிய முதலாளிகளின் சுரண்டலும் இதற்கு மற்றுமொரு காரணமாகும். சீனாவின் 1/3 பகுதி உற்பத்தி வியாபார நிறுவனங்கள் நட்டத்திலேயே இயங்குகின்றன அரசின் ஊழலும் நிர்வாக திறமையின்மையும் முக்கிய காரணங்களாயுள்ள போதிலும் பாதிக்கப்படுவது என்னவோ தொழிலாளர்களே.

www.tamilarangam.net

## இரண்டாம் பாகம்

### அத்தியாயம் 12




ஆம்!

அவள் அவர்களுடைய சுசீலாவாக மாறிப்போனாள்.

எப்படி எல்லாரும் மாற முடியும்?

'எதுவுமே மாறுகிறது' என்று சொல்கிறார்கள்.

உண்மை தானா?

Changing is permanent என்று sociology ரீச்சர் ராஜன் சொன்னது நினைவுக்கு வருகிறது.

பெயர்களும்..... முகங்களும்...... phinomenaவும்..... எல்லாமுமே நிரந்தரமில்லையா?

அப்ப, எனக்கு ரகு என்ற பெயர் சாத்தியமில்லையா? எனது முகம் மாறிவிட்டதா? கருத்தளவில் என்னை இந்த ஊர் 'மாறி விட்டான்' எனக் கருதுகிறதா?

சாதாரண ஒரு மனிதன் எப்படித் துரோகி என அழைக்கப்படுகிறான்?

ஒரு நாட்டின் ராசாவுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரத்தை யார் வழங்கியது?

அந்த ராசாவுக்கு யார் தங்க முடியைச் சூட்டினார்கள்?

துப்பாக்கியா?

துர்ப்பாக்கியமா?

எல்லாமே நன்மைக்குத்தானா?

எனது மக்கள் தனது எனக் கொண்டாடுவது உண்மையில் எதனை?

எனது மக்கள் தனதில்லை என உதறித் தள்ளுவது எதனை?

எனது மக்கள், நான் எப்படி இருந்தால்..... என்னை ஒரு பிரஜையாகவும்..... எப்படி இருந்தால் என்னை ஒரு துரோகியாகவும் கணக்கெடுப்பார்கள்?

எனது மக்கள் எப்பொழுது முட்டாள்கள் ஆகினார்கள்?

www.tamilarangam.net

எனது மக்கள் ஏன் இப்பொழுதும் பங்களிக்காமல் வெறும் பார்வையாளர்களாக இருக்கிறார்கள்?

மக்கள் பாவம்.

மன்னனின் ஆணையல்லவா?

யார் இங்கே மக்கள்?

யார் இங்கே மன்னன்?

* * * * * *

நான் இதை ஒருக்கா ஆராயத்தான் வேணும். என்ர சுசீலா எப்பிடி அவையளின்ர சுசீலாவாக மாறிப்போனாள்?

எட தம்பியளே உங்கட சுசீலாக்கா எண்டு சொல்லுறியளே அந்த சுசீலாக்காவை நீங்கள் பிறக்க முதலே சந்திச்சனான்.

அவான்ர ஒவ்வொரு அசைவும்.....

அவான்ர ஒவ்வொரு அங்கமும்.....

அவான்ர ஒவ்வொரு வண்டவாளமும்....

எனக்கு நல்லாத் தெரியும்.

உங்களுக்கு என்னண்டு புரிய வைக்கிறது எண்டு எனக்கு விளங்கேல்ல. உங்களுக்கு என்னத்துக்கெல்லாம் உரிமை கொண்டாடுறது...! என்னத்துக்கெல்லாம் S.M.G.யை AK47ஐத் தட்டிக் காட்டிறது எண்டு ஒரு இதில்லாமல் போட்டுது.

இப்ப நீங்கள் சுசீலாவைத் தூக்கிப் பிடிப்பியள். நாளைக்கு அவளே துரோகி எண்டு – அவளது அழகிய முகம் சிதைபடுகிற அளவுக்குச் சுட்டுத் தள்ளுவியள். நீங்களே உங்களுக்குள்ளேயே – மாறுவியள். நான் காதலிச்சதெல்லாம் அவளை!

அவளது அழகை!

அவளது sexஐ!

அவளது நளினத்தை!

அவளது அவளை!

அவளது பலவீனத்தை!

அவளது கலையை!

அவளது காதலை!

அவளது தெத்திப் பல்லை!

அவளது நொண்டி நடையை!

அவளது ஏக்கத்தை!

நான் அவளைக் காதலிக்கையில்... அல்லது காமுறுகையில்... அல்லது மையல் கொள்கையில்... அவள் என்ன idiologyஐ மனதினுள் வைத்திருந்தாள் எண்டு சத்தியமாய் எனக்குத் தெரியாது. தெரியாது... தெரியாது!

* * * * * *

ரகுநாதனின் சைக்கிள் சுரேஷை நோக்கிச் சென்றது. சுரேஷ், ரகுநாதனின் ஆத்ம நண்பன். மழை வரினும், வெயில் வரினும் குடை பிடிக்கும் நண்பன்.

ஆனால், அவனைச் சந்திக்க முடியாது. அவன், தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான். துருப்பிடித்த துப்பாக்கியிலும் இருப்பான். துப்பார்க்குத் துப்பாய தூயவன் அவன்.

* * * * * *

"மச்சான் எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை எண்டு வைச்சுக் கொண்டு கதைப்பம். இயக்கத்துக்குள்ளை சுசீலா என்னண்டு வந்தவள்?" கேட்டான் ரகு.

"இப்ப... என்ர தங்கச்சி சந்திரான்ர கதையை விடு. அது அந்தக் காலம், நீங்கள் விரும்பினியள்.... நானும் கண் சாடையாய் விட்டுப் பிடிச்சன்... இயக்கத்தில பெரியவளாய் இருந்தாள் – சயனைட் அடிச்சு பெரிய வீரி எண்ட பெயரோட செத்துப் போனாள். நீயும் அதை மதிச்சு... ஒரு தியாக சீலனாய் ஊருக்கை உலாத்திறாய். நீ செய்யிற வேலையோ... அல்லது சந்திராட்டை இருந்த உறுதியோ... என்னட்டை இல்லை. ஆனா சுசீலாட்டை என்ன இருக்கு எண்டு அவளை இயக்கத்தில சேர்த்தனியள்?" கேட்டான் ரகு.

"அவளை என்ர சுசீலா ஏண்டு சொல்லக் கூடாதோ?" கேட்டான் ரகு.

"அப்ப எனக்கெண்டு ஒண்டும் இல்லையோ?" கேட்டான் ரகு.

"எல்லாமே உங்களின்ர தானோ?" கேட்டான் ரகு.

www.tamilarangam.net

225 1/1, Cotta Road, Borella,
Colombo - 8, Sri Lanka.
Tel: 6861180
Fax: 94-1-687665

# KANTHA

***Newsletter of the Women's Desk of the Lawyers for Human Rights and Developm***

"தங்கச்சியும்... காதலியும்... சின்ராசுவும்... எல்லாத்தையும் நீங்களே வைச்சிருந்தால் எனக்கெண்டு என்ன இருக்கு?" கேட்டான் ரகு.

"சுரேஷ்! நீ எனக்கு ஒரே ஒரு உதவி செய்ய வேணும். நீ எல்லாத்தையும் வைச்சிரு! நீ பெரியவனாய் நல்லனாய் இரு! என்ர சுசீலாவை எனக்குத் தா - என்று கேக்கேல்லை... நானும் அவளுமாய் வாழ்ந்த வாழ்வைத் தா! அந்த நினைவைத் தா! அந்தப் பசுமையைத் தா! அவளே என்னை விட்டு வெகு தூரம் போய் விட்டாள். அவளை.... அவளது சுயத்தை என்னிடம் தா! சின்னப் பெடியள் எல்லாம் அவளை உரிமை கொண்டாடுவதும் துப்பாக்கிக் காவல் அரண்களுக்கூடாக அவள் சிரிப்பதும்... இதென்ன கேவலம்! please சுரேஷ் ஏதாவது பண்ணு! அவளை என்னட்டைத் தர மாட்டாயா? ஒரு நண்பன் என்ற முறையில் என்ர தங்கச்சியையே நான் தாரை வார்த்துக் குடுத்தன் உன்னிட்டை! எனக்கு அந்த நினைவு வேணும். நல்லூர் மஞ்சமும்... ஒழுங்கை வளைவுகளும் அவளது நீலாம்பரியும் எனக்கு வேணும்." கெஞ்சினான் ரகு.

இவ்வளவு நேரமும் சுரேஷ் நகங்களைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தான். ஓமோ - இல்லையோ? சரியோ - பிழையோ?
துரோகியோ - துரோகி இல்லையோ?
எங்கட ஆளோ - மாற்றாளோ?
லாபமோ - நட்டமோ?
பயனோ - பயனில்லையோ?
தட்டுவமோ - விடுவமோ?
மேல்சாதியோ - கீழ்சாதியோ?
நல்லதோ - கெட்டதோ?

இந்த மாதிரியான கேள்விகளுக்கு மறுமொழியாக எதாவது ஒன்றைத்தான், சொல்ல வேணும் கட்டாயமாக! என்பது போன்ற இயக்கக் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்தவன் சுரேஷ்!

அவனுக்கு விஷயம் விளங்கி விட்டது என்பதில் ரகு சந்தோஷப்பட்டான்.

"சுரேஷ் தயவு செய்! மேற் கூறிய கேள்விகளுக்கு விடையாகக் கட்டாயம் ஒன்றைத்தான் தெரிவு செய்ய வேணும் என்ற கட்டாய நிபந்தனை இல்லை. காலம் தான் விடையை நிர்ணயிக்கிறது. நாம் ஒரு காலத்தில் சரியென்று நம்பியது நாளைக்குப் பிழையாக மாறும்." மனதிற்குள் ரகு நினைத்துக் கொண்டான், சொல்லவில்லை.

சுரேஷ் மிக ஆறுதலாக, மிக அமைதியாகச் சொன்னான். "ரகு, சுசீலா எப்பவோ இயக்கத்திற்குள்ளை வந்திட்டாள். இந்த மாதிரி ரகசியங்களை நாங்கள் வெளியிலை சொல்லுறேல்லை. எண்டாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அருகில் வந்தால்....

இந்த வருட ஆரம்பத்தில் ஒரு புதிய சட்டம் நோர்வேயில் அமுலுக்கு வந்தது. அதன்படி, ஒருவர் இன்னொருவருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவர் எனக் கருதப் பட்டால், அவரைப் பாதிக்கப்படக் கூடிய நபரின் பிரதேசத்தில் உலவாது தடுக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

இந்தப் புதிய சட்டமூலம் அமுலான முதலில் அகப்பட்டவர் ஒரு ஆடவர். அவர் தனது முன்னாள் மனைவியைக் கொலை செய்து விடுவேன் எனப் பல தடவை எச்சரித்தாராம். எனவே அவரால் அவரது முன்னாள் மனைவிக்கு ஆபத்து ஏற்படக் கூடாது எனக் கருதிய நீதிமன்றம், முன்னாள் மனைவியின் வீடு உள்ள நூறு மீற்றர் பிரதேசத்தினுள் செல்லக் கூடாது என்று இந்த மிரட்டற் காரருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. இருவருக்கும் பிறந்த குழந்தைகள் தாயுடனேயே உள்ளனர். 35 வயதான இந்தத் தந்தை எதிர்கொள்ளும் மிகப் பெரிய சிக்கல் என்னவெனில் அவரால் தான் வசிக்கும் வீதியின் ஒரு பக்கத்துக்குப் போக முடியாது என்பதே. ஏனெனில் அவர் வசிக்கும் அதே வீதியில்தான் அவரது முன்னாள் மனைவி வசிக்கிறார்.

மனு

நான் உன்ர நன்மைக்காகச் சொல்லுறன். அவளுக்கு ஒரு பிடிப்புத் தேவைப்பட்டிருக்கு. அவள் உன்னைக் காதலிக்கிறாள். ஏனோ உங்களால அது முடியாமப் போட்டுது. அண்டைக்கு நீ குடிச்சிட்டு அவையின்ர வீட்டு வாசலிலை நிண்டு அட்டகாசம் பண்ணின அண்டு தான்... அதுக்கடுத்த நாள் அவள் என்னைச் சந்திச்சாள். "நான் இயக்கத்திற்கு ஆதரவாய் இருக்கப் போறன்" என்று சொன்னாள். நாங்களும் அவளை அரவணைச்சம். அவளில கன ஆக்களுக்கு நல்ல அபிப்பிராயம். அண்டைக்கு உங்கட கலியாணப் பேச்சு நடந்த அண்டைக்கு உன்னை அவள் பேசிப்போட்டாள் எண்டு இரண்டு நாளாய் முகம் வீங்க வீங்க அழுது கொண்டிருந்தாள். அந்த அழுகையைப் பொறுக்க முடியாமல் தான் பெடியள் வந்து உன்னிட்டைச் சொன்னவங்கள் அவளின்ர விஷயத்தில தலையிடாதை எண்டு.

ரகு, நான் இப்பவும் அடிச்சுச் சொல்லுறன். அவள் உன்ர சுசீலா தான். இயக்கம் அவளுக்கு எந்தக் கட்டுப்பாடும் வைக்கேல்லை. அவளது சுதந்திரமும் அவளது முடிவும் அவளுக்கே உரியது.

அவள் நல்லாக் குழம்பியிருக்கிறாள். அவள் ஏன் உன்னைக் கலியாணம் கட்ட மறுத்தாள் என்பது எனக்கு விளங்கவேயில்லை.

என்னவோ? நீயாச்சு அவளாச்சு. இனி இயக்கமோ பெடியளோ இதில தலையிடாமப் பாதுகாக்கிறது என்ர பொறுப்பு. இதை விட வேற ஒண்டும் என்னால செய்ய ஏலாது." என்றான் சுரேஷ்.

"Thank you சுரேஷ்" என்று விட்டு வெளியேறினான் ரகு.

உலகமே புதிர்கள் நிறைந்ததாகத்தான் இருக்கிறது.

புதிருக்கு விடை தேட வேணும்.

விடை தேடுவதற்குத் தன்னைத் தயார் பண்ணவேணும்.

முதலாவது நடவடிக்கை:

நான் இனிமேல் குடிக்க மாட்டேன்.

இது சத்தியம்

சத்தியம்

சத்தியம்

என்று மனதினுள் உறுதி எடுத்தான் ரகுநாதன்.

(வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செல்வி சிறையில்

ஓவியம்: கிருஷ்ணராஜா

நன்றி: தாகம்



Suvadugal, A Tamil monthly from Norway Issue nr 65, March'95

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்